இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 209 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி09 வெள்ளிக்கிழமை 23.06.2017

## சட்டமா அதிபர் விவகாரத்தால் சபையில் சர்ச்சை

கொழும்பு, ஜீன் 23

குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை திருத்தச் சட்டவரைவை மீளப்பெற்றுக்கொள்வதாகச் சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்தையடுத்து, இந்தச் சட்டவரைவுக்கு எதிரான மனுவை உயர் >>25

## வடக்கு முதல்வர் மீது மேலதிக நடவடிக்கை

வலியுறுத்துகிறார் பொன்சேகா



கொழும்பு, ஜீன்23

இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு மக்களைத் தூண்டிவிட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் தாண்டிச் சென்று வடக்குமுதல்வர்மீது மேலதிக >>23

## நீதிக்கான அணியின் கோரிக்கையை நிராகரித்தார் விக்கி

யாழ்ப்பாணம், ஜீன் 23

வடக்கு மாகாண சபையின் நீதிக்கான அணியின் கோரிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிராகரித்தார். முதலமைச்சரின் அமைச்சு உட்பட 5 அமைச்சுக்கள் மீதும் சட்டபூர்வமான - சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நீதிக்கான அணி வலியுறுத்தியிருந்த >>24

## நீதிச் செயன்முறையில் புன்னாட்டு நீதிபதிகள் பங்களிப்பு அவசியம்

உலகத் தமிழர் பேரவை வலியுறுத்தல்

கொழும்பு, ஜீன்23

இலங்கையின் நிலைமாறுகால நீதிச் செயன்முறையில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு அவசியமென உலகத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. >>24

# அடுத்த முறையும் விக்கி சி.எம்மாக ஈ.பி.ஆர்.எல்.எவ் எதிர்ப்பு

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.திட்டவட்டமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜீன் 23

வடக்கு மாகாண சபைக்கு அடுத்த முறையும் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரனை நிறுத்தினால் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனே மேற்படி கருத்தை வெளியிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் >>25

## நாகம் தீண்டும்போது மனித உரிமை பற்றி பேசிப் பயனில்லை

பாகிஸ்தானில் கூறினார் மகிந்த



லாகூர், ஜீன் 23

நாகம் தீண்டும்போது மனித உரிமைகளை மீறியேனும் உயிர்களைப் பாதுகாக்க வேண்டும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் இந்த நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என தெரிவித்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சஸ, சனநாயகத்தின் பரம எதிரி பயங்கரவாதம் என்பதை மறந்து விடவேண்டாம் எனவும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானின் பாதுகாப்புக் >>25

## ஆளுநரின் ஒப்புதலுக்காக இரண்டு நியதிச் சட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜீன் 23

வடக்கு மாகாண சபையால் இரு நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வடக்கு மாகாண ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்துக்கான தங்க நகை அடகு பிடிப்போருக்கான நியதிச் சட்டம், குறைநிரப்பு ஏற்பாடுகள் மற்றும் ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் என்பறின் >>25

## கடந்த 8 மாதங்களாக ரூ.144 மில். கிடப்பில்!

வடக்கு அவைத்தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜீன் 23

வடக்கு மாகாண ஆளுநரின் கட்டுப்பாட்டில் இருந்த மாகாண அமைச்சுக்களின் 144 மில்லியன் ரூபா நிதி திரும்பக்கிடைத்து 8 மாதங்கள் கடந்துள்ளன. இதுவரை அந்த நிதி பயன்படுத்தப்படாதிருக்கின்றது. >>25



## குருகுலராசா, ஐங்கரநேசன் இணையத்தில் அமைச்சர்கள்

யாழ்ப்பாணம், ஜீன் 23

வடக்கு மாகாண சபையின் கல்வி மற்றும் விவசாய அமைச்சர்களாகப் பதவி வகித்த த.குருகுலராசா மற்றும் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் அவர்களது பதவிகளிலிருந்து விலகியுள்ள நிலையிலும், வடக்கு >>25

## தமக்கான ஆதரவு அணியில் சிலரிடமே சுயவிவரங்களை கோரியுள்ளார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜீன் 23

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக கையெழுத்திட்டவர்களில் குறிப்பிட்ட சிலரிடம் மாத்திரமே, வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சுயவிவரக் கோவையைக் கோரியுள்ளார் என்று தெரியவருகின்றது. >>25

## ஒன்பது லட்சம் பேர் உணவுக்காக நெருக்கடிக்குள் சிக்கும் அபாயம்

கடும் வறட்சி: கனமழையால் விவசாய உற்பத்தி பாதிப்பு

அரிசி உற்பத்தி 40 சதவீதத்தால் வீழ்ச்சியடையுமென ஐ.நா. எச்சரிக்கை

கொழும்பு, ஜீன் 23

கடும் வறட்சி, அதன் பின் ஏற்பட்ட அடைமழை, வெள்ளத்தால் இலங்கையின் விவசாய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இதன் காரணமாக 9 இலட்சம் பேர் உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையிலுள்ளனர் என்றும் ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது. அத்துடன், >>25

## 17 இந்திய மீனவர்கள் நேற்றும் கைது

யாழ். ஜீன் 23

யாழ்ப்பாணம், நாகர்கோவில் கடற்பரப்புக்குள் அத்துமீறி 2 படகுகளில் தொழிலில் ஈடுபட்டனர் என்ற >>25

மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய

## தெரிவுக் குழு விசாரணையை எதிர்கொள்வதற்குத் தயார்

அமைச்சர் டெனீஸ்வரன் உறுதி

யாழ்ப்பாணம், ஜீன் 23

"சுயாதீனமான - சட்டவலுவுள்ள - மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய தெரிவுக்குழு விசாரணைக்கே முகம் கொடுக்கத் தயாராகவுள்ளேன். இதனை உள்ளடக்கி விசாரணைக் குழு அமைக்கப்பட்டதும் எனது விடுப்புக் கடிதத்தை, தேவை ஏற்படின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பதவி >>25

## மங்கள சமரவீரவை ஓரம் கட்டியது அரசு

கொழும்பு, ஜீன் 23

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதற்கான அரச பொறிமுறைக் குழுவில் இணைத்துக் கொள்ளப்படாமல் முன்னாள் அயலுறவு அமைச்சர் >>24

## பிரதி நிதியமைச்சரை பதவி துறக்குமாறு ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜீன் 23

நாடாளுமன்றக் கணக்குக் குழுவின் தலைவராகவும் நிதி பிரதி அமைச்சராகவும் இருக்கும் லசந்த அழகியவண்ண இரண்டில் ஒரு பதவியைத் >>24

## சைட்டம் விவாதம் நடக்காமலேயே ஒத்திவைக்கப்பட்டது நாடாளுமன்று

அரசின் திட்டமிட்ட சதியெனக் கூட்டு எதிரணி விசனம்

கொழும்பு, ஜீன் 23

சைட்டத்துக்கு எதிராகப் போராடிய பல்கலைக்கழக மாணவர்கள்மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் மகிந்த ஆதரவு அணியினர் கொண்டுவரவிருந்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை. >>24



Vardhana சஹாய

DFCC வங்கியின் வர்தன சஹாய கடனைப் பெற்று உங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யுங்கள்

- வியாபாரமொன்றை ஆரம்பித்தல்
- வியாபாரத்தை விரிவுபடுத்தல், புதிய இடத்திற்கு மாற்றுதல், வியாபாரத்திற்கு அவசியமான இயந்திர வகைகளை கொள்வனவு செய்தல்
- தொழிற்படு மூலதன வசதி
- பிணை முறிகளைப் பெறும் வசதி

கடன் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக காப்புறுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000

www.dfcc.lk

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு

## 62 வயது நபருக்கு சாவுத் தண்டனை

கொழும்பு.ஜூன் 23

மீரிகமை கல்எலியப் பிரதேசத்தில் நபர் ஒருவரைக் கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் தொடர்பில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒருவருக்கு கம்பஹா மேல் நீதிமன்றம் நேற்று சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. கல்எலிய, தம்பில்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதான மொஹமட் ராசின் முன்னவ்வர் என்பவருக்கே சாவுத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி நடந்த கொலைச் சம்பவம் தொடர்பாக 6 பேருக்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைகளின் இடையில் இரண்டு பேர் உயிரிழந்தனர். ஏனைய மூன்று பேருக்கும் எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாத காரணத்தால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## தயா மாஸ்டரின்' வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

வவுனியா, ஜூன் 23

வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்றுவரும் முன்னாள் விடுதலைப் புலிகளின் ஊடகப்பேச்சாளர் தயா மாஸ்டர் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

போர் இடம்பெற்றபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்த பொதுமக்களை அரச படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குப் பயணம் செய்தமைக்கு தடை செய்ததையடுத்து அவருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ-10)

## மருத்துவர்களின் வேலைநிறுத்தம் நீடிப்பு

கொழும்பு.ஜூன் 23

சைடம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று முதல் முன்னெடுத்துள்ள போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு நேற்று நண்பகல் ஒன்றுகூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதற்கமைவாக வேலைநிறுத்தம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். வேலைநிறுத்தத்தை நிறுத்துவது தொடர்பில், நிலமையைக் கருத்தில் கொண்டு பின்னர் தீர்மானிக்கப்படும் என்று சங்கத்தின் செயலாளர் நவீன் டி. சொய்ஸா தெரிவித்துள்ளார். (ஐ)

# பன்னாட்டு விசாரணையை ஐ.நா.வில் வலியுறுத்தினார் ஈழத் தமிழரான இளைஞர்

கொழும்பு, ஜன23

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பன்னாட்டு விசாரணைக்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அழுத்தம் கொடுக்க வேண்டுமென ஐ.நா. கூட்டத்தொடரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த 17 வயதுடைய சுந்தரராஜன் பிரெட்ரிக் வின்ஸ்லோ என்ற ஈழத்து இளைஞன் இதனை வலியுறுத்தியுள்ளார். நீதியை நிலைநாட்டுவதற்கான உறுதிப்பாடு இலங்கை அரசிடம் இல்லையெனக் குறிப்பிட்ட குறித்த இளைஞர், கடந்த 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 301 தீர்மானத்தின் பிரகாரம் பொறுப்புக்கூறலுக்கான கடமைகளை இலங்கை முன்னெடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். மூன்று தசாப்தகால போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 8 வருடங்கள் கழிந்துள்ள போதும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு இன்றும் தீர்வு காணப்படாமல், அவர்களுடைய உறவினர்கள் இன்னும் போராடி வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டிய அவர், இது குறித்து பொலிஸ், மனித உரிமைகள் ஆணைக்குழு முதலானவற்றில் முறைப்பாடு களைப் பதிவுசெய்தும் பலன் கிடைக்கவில்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.




இதேவேளை, தமிழ் மக்களுக்கு எதிராகத் துன்புறுத்தல்கள் போருக்குப் பின்னரும் தொடர்கின்றன எனச் சுட்டிக்காட்டிய இளைஞர், பன்னாட்டு விசாரணைப் பொறிமுறை மாத்திரமே நீதியை பெற்றுக்கொடுக்கும் என்றும் வலியுறுத்தினார். (த-ய)

## இலங்கைப் பெண்ணின் மனு ஆஸி. நீதிமன்றில் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 23

கணவரைக் கொலை செய்த குற்றச்சாட்டுக்கு எதிராக இலங்கையைச் சேர்ந்த மருத்துவர் தாக்கல் செய்த மனுவை ஆஸ்திரேலிய நீதிமன்று நேற்று நிராகரித்தது.

தனது கணவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் இலங்கையில் பிறந்த பெண் மருத்துவரான சாமரி லியனகே என்பவருக்கு 2014 ஆம் ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. கடந்த மார்ச் மாதம் விடுமுறை அடிப்படையில் அவருக்கு விடுதலை வழங்கப்பட்டது. அவர் தனது சிறைத்தண் டனை மற்றும் குற்றச்சாட்டுக்கு எதிராக அவர் தாக்கல் செய்த மனுவை மூன்று நீதிபதிகள் கொண்ட ஆஸ்திரேலிய நீதிமன்றம் நிராகரித்தது. அந்தப் பெண் "கணவர் என்னை சுமார் 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பாலியல் துன்புறுத்தல்கள் உட்பட பல்வேறு வழிகளில் சித்திரவதை செய்தார் அதனால் அவரைச் சுத்தியலால் தாக்கி கொலை செய்தேன்" என்று விசாரணையில் தெரிவித்திருந்தார். தான் விடுதலை செய்யப்பட்டால் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சத்தை வெளியிட்டு அவரால் மனு கொடுக்கப்பட்டது. அந்த மனுவே நிராகரிக்கப்பட்டது.

இதனால் அவருக்கு விதிக்கப்பட்ட 5 வருட சிறைத்தண்டனையின் மேலதிக காலத்துக்காக அவர் சிறை செல்லவேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)



## விபத்தில் சிக்கிய சிறுவன் சாவு நீதி கோரி மக்கள் போராட்டம்

கிளிநொச்சி, ஜூன் 23

விபத்துக்குள்ளான மாணவன் ஒருவன் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தான். விபத்தை ஏற்படுத்தியவரை இதுவரை பொலிஸார் கைது செய்யவில்லை என்று தெரிவித்து பிரதேச மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முழங்காவில், நாகபடுவானைச் சேர்ந்த 11 வயதான அ.அபினேஸ் என்ற சிறுவனே கடந்த 17ஆம் திகதி விபத்துக்குள்ளானான். முழங்காவில் தேவாலய திருவிழாவுக்குச் சென்று திரும்பிய போது கார் மோதி விபத்து ஏற்பட்டது.

படுகாயமடைந்த சிறுவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். சிகிச்சை பயனின்றி அவன் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்தான்.

விபத்து நடந்த இடத்தில் இருந்து காரின் இலக்கத்தகடு பொலிஸாரிடம் மக்களால் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் விபத்துத் தொடர்பில் ஆரம்ப விசாரணைகளைக் கூட மேற்கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டிய பிரதேச மக்கள் நேற்று மதியம் முழங்காவில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். மன்னார், யாழ்ப்பாணம் பிரதான வீதியை மறித்து அவர்கள் போராட்டம் நடத்தினர்.

சிறுவனின் உயிரிழப்புக்கு நீதி கோரியும், விபத்தை ஏற்படுத்தியவரைக் கைது செய்யக் கோரியும், சட்டத்தை நடமுறைப்படுத்தத் தவறிய பொலிஸாரைக் கண்டித்தும் போராட்டம் நடத்தப்பட்டது.

பூநகரிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்துக்கு வந்து மக்களுடன் பேச்சில் ஈடுபட்டார்.

வாகன இலக்கத் தகட்டின் அடிப்படையில் நீண்ட தேடுதலின் பின்னர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் தற்போது ஒரு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று அவர் மக்களிடம் தெரிவித்தார்.

விசாரணைக்கு நீண்ட காலம் எடுத்தமை தொடர்பிலும், தேவாலய உற்சவத்தின்போது பொலிஸ் பாதுகாப்புக் கோரியபோது பொலிஸார் கடமைக்கு வராதிருந்தமை தொடர்பிலும் மக்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

இந்த விடயங்கள் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்யுமாறும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். மக்களால் வழங்கப்பட்ட இலக்கத்தகடு பொலிஸ் வசமிருப்பதையும் அவர் காண்பித்தார். உரிய நீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதை அடுத்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

"விபத்தை ஏற்படுத்தித் தப்பிச் செல்ல முற்பட்ட காரை துரத்தி சென்றோம். எம்மால் பிடிக்க முடியவில்லை. உடனடியாக பொலிஸாருக்கு தகவலை வழங்கினோம். பொலிஸார் விரைந்து செயற்பட்டிருந்தால் உடனடியாக சாரதியை கைது செய்திருக்க முடியும். அவ்வாறு கைது செய்திருந்தால் அவர் எந்த நிலையில் இருந்திருப்பார் என்பதை அறிந்திருக்கவும் முடியும். சிறுவனை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கு பொறுப்பு கூற வேண்டியது பொலிஸாரே. இவ்வாறான ஒரு சம்பவம் இனியும் நடைபெறாதவாறு பொலிஸார் செயற்பட வேண்டும்." என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்தவாகன இலக்கத்தகட்டின் உரிமையாளர் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக் கப்பட்டது. (ஐ-10, 35)

## 100 நாள்களைக் கடந்தது மருதங்கேணி போராட்டம்




யாழ்ப்பாணம், ஜூன் 23

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி யாழ்ப்பாணம், மருதங்கேணியில் நடைபெற்றுவரும் போராட்டம் நேற்றுடன் 100 நாள்களைக் கடந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் உரிய தீர்வு வழங்கப்படாத நிலையில் அவர்களின் போராட்டங்கள் மாதக் கணக்காக நீண்டுள்ளன.

யாழ்ப்பாணம், மருதங்கேணியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றுடன் 100 நாள்களைக் கடந்தது. தகரக் கொட்டகை அமைத்து இரவு, பகலாகப் போராட்டம் நடத்தி வரும் மக்கள் தமது கோரிக்கைக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்திலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டங்கள் நடத்துகின்றனர். அவர்களின் கோரிக்கை தொடர்பில் அரசு தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றது. (ற)

# பட்டதாரிகளின் விபரீத முடிவுக்கு கொழும்பு அரசே முழுப்பொறுப்பு

### மட்டக்களப்பு மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகள் எச்சரிக்கை

மட்டக்களப்பு,ஜூன் 23

வேலை தேடும் பட்டதாரிகளில் எவராவது விபரீதமான முடிவை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பை அரசும், அரசியல்வாதிகளுமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.



வேலை தேடும் பட்டதாரிகள் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக மேற்கொண்டு வரும் சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று 122 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

"நாங்கள் மேற்கொண்டு வரும் தொழில் உரிமைக்கான போராட்டம் பல்வேறு அழுத்தங்களுக்கும் மற்றும் மன உளைச்சலுக்கும் மத்தியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில் எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான எந்தவித ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளையும் கொழும்பு அரசு, மாகாண அரசு இது வரையில் ஆரம்பிக்கவில்லை" - என்று அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# ஆசிரியர் நியமனங்களில் இவ்வருடம் அதிரடி மாற்றம்

## அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 23
ஆசிரியர் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பான புதிய கொள்கையை இந்த வருடத்தில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலநறுவை, சுங்காவில முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடத்தை மாணவர்களுக்கு உரித்தளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
புதிய கொள்கைக்கமைய எந்தவொரு பாடசாலையிலும் ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்க முடியாது. மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்கள் வெற்றிடம் நிலவும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற வேண்டும். இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படும். நாட்டிலுள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைச் சீராக வேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சகல மாணவர்களுக்கும் கல்விக்கான அனைத்துச் சலுகைகளும் கிடைக்கப்பெற வேண்டும். நாட்டிலுள்ள அனைத்து இனத்தவர்களினதும் பிரச்சினைகளைத் தீர்த்தல், வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைவருக்கும் ஒரே வகையில் சேவையாற்றுதல் ஆகியவை அரச தலைவர் என்ற வகையில் எனது பொறுப்பாகும். என்றார்.

நிகழ்வில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஷல ஜயரத்ன, மாகாண அமைச்சர் சம்பத் ஸ்ரீ நிலந்த, பொலன்னறுவை மாவட்டச் செயலர் ரஞ்சித் ஆரியரத்ன உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-10)





## மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பால் வெளிநோயாளர்கள் நேற்று பெரும் அவதி

யாழ்ப்பாணம், ஜூன் 23
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தால் மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவுகளுக்குச் சிகிச்சை பெறச் சென்ற நோயாளிகள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

மருத்துவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பில் அறிந்திராத மக்கள் நீண்ட தூரங்களில் இருந்து அதிகாலையிலேயே மருத்துவமனைகளுக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

மாலபேயிலுள்ள "சைட்டம்" தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மருத்துவபீட மாணவச் செயற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார் மீது தாக்குதல் மேற்கொண்டமையைக் கண்டித்து இந்த வேலைநிறுத்தப் போராட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

வடக்கு மாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அதேவேளை மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் செயற்படாத போதும், டெங்கு சிகிச்சை பிரிவு, சிறுநீரக சிகிச்சை பிரிவு, அவசர விபத்து பிரிவு, புற்றுநோய் மருத்துவப் பிரிவு மற்றும் சிறுவர் மருத்துவமனைகளில் சேவைகள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கறுப்புத் துணியால் வாயைக் கட்டி சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்

வவுனியா, ஜூன் 23
வவுனியாவில் நடத்தப்படும் சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் நேற்றுடன் 50 ஆவது நாளைக் கடந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்பு நிற ஆடையணிந்தும், கறுப்பு துணியை வாயில் கட்டியவாறு நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.



வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் கோரி, கடந்த மே மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் வவுனியா பிராந்திய வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். "வெயில் மழை பாராது ஊதியம் இல்லாமல் கடமையாற்றிய எங்களுக்கு நிரந்தர நியமனம் இல்லையா? , வடமாகாண சபையே லஞ்ச ஊழலை கைவிடு, தொண்டர்களுக்கு நியாயமான முறையில் நியமனத்தை தா, வடமாகாண சபையே அரசியல் சிபாரிசுக்கு முன்னுரிமை வழங்காதே, போர்க் காலங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் சிரமம் பாராது அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய எமக்கு நிரந்தர நியமனம் இல்லையா? என பல்வேறு வாசகங்களை தாங்கிய வண்ணம் அவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"போர்க்காலத்திலிருந்து தற்போது வரை எதுவித வேதனமும் இன்றி கடமையாற்றும் எமக்கு கல்வி தகமையைக் கவனத்தில் எடுத்து அரச வேலைவாய்ப்பை வழங்க பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் மூலம் அல்லது பொறுப்பு வாய்ந்த அமைச்சர் எழுத்து மூலம் எமக்கு நிரந்தர அரச வேலை வாய்ப்பு வழங்க உத்தரவாதம் வழங்கும் வரை, எமது போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார தொண்டர்கள் தெரிவித்தனர். (ஐ-10, 402)

## மனுவை மீளப்பெற்றார் ஞானசார தேரர்

கொழும்பு, ஜூன் 23
உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மீளப் பெற்றார்.

பொலிஸார் தன்னைக் கைது செய்ய தயாராகின்றனர் என்றும் அதைத் தவிர்க்கும் வகையிலான உத்தரவைப் பிறப்பிக்குமாறும் கோரி, ஞானசார தேரர், தனது சட்டத்தரணி ஊடாக இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். நேற்று அந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டாளரான தேரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி இந்த வழக்கைத் தொடர்ந்தும் நடத்த வேண்டிய தேவை இல்லை எனக் குறிப்பிட்டார். எனவே கதை மீளப் பெற்றுக் கொள்ள அனுமதியளிக்குமாறு அவர் கோரினார். விடயங்களைக் கருத்தில் கொண்ட நீதியரசர்கள் மனுவை மீளப் பெற அனுமதித்ததோடு, பின்னர் தள்ளுபடி செய்து உத்தர விட்டனர். பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சரணடைந்த ஞானசார தேரர், பிணையில் விடுவிக் கப்பட்டார். சில மணி நேரங்களிலேயே பிறிதொரு குற்றச்சாட்டு தொடர்பில் அவர் மீளவும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதனையடுத்து அவருக்கு மீண்டும் பிணை வழங்கப்பட்டது. (ஐ-10)

## ஆசன ஒழுங்குகள் சபையில் மாறின!

யாழ்ப்பாணம், ஜூன் 23
வடக்கு மாகாண சபை அமர்வில் ஆசன ஒழுங்குகளில் நேற்று மாற்றம் செய்யப்பட்டன. வடக்கு மாகாண சபையின் 97 ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

அந்த அமர்வில் வடக்கு மாகாண முதலமைச்சரின் ஆசனத்துக்கு அடுத்ததாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சருக்கு ஆசனம் வழங்கப்பட்டது. அடுத்தடுத்த ஆசனங்களில் வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சருக்கும், வடக்கு மாகாணப் பிரதி அவைத்தலைவருக்கும் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.



இந்த இரு ஆசனத் தொகுதிக்கு அடுத்ததாக முன்னாள் கல்வி மற்றும் விவசாய அமைச்சர்களுக்கு ஆசனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

முன்னதாக, முதலமைச்சருக்கு அடுத்தப்படியாக, வடக்குமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராசா, சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், போக்குவரத்து அமைச்சர், பா.டெனீஸ்வரன் என ஆசன ஒழுங்கமைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வடமாகாண அமைச்சர்கள் இருவர் ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியிருந்த நிலையில், அவர்களைப் பதவியைத் தியாகம் செய்யுமாறு முதலமைச்சர் கோரியிருந்தார். அதையடுத்து வடக்குமாகாண சபையில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டிருந்ததோடு, அமைச்சர்கள் இருவரும் தமது பதவிகளில் இருந்து விலகினர்.

வடக்கு மாகாண அரசியல் நிலமை அமைதியடைந்து நேற்றைய அமர்வு சுமுகமான முறையில் இடம்பெற்றது. (ஐ-8)

## முதலமைச்சர் நிதியத்துக்கு அங்கீகாரம் உயர் நீதிமன்றை நாடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 23
வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்துக்கு கொழும்பு அரசு அங்கீகாரம் வழங்காததன் மூலம் எமக்குரிய அடிப்படை உரிமையை அரசு பறித்துள்ளது. நாம் இதனைப் பெறுவதற்கு உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் 97 ஆவது அமர்வு வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. குறித்த அமர்வில் குறைநிரப்பு ஏற்பாடுகள் மற்றும் ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் தொடர்பான குழுநிலை விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் கருத்துக்களை முன்வைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்துக்கு அரசு அங்கீகாரம் வழங்காத நிலையில் சட்டமா அதிபர் திணைக்களமும் அரசும் அதனை பந்தாடிக்கொண்டிருக்கின்றன. எனவே இனியும் பார்த்துக் கொண்டு இருக்காது உடனடியாக உயர் நீதிமன்றத்தை நாம் நாட வேண்டும். எமக்கான உரிமையை நாம் நீதிமன்றின் ஊடாக வேனும் பெறுவோம். ஆகவே வடக்கு மாகாண முதலமைச்சர் உச்ச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். - என்றார். இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண முதலமைச்சர், "இது தொடர்பில் நான் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் அண்மையில் கதைத்துள்ளேன். ஒரு வாரத்துக்குள் இதற்கான தீர்வு கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கின்றேன். அதற்காக நீதிமன்றை இப்போது நாட வேண்டிய தேவை இருக்காது என நினைக்கின்றேன்." என்றார். (ஐ-8)

# ஒளி பாய்ச்சி மீன்பிடித்த மீனவர்கள் கைதாகினர்

### 3 படகுகளும் பறிமுதல்

யாழ்ப்பாணம்,ஜூன் 23
நாகர்கோவில் கடற்பரப்பில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை மீறி மீன்பிடியில் ஈடுபட்ட மன்னார் மாவட்ட மீனவர்கள் 9 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அவர்களது 3 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. நாகர்கோவில் கடற்பரப்பில் வெளிமாட்ட மீனவர்களுக்கு கரையிலிருந்து 5 கிலோ மீற்றருக்கு அப்பாலும், பகல் நேரத்திலும் மட்டுமே மீன்பிடியில் ஈடுபடுவதற்கு மீன்பிடி அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் 3 படகுகளில் அனுமதிக்கப்பட்ட எல்லையை மீறி மின்னொளியில் நேற்று முன்தினம் மீன்பிடியில் ஈடுபட்டனர். அதை அவதானித்த நாகரே்கோவில் மீனவர்கள் படகுகளைச் சுற்றி வளைத்து மீனவர்களையும் கைது செய்து நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைத்தனர். பருத்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, அங்கு விரைந்த பொலிஸார் மற்றும் கடற்படையினர் மீனவர்களுடன் சமரசப் பேச்சில் நீண்ட நேரமாக ஈடுபட்டனர். எனினும் மீனவர்கள் பொலிஸாரிடம் கைது செய்யப்பட்ட மீனவர்களை ஒப்படைக்க மறுப்புத் தெரிவித்தனர். அதனையடுத்து நாகர்கோவில் கடற்றொழில் சங்கத்தினர் மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைத்தனர். மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நீரியல் வளத்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.
அதேவேளை வெளிமாவட்ட மீனவர்கள் இவ்வாறு அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதால் தமது கரைவலைத் தொழில் பாதிப்படைவதாக நாகர்கோவில் மீனவர்கள் தெரிவித்தனர்.
(ஐ-26)

# உமையாள்புரம் அம்மன் ஆலயத்தில் முதியவர் மீது நேற்றிரவு வாள்வெட்டு

### திருப்பணிக்குச் சேகரித்த நிதியை கொள்ளையடித்துச் சென்றது கும்பல்

கிளிநொச்சி, ஜூன் 23
கிளிநொச்சி ஏ-9 சாலையில் அமைந்துள்ள உமையாள் புரம் அம்மன் ஆலயத்துக்கான திருப்பணி நிதியை சேகரித்து வந்தவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு, அவரிடமிருந்த பணத்தையும் ஆலய உண்டியலிருந்த பணத்தையும் கும்பலொன்று நேற்றிரவு கொள்ளையிட்டுச் சென்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வாள் வெட்டுக்குள்ளாகியவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இராமநாதபுரம், வட்டக்கச்சியைச் சேர்ந்த ஏ.பரமலிங்கம் (வயது - 64) என்ற முதியவரே வாள் வெட்டுக்கு இலக்கானார்.
"கிளிநொச்சி, பரந்தன் ஏ-9 வீதியில் உள்ள உமையாள் புரம் அம்மன் ஆலயத்தின் திருப்பணியை மேற்கொண்டு வந்த முதியவர் ஆலய மண்டபத்தில் நேற்றிரவு படுத்துறங்கியுள்ளார். இரவு 9. 30 மணியளவில் 4 மோட்டார் சைக்கிளில் ஆலயத்துக்கு வந்த கும்பல் முதியவரின் தலையில் வாளால் வெட்டியுள்ளது. அத்துடன், கும்பல் அவரைக் கடுமையாகத் தாக்கியுமுள்ளது. கும்பலைச் சேர்ந்த அனைவரும் முகத்தை மறைத்தவாறு வந்துள்ளனர்.
அவரிடம் இருந்த திருப்பணிக்குரிய பணத்தையும் ஆலய உண்டியல் பணத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு அந்தக் கும்பல் அங்கிருந்து தப்பித்தது.
முதியவர் எழுப்பிய அவலக் குரலையடுத்து அங்கு சென்றவர்கள் அவரை நோயாளர் காவு வண்டி மூலம் வைத்தியசாலையில் சேர்த்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-101)

# வடக்கு முறையற்ற நியமனங்கள்; விசாரணை குழுவுக்கு காலநீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23
வடக்கு மாகாணத்தில் வழங்கப்பட்ட முறையற்ற நியமனங்கள் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவின் கால எல்லை இந்த மாதம் 30ஆம் திகதிவரை நீடிக்கப்படுகின்றது என்று வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் 97ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. அதிலேயே அவைத் தலைவர் இதனை அறிவித்தார்.
"வடக்கு மாகாணத்தில் வழங்கப்பட்ட முறையற்ற நியமனங்கள் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் கால எல்லை கடந்த நவம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டி ருந்தது. எனினும் அந்தக் குழு தொடர்ந்து தனது விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. விசாரணைக் குழுவினர் தமது விசாரணை அறிக்கையை ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிப்போம் என்று தெரிவித்துள்ளனர். இந்த மாதம் 30ஆம் திகதிவரை அந்தக் குழுவின் கால எல்லை நீடிக்கப்படுகின்றது." என்று அவர் தெரிவித்தார்.
(ற-8)

# அரச சொத்துக்குச் சேதம் ஏற்படுத்தினால் நடவடிக்கை

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23
25 ஆயிரம் ரூபாவுக்கு அதிக பெறுமதியான அரச சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று ஏற்பாடு செய்யபட்டிருந்த சிறப்புக் கலந்துரையாடலிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சை தாக்கியவர்கள் சிகிச்சைப் பெறுவது சுகாதார அமைச்சுக்கு சொந்தமான தேசிய வைத்திய சாலையிலேயே ஆகும். நேற்றுமுன்தினம் நடந்த சம்பவம் அரசியல் சூழ்ச்சியே. அவர்களது தேவை இலவச கல்வி மற்றும் இலவச சுகாதாரத்துறையை இல்லாமல் செய்வதே. நாட்டில் டெங்குத் தொற்று தலைத்தூக்கியிருக்கும் நிலையில், அரச மருத்துவர்கள் இவ்வாறு நடந்துக் கொள்வார்களாயின் அவர்கள் மருத்துவர்கள் அல்ல. என்றார். (ற)

# விபத்தில் இருவர் சாவு

திருகோணமலை, ஜூன் 23
திருகோணமலை -கந்தளாய் பிரதான சாலையில் பாலம்போட்டாறுப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.
முள்ளிப்பொத்தானை 98ஆம் கொலணி அரபா நகரைச் சேர்ந்தவர்களான அப்துல் ரவூப் சுஜான் (வயது 28), நஹீர் முஹம்மட் (வயது 20) ஆகியோரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.
திருகோணமலை நகரிலிருந்து கந்தளாய் நோக்கிப் பயணித்த பாரவூர்தியை பாலம் போட்டாறுக் கோவிலுக்கு முன்பாக நிறுத்திய அதன் சாரதி, ஆலய வழிபாட்டில் ஈடுபட்டுவிட்டு உண்டியலுக்கு காணிக்கை செலுத்தச் சென்றுள்ளார். அப்போது, வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்று, வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாரவூர்தியுடன் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.
இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களான நஹீர் முஹம்மட் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அப்துல் ரவூப் சுஜான் என்பவர் திருகோணமலை பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.
விபத்தில் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(ஐ - 10)

# பயணிகளை ஏற்றும் போட்டியால் விபத்துக்குள்ளான இரு பேருந்துகள்



மட்டக்களப்பு, ஜூன் 23
பயணிகளை ஏற்றும் போட்டியில் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்ட அரச மற்றும் தனியார் பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பேருந்துகளில் பயணித்த பயணிகளுக்கோ, சாலையைக் கடக்க முற்பட்ட மாணவர்களுக்கோ பாதிப்பு ஏற்படவில்லை.
இந்தச் சம்பவம் நேற்று மட்டக்களப்பு முறக்கொ ட்டாஞ் சேனைப்பகுதியில் அமைந்து பாடசாலை ஒன்றுக்கு முன்னால் இடம்பெற்றது. காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இ.போ.ச., தனியார் பேருந்துகள் பயணிகளை ஏற்றுவதில் ஏற்பட்ட போட்டியால் ஒன்றைய ஒன்று முந்திச் செல்ல முற்பட்டன. அதனால் விபத்து நேர்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். முறக்கொட்டாஞ் சே னைப் பாடசாலைக்கு அருகிலுள்ள பேருந்துத் தரிப்பிடத்தில் காத்திருந்த பயணிகளை ஏற்றுவதற்காக தனியார் பேருந்து தரித்து நின்ற வேளை, இ.போ.ச. பேருந்து முந்திச் செல்ல முற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
விபத்து இடம்பெற்ற நேரத்தில் பாதசாரிக்கடவையில் எவரும் இல்லாத காரணத்தால் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10)

# மூன்று வாகனங்கள் தீக்கிரை

கொழும்பு, ஜூன் 23
கொழும்பு தெமட்டகொட பகுதியில் திடீரென பற்றிய தீயால் 3 வாகனங்கள் தீக்கிரையாகின என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.
தெமட்டகொட புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்று முதலாவதாகத் தீப்பற்றியது. அந்தக்காருக்கு அருகிலிருந்த இரண்டு வாகனங்களுக்கும் தீ பரவியதை அடுத்து மூன்று வாகனங்களும் எரிந்துள்ளன.
இந்த சம்பவத்தை அடுத்து குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. தீ சிறிது நேரத்தில் தணிக்கப்பட்டது.
இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெமட்டகொட பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10)

# மருதங்கேணி கலாசார பேரவையினர் பிரதேசத்தவரிடம் ஆக்கம் கோருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச கலாசாரப் பேரவையினரால் புத்தகம் வெளியிடப்படவுள்ளது.
பிரதேச ஆக்க இலக்கிய காரர்களை ஒருங்கிணைப்பதற்காகவும் பிரதேச எழுத்தாளர்களது இலக்கிய முயற்சிகளை எழுத்துருவில் வெளிக் கொண்டுவருவதற்காகவும் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தினைச் சேர்ந்தவர்களதும், புலம்பெயர் எழுத்தாளர்களதும் கவிதை, சிறுகதைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தொகுப்புக்காக கவிதை, சிறு கதைகளை அனுப்புவதற்கு விரும்புபவர்கள் கீழ்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக ஆக்கங்களை அனுப்பிவைக்குமாறு மருதங்கேணி பிரதேச செயலர் கோரியுள்ளார்.
வடமராட்சி கிழக்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் அல்லது வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த புலம்பெயர் எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை அனுப்பிவைக்கமுடியும். ஒருவர் கவிதை, சிறுகதை இரண்டையும் அனுப்பிவைக்கமுடியும். ஆனால் இரண்டிலும் ஒவ்வொன்றை மட்டுமே அனுப்பிவைக்க முடியும். ஆக்கங்கள் அனைத்தும் அவருடைய சொந்த ஆக்கங்களாக இருப்பதுடன் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட அல்லது போட்டிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆக்கங்களாக இருக்கக்கூடாது. ஆக்கங்கள் அரசியல் கலப்பற்றதாகவும் வேறு ஒருவருடைய சொந்தப் பிரச்சினைகளை நேரடியாகச் சுட்டிக்காட்டாததாகவும் இருக்கவேண்டும். கவிதையாயின் மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டிலும் படைப்பாளிகள் ஆக்கங்களை எழுதி அனுப்பிவைக்கலாம். மரபுக்கவிதையாயின் ஏ4 தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதவாறும் புதுக்கவிதையாயின் ஏ4 தாளில் இரண்டு பக்கங்களுக்கு தட்டச்சுச் செய்து அனுப்பிவைக்க வேண்டும். தெரிவுக் குழுவினால் தரமானது எனத் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் பிரசுரமாகும். ஆக்கங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர்/ கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், மருதங்கேணி என்னும் முகவரிக்கு அல்லது sebmrk@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும். எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களுடன் தமது முழுப்பெயர், புனைபெயர் இருப்பின் புனைபெயர், நிரந்தர முகவரி, தற்காலிகமுகவரி, தொலைபேசி இலக்கம், தமது கலையுலகவாழ்க்கை பற்றிய சுருக்கக்குறிப்பு, பாஸ்போட் அளவு புகைப்படம் என்பவற்றை இணைத்து அனுப்பிவைக்கவேண்டும் என்று பிரதேச செயலர் கனகேஸ்வரன் தெரிவித்தார். (4)

# விபத்தில் உயிரெடுத்த சாரதியின் சாரதிப் பத்திரத்துக்கு நிரந்தரத் தடை

## மோட்டார் சைக்கிள் ஓட்டிய சாரதிக்கு யாழ்.நீதிமன்று அதிரடித் தண்டனை

யாழ்ப்பாணம், ஜூன் 23

மதுபோதையில் விபத்தை ஏற்படுத்தி, ஒருவரின் உயிரிழப்புக்குக் காரணமாகவிருந்த சாரதி யொருவரின் சாரதித்திய அனுமதிப்பத்திரத்தை நிரந்தரமாக தடை செய்யுமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்று நேற்றுமுன் தினம் உத்தரவிட்டது. இறந்தவரின் மனைவிக்கு 4 இலட்சம் ரூபாவை இழப்பீடாகச் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிடப்பட்டார். 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கோப்பாய் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்தவர் உயிரிழந்தார். கோப்பாய் தெற்கு பழைய வீதியைச் சேர்ந்த சின்னையா ஜெயக்கொடி என்பவரே உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளின் சாரதிக்கெதிராக கோப்பாய் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். விபத்தை ஏற்படுத்தி உயிரிழப்பை ஏற்படுத்தியமை, மது போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தியமை, காப்புறுதி பத்திரமின்றி சென்றமை, அவதானமின்றி வாகனத்தை செலுத்தியமை உள்ளிட்ட ஏழு குற்றச்சாட்டுக்கள் குறித்த சாரதிக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தன. குற்றச்சாட்டுக்களைச் சாரதி ஏற்றுக் கொண்டதையடுத்து 18 ஆயிரத்து 500 ரூபாவைத் தண்டமாகச் செலுத்துமாறும், உயிரிழந்தவரின் மனைவிக்கு இழப்பீடாக 4 இலட்சம் ரூபாவைச் செலுத்துமாறும் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார். குறித்த சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை நிரந்தரமாக தடை செய்யுமாறும் நீதிவான் கட்டளையிட்டார். (4.103)

# வடமாகாண சபையில் அமைதியான அமர்வு

## கிழிந்து பறந்தது சிங்கக் கொடி



யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு மிக அமைதியாக இடம்பெற்றது. கடந்த நாள்களில் இடம்பெற்றிருந்த அரசியல் குழப்பங்களுக்குக் கருத்து முரண்பாடுகள், தர்க்கங்கள் இடம்பெறலாம் என்ற சிலரது எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி நேற்றைய அமர்வு அமைதியானது. வடக்கு மாகாண சபையின் 97 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

நீண்ட நாள்களின் பின்னர் சபையில் நேற்று மாகாண சபையின் 35 உறுப்பினர்களைக் காணமுடிந்தது. மாகாண சபையின் வாயிலில் சபை உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள் மற்றும் அனுமதிக்கப்பட்டவர்கள்தவிர்ந்த ஏனையவர்கள் உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. செய்தி சேகரிக்க சென்ற செய்தியாளர்களின் விபரங்கள் கையொப்பங்கள் வாயிலில் வைத்துப் பெறப்பட்ட பின்னரே உள்ளே செல்ல அவர்கள் அனுமதிக்கப்படிருந்தனர். எவ்வாறாயினும் பல அரசியல் கருத்து மோதல்கள் இடம்பெற்றிருந்த நிலையில் நேற்றைய அமர்வு சூடான வாதங்களைக் கொண்டிருக்கும் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டபோதும் அது நடக்கவில்லை.

தவிர, மாகாண சபையின் வளாகத்தில் பறக்க விடப்பட்டுள்ள இலங்கையின் தேசியக்கொடி கிழிந்த நிலையில் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. நேற்றும் அதனை அவதானிக்க முடிந்தது. இதேபோலவே அண்மையில் வடக்கு மாகாண சபையின் கொடி கிழிந்த நிலையில் பறந்துகொண்டிருந்தமை தொடர்பில் சமூக வலைத் தளங்களில் பரவியதைத் தொடர்ந்து உடனடியாக உடனடியாகப் புதிய கொடி பறக்க விடப்பட்டிருந்தது. (4.8)

# காலாவதியான உப்புப் பைக்கற்றுக்கள் திகதி மாற்றம் செய்யப்பட்டு விற்பனை

## கடைகளில் ஆயிரக்கணக்கில் சிக்கின

யாழ்ப்பாணம், ஜூன் 23

திருகோணமலையில் காலாவதித் திகதி மாற்றப்பட்டு மோசடியாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான உப்புப்பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்ட செயலக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகளால் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த உப்பு பைக்கற்றுக்களை மொத்த விற்பனை செய்யும் வியாபார நிலையம் சோதனைக்குட்படுத்தப்பட்டது. அதன்போதே காலாவதித்திகதி அளிக்கப்பட்டு மீண்டும் புதிதாக திகதி அச்சிடப்பட்ட நிலையில் காணப்பட்ட 900 உப்பு பக்கற்றுக்களை அதிகாரிகள் கைப்பற்றினர். அத்துடன் மொத்த வியாபாரியிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. விசாரணைகளின் அடிப்படையில் திருகோணமலை நகர கடைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதும் பல வர்த்தக நிலையங்களில் இருந்து காலாவதியான உப்பு பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உப்பு பைக்கற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வர்த்தகர்கள் உப்பு பக்கற்றுக்களைக் கொள்வனவு செய்யும்போது அவதானமாக இருக்கவேண்டும். உப்புப் பைக்கற்றுக்களைத் தொகையாகக் கொள்வனவு செய்யும்போது அதற்குள் இருக்கும் அனைத்து, பைக்கற்றுக்களும் சரியான திகதிகளில் இருக்கின்றனவா என்று அவதானிக்க வேண்டும். பைக்கற்றுக்களில் ஏதாவது மாற்றங்கள் இருந்தால் உடனடியாக திருகோணமலை மாவட்ட செயலக பாவனையாளர்



அலுவல்கள் அதிகார சபைக்கு தகவல் வழங்குங்கள் என்று கோரப்பட்டுள்ளது. (4,8)

# நாவல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஒக்ரோபர் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக வெளியிடப்பட்ட சிவ. ஆரூரனின் 'யாவரும் கேளீர்' என்ற நாவலின் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

அரசியல் கைதியாக சிறையில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் எழுத்தாளரும், மொரட்டுவப் பல்கலைக் கழகப் பொறியியல் பட்டதாரியுமான சிவ ஆரூரனின் இரண்டாவது நாவலாக இது வெளிவந்துள்ளது. இவரது முதலாவது நாவலான 'யாழினி' இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக்கொண்டது. எழுத்தாளரும் கவிஞருமான க. தணிகாசலத்தின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், நூலுக்கான மதிப்பீட்டுரைகளை எழுத்தாளர் ஐ. சாந்தனும், கவிஞர் சி. கருணாகரன் நிகழ்த்துவர். ஏற்புரையினை நூலாசிரியரின் தந்தை விமானப் பொறியியலாளர் ஆ. சிவலிங்கம் ஆற்றவுள்ளனர். இவ் உரைகளைத் தொடர்ந்து அவையோர் கருத்துப்பகிர்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வு மண்டபத்தில் வைத்து இந்நூல் ஒன்று ரூபா 400 ரூபாவுக்கு வழங்கப்படும். கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைத்துநிற்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (21)

# கைதடி முதியோர் இல்லத்தில் உடன்பிறப்புக்கள் ஒன்றிணைவு

யாழ்ப்பாணம், ஜூன் 23

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நீண்ட காலத்தின் பின்னர் உடன் பிறப்புக்கள் ஒன்றிணைந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றது.

உடுவில் இஞ்சியடி வைரவர் கோவிலடியை சேர்ந்த எஸ்.சின்னராசா (வயது - 70) என்பவர் மனைவி மற்றும் பிள்ளையால் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பு இன்றி வாழ்ந்து வந்தார். இவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்றுக் காலை உறவினர்களால் இணைக்கப்பட்டார்.

ஏற்கனவே இவரது மூத்த சகோதரி அன்னம்மா (வயது- 80) நீண்டகாலமாக இல்லத்தின் பெண்கள் விடுதியில் வாழ்ந்து வருகின்றனர். இல்லத்தில் சகோதரர் இணைக்கப்பட்ட சம்பவத்தை அறிந்த அன்னம்மா ஆண்கள் விடுதிக்குச் சென்று தனது சகோதரனை கட்டித் தழுவி மகிழ்ந்து கொண்டார். இப்படிப்பட்ட உறவுகள் கைதடி அரச முதியோர் இல்லத்தில் ஒன்று கூடி வாழ்ந்து வருவதாகவும் அவர்களின் மனநிலையில் மகிழ்ச்சி ஏற்படும் என்று இல்லத்தில் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். (வ-17)

# 15 பவுண் நகைகள் மீசாலையில் திருட்டு

சாவகச்சேரி, ஜூன் 23

வீட்டு அறையில் வைக்கப்பட்டிருந்த 15 பவுண் நிறையுடைய தங்க நகைகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளதென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த குடும்பத்தினர் கடந்த 19ஆம் திகதி காலையில் வீட்டிலிருந்து வெளியில் சென்று நண்பகல் வீடு திரும்பிய போது வீட்டின் கதவு திறந்த நிலையில் காணப்பட்டது. அறையினுள் சென்று பார்த்தபோது 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 15 பவுண் தங்க நகைகள் காணாமல் போயுள்ளதென முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (4,9)

# மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கு திறன்விருத்திச் செயலமர்வு

தென்மராட்சி, ஜூன் 23

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கான "நல்லவண்ணம் வாழ்ந்திடுவோம்" எனும் வாழ்க்கைத் தேர்ச்சித் திறன்விருத்திக்கான மூன்று நாள் வதிவிட பயிற்சிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று நாள்கள் சாவகச்சேரி றிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

இது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மேலும் தெரிவித்ததாவது: "வேல்ட் விஷன் லங்கா நிறுவன அனுசரணையுடன் வலய வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலுக்குமான அலகினால் நடத்தப்படும் வதிவிடப் பயிற்சி வகுப்புகளில் வலயத்தின் 20 பாடசாலைகளில் இயங்கும் மாணவர் நாடாளுமன்றங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 130 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு தியானப் பயிற்சி, சூரிய நமஸ்காரப் பயிற்சி உடற்பயிற்சி வாழ்க்கைத் தேர்ச்சி தொடர்பான உள ஆற்றுகைகளுக்கமைய நாடக ஆற்றுகைத்திறன் பயிற்சி போன்றவை கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள சிறப்பு வளவாளர்களாலும் பல்கலைக்கழக நாடக ஆற்றுகை குழுவினராலும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மனவளக் கலைப்பயிற்சி மையத்தினரால் தினமும் காலை 5.30 தொடக்கம் 6.30 வரை யோகா பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இறுதிநாள் நிகழ்வுகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் 26 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு நடைபெறும். இந்த நிகழ்வில் பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்களின் பெற்றோர்களும் பார்வையாளர்களாக அழைக்கப்படவுள்ளனர்" என்றார்.

கடந்த வருடமும் 13 பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு "வெற்றிகளை வென்றிடுவோம்" என்னும் வதிவிடப் பயிற்சிகள் வழங்கப்பட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார். (21-9)

## விபத்தில் உயிரிழந்த பெண்ணை அடையாளம் காணக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 23

கிளிநொச்சி, பளை - இயக்கச்சி பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற சாலை விபத்தில் உயிரிழந்த பெண் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அவரைத் தெரிந்தவர்கள் அல்லது உறவினர்கள் அடையாளம் காட்டுமாறு பளைப் பொலிஸார் கோரினர்.

"பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. அவரை மோதியதாகக் கூறப்படும் வாகனம் தப்பிச் சென்று விட்டது.

விரைந்து செயற்பட்ட பளை பொலிஸார் வேம்பொடுகேணி பகுதியில் உள்ள பொலிஸ் ரோந்துப் பிரிவினருக்கு தகவல் வழங்கினர். எரு ஏற்றிச்சென்ற லொறி கைப்பற்றப்பட்டது. அதன் சில்லில் தசைகள் காணப்பட்டன. அதன் சாரதியும் அதில் பயணித்த இரு உதவியாளர்களும் கைதுசெய்யப்பட்டனர். லொறி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இறந்த பெண்ணின் தலைப்பகுதி முழுமையாக சிதைந்துள்ள படியால் அவர் அடையாளம் காணப்படவில்லை. அவரை அடையாளப்படுத்தக்கூடிய வகையில் அவருக்கு அருகில் இருந்த கைப்பையில் எதுவித ஆவணங்களும் இருக்கவில்லை. அவரின் கைப்பையில் அதிகளவான சில்லறை பணம் காணப்பட்டது. அந்தப் பெண் வியாபாரம் செய்பவராக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கொடிகாமத்தில் இருந்து பேருந்தில் ஏறியதற்கான சிட்டை ஒன்று மீட்கப்பட்டுள்ளது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (4-6)

## முல்லை. கமநல சேவை நிலையங்களிலுள்ள
# 127 உழவு இயந்திரங்களில் 41 பழுதடைந்த நிலையில்

முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள 10 கமநல சேவை நிலையங்களிலும் 127 உழவு இயந்திரங்கள் உள்ளன. அவற்றில் 86 உழவு இயந்திரங்கள் மட்டும் இயங்கு நிலையில் உள்ளன. மிகுதி 41 உழவு இயந்திரங்களும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத் தின் உதவி ஆணையாளர் செ. புனிதகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீள்குடியமர்வின் பின்னர் முல்லைத்தீவு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசினது உதவித் திட்டத்தின் ஊடாக 102 உழவு இயந்திரங்கள் கிடைக்கப் பெற்றன. அதேபோன்று இலங்கை அரசாலும், ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களின் மூலமாகவும் 25 உழவு இயந்திரங்கள் கிடைத்தன.

தற்போது 127 உழவு இயந்திரங்கள் உள்ளன. அவற்றை விவசாயிகளின் தேவைக்கேற்ப குறைந்த கட்டணத்தில் கமநல சேவை நிலையங்களின் ஊடாக வாடகைக்கு வழங்கப்பட்டும் வருகின்றன.

127 உழவு இயந்திரங்களையும் கமக்கார அமைப்புக் களிடம் ஒப்படைத்து விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவது தொடர்பில் எமது மேல் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசி வருகின்றேன். அங்கிருந்து கிடைக்கும் பதில்களுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை இடம்பெறும்-என்றார். (21-101)

## பொன்விழா நாளை

யாழ்ப்பாணம்.ஜூன்23

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய பொன்விழா நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாண நிலையத் தலைவர் தி.பிரதீபன் வரவேற்புரையையும், சிறிலங்கா மாலைதீவு உதவி மத்திய இணைப்பாளர் மருத்துவர் வி.ஜெகநாதன் ஆசியுரையையும் வழங்குவார்கள், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)


## உதிரி நாடக ஆற்றுகை இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 23

'உதிரி நாடக நிலம்' என்னும் அமைப்பைச் சேர்ந்த வளர்ந்து வரும் இளம் கலைஞர்கள் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்துள்ளனர். இவர்கள் குழந்தைகளின் உலகம் நாடி , உதிரி போன்ற பல்வேறு படைப்புக்களை பல இடங்களிலும் அரங்கேற்றி பாராட்டுப் பெற்றவர்கள். இவர்களின் 'உதிரி' என்னும் தனிநபர் நாடக அளிக்கை இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் அழைப்பில் இல: 286 பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

## மாகாண மட்டத்தில் கிளிநொச்சியில் இருவர் வெற்றி

மாகாண மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் முதல் இரு இடங்களையும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் பெற்றனர். தரம் 6 மாணவர்களுக்கான கணித ஒலிம்பியாட் போட்டிகள் கடந்த வாரம் இடம்பெற்றன. ஆயிரத்து 200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அதில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநித்துவம் செய்து போட்டியில் பங்கு பற்றிய இரு மாணவர்கள் மாகாணத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளைப் பெற்றுள்ளனர். கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஜெ. இசைமைந்தன் முதலாம் இடத்தையும் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன் ரி. திருக்குமரன் இரண்டாவது இடத்தையும் பிடித்து மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர். 75 மாணவர்கள் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 7 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4-6)



## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரி | 120 | 80 | 80 | 140 | 80 |
| கரட் | 280 | 300 | 260 | 240 | 280 |
| மரவள்ளி | 60 | 80 | 70 | 60 | 50 |
| பயிற்றை | 100 | 100 | 120 | 80 | 60 |
| பாகல் | 100 | 200 | 120 | 120 | |
| கருணைக்கிழங்கு | 120 | | 85 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 85 | 100 | 75 |
| சி.வெங்காயம் | 250 | 350 | 240 | 300 | 250 |
| பூசணி | 70 | 100 | 60 | 90 | 70 |
| தக்காளி | 120 | 160 | 120 | 150 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 30 | 60 | 40 |
| கீரை | 20 | 30 | 20 | 10 | 15 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 25 | 30 | 20 |
| பச்சை மிளகாய் | 350 | 400 | 200 | 300 | 320 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 80 |
| கோவா | 120 | 200 | 140 | 180 | 200 |
| வெண்டி | 100 | 120 | 60 | 100 | 50 |
| போஞ்சி | 160 | 240 | 160 | 200 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 | 140 | 80 |
| தேங்காய் | 70 | 60 | 60 | 60 | 45 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 70 |
| தேசிக்காய் | 100 | 80 | 10 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 |
| கறிமிளகாய் | 200 | 400 | 240 | 160 | 250 |
| இராசவள்ளி | 200 | - | - | 300 | 300 |
| முருங்கைக்காய் | 260 | 300 | 200 | 150 | 240 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 250 | 600 | 400 |
| கணவாய் | 700 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 700 | 700 | 700 |
| சுறா | 600 | 800 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 600 | 700 |
| விளை | 500 | 500 | 600 | 700 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 250 | 450 | 600 |
| கிளாக்கன் | 800 | | 600 | 600 |
| ஓரா | 400 | 400 | 450 | 500 |
| திரளி | 250 | 250 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 300 |
| சூடை | 200 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 300 | 300 | 300 |
| திருக்கை | 350 | – | 400 | – |
| மதனம் | 250 | 200 | 300 | – |
| கொய் | 200 | 50 | 80 | 100 |
| பாலை | 300 | 250 | 600 | 700 |
| வாழை | 200 | – | 500 | 400 |

## யாழ்ப்பாண மாநகரில் நேற்று குப்பைகள் சேகரிக்குமிடத்தில் தீ

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம், முனீஸ்வரர் வீதியில் சேகரிக்கப்பட்ட திண்மக் கழிவுகள் நேற்று மாலை தீப்பற்றி எரிந்தன.

இந்த திண்மக் கழிவுகளுக்கு விசமிகள் தீயிட்டதனால் அவை கொளுந்து விட்டு எரியத் தொடங்கின. எனினும் தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

நகரப்பகுதியில் அகற்றப்படும் திண்மக் கழிவுகள் இந்தப் பகுதியில் உள்ள மாநகராட்சி மன்றத்தின் காணியில் கொட்டப்பட்ட பின்னர் அவை தரம்பிரிக்கப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டு வருகின்றன. (வ-17)




பெண்களுக்கான கைப்பைகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை லெதரினால் அமைந்து காணப்படுவதால் இதன் பாவனைக்காலமும் அதிகமாக இருக்கலாம். இவை 30 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## வடக்கிலுள்ள சித்த மருத்துவ ஏடுகள் பாதுகாப்பதற்காக சேகரிக்கப்படுகின்றன



யாழ்ப்பாணம் ஜூன் 23

வடக்கு மாகணத்தில் உள்ள ஏட்டில் எழுதப்பட்ட சித்தமருத்துவக்குறிப்புக்களை பேணிப்பாதுகாத்து அவற்றை ஆவணப்படுத்தும் செயற்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் தெரிவித்தது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

சித்த மருத்துவக் குறிப்புக்கள் முன்னோர் காலத்தில் மருத்துவர்களால் ஏட்டில் எழுதப்பட்டு அது நாட்டின் பல பாகங்களிலும் சிதறிக் காணப்படுகின்றன. ஏடுகளில் சித்த மருத்துவத்தின் பயன்கள் ஏராளம் உள்ளன. அவற்றைப் பேணிப் பாதுகாத்து தற்போது உள்ள மருத்தவம் சார்ந்த சமுதாயத்துக்கு அவற்றைக் கற்பிக்க வேண்டும். எனவே இந்த ஏடுகளை ஆவணப் படுத்தும் நோக்கில் முதற்கட்டமாகஎம்மிடம் உள்ள ஒரு தொகை ஏடுகளை வாசித்து அவற்பறை புரிந்து கொள்ளவும் பாதுகாக்கவும் மருத்துவம் சார்ந்த சமுதாயத்துக்கு தெளிவு படுத்தும் நிகழ்ச் திட்டம் கைதடி சித்த மருத்துவ பீடத்தில் நடைபெற்றது.

இந்த செயற்திட்டத்துக்கு இந்தியாவில் இருந்து இரண்டு விரிவுரையாளர்கள் வருகை தந்திருந்தனர். இதன்போது ஏடுகளின் முக்கியத்தவம், அவற்றை வாசித்து அறியும் முறை. மற்றும் ஆவணப் படுத்தும் முறை என்பன பற்றி தெளிவுபடுத்தப்பட்டது. வைத்தியர்கள், மாணவர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். நடைபெற்று முடிந்த செயற்திட்டத்தை தொடர்ந்து நாட்டின் பல்வேறு பாகங்களிலும் சிதறிக் காணப்படும் வடக்கு மாகாணத்தின் அறிஞர்களால் எழுதப்பட்ட பயனுள்ள சித்த மருத்துவக் குறிப்புக்கள் அடங்கிய ஏடுகளை சேகரித்து அவற்றை ஆவணப்படுத்தும் ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன. வைத்தியத் துறை சார்ந்தவர்களால் ஏடுகளை ஆவணப்படுத்தல் நடைபெற்று வருகின்றது. இன்னமும் 3 வருடத்தில் இந்த ஆவணப் படுத்தல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டது. (21-ரி)

## மாணவனுக்கு புகைபொருள் விற்றவருக்கு 10 ஆயிரம் தண்டம்

பாடசாலை மாணவனுக்கு புகை பொருளை விற்ற கடைக்காரருக்கு பருத்தித்துறை நீதிமன்று 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது.

உடுப்பிட்டி சந்தியில் உள்ள கடை ஒன்றில் பாடசாலை மாணவர் ஒருவர் சிவில் உடையில் புகை பொருள் வாங்கியதனைக் கண்டவர்கள் அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். பொலிஸார் பரிசோனைக்குச் சென்றிருந்தபோது மற்றொரு மாணவனுக்கும் அவ்வாறு புகை பொருளை கடைக்காரர் விற்றுள்ளார். அதனால் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டது. (4-26)

# எமது காணிகளை ஒப்படைத்துவிட்டு கடற்படையினர் வெளியேறவேண்டும்

## வட்டுவாகல் காணிஉரிமையாளர்கள் ஆட்சேபனைக் கடிதம்



முல்லைத்தீவு, ஜூன்

"கடற்படையினரால் அபகரிக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் பகுதியில் உள்ள எங்களின் காணிகளை எம்மிடமே கையளித்துவிட்டு அவர்கள் இங்கிருந்து வெளியேற வேண்டும்". இவ்வாறு முள்ளிவாய்க்கால் - வட்டுவாகல் பகுதிகளில் விடுவிக்கப்படாத காணிகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்தில் கடந்த மாதம் காணி எடுத்தற் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் காணி சுவீகரிப்பது தொடர்பான ஆட்சேபனை இருப்பின் பதில் அனுப்பும்படி துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டிருந்த நிலையிலேயே காணி உரிமையாளர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கடற்படையினர் எமது காணிகளைக் கையகப்படுத்தி முகாம் அமைத்துள்ளனர். 2009ஆம் ஆண்டின் பின் இருந்து அவர்கள் அங்கு நிலைகொண்டுள்ளனர். இதனால் எமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் தொடர்பில் சகல தரப்பினரிடமும் பல தடவைகள் சந்தித்து ஆட்சேபனை தெரிவித்துள்ளோம். இது தொடர்பாக மூன்று முறை எழுத்து மூலமாக எங்களிடம் கோரப்பட்டபோதும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளோம். தற்போது துண்டுபிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது. அதற்கு நாங்கள் மறுப்புத் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளோம். எமக்கு வாழ்வாதாரம் தரும் எமது சொந்த நிலங்களை எங்களிடம் கையளித்து விட்டு கடற்படையினர் அவர்களுக்கு பொருத்தமான இடங்களுக்கு செல்லவேண்டும்" என்றனர். காணி சுவீகரிப்பிற்கு எதிராக 20இ ற்கு மேற்பட்ட கடிதங்கள் காணி உரிமையாளர்களிடமிருந்து பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப் பட்டுள்ளதாக கரைதுரைப்பற்று பிரதேச செயல தகவல்கள் தெரிவித்தன.

**பின்னணி**

இறுதிப் போரின் பின்னர் முல்லைத் தீவு, வட்டுவாகல் பிரதேசத்தில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் நிலம் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டது. அங்கு கடற்படையினர் பெரிய கடற்படைத் தளத்தை அமைத்து நிலை கொண்டனர். மக்களினுடைய மீள்குடியேற்றத்தின் போது கடற்படையினரால் அபரிக்கப்பட்ட மக்களுடைய குறித்த காணி விடுவிக்கப்பட வில்லை. இது தொடர்பாக அரசியல் தலைவர்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. இரு தரப்பினருக்கும் இடையில் பல பேச்சுக்கள் இடம்பெற்றன. எனினும் காணிகள் விடுவிக்கப்பட வில்லை. கடற்படை முகாமை அகற்றி தமது நிலங்களை விடுவிக்குமாறு காணி உரிமையாளர்கள் நீண்டகாலமாகப் போராட்டம் நடாத்தி வந்தனர். அந்த காணிகளை அளவிடும் முயற்சியில் இரண்டு முறை கடற்படையினர் ஈடுபட்டனர். அந்த முயற்சிகள் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டன. இது தொடர்பில், பாதுகாப்பு அமைச்சின் உப செயலாளர் தலைமையில் கடந்த வருடம் ஜனவரி 16ஆம் திகதி, மற்றும் 24 ஆம் திகதிகளில் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட செயலாளர் தலைமையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதன் போது தமது நிலம் மீளக் கையளிக்கப்பட வேண்டும் என்று நில உரிமையாளர்கள் உறுதியாகக் கோரினர். இவை அனைத்தையும் தாண்டி கடற்படையினர் அடாத்தாக மேற்படி பிரதேசத்தினை அபகரிக்கும் நோக்கில் அளவீடுசெய்ய முயன்றவேளையில் நில உரிமையாளர்கள் வீதிமறியலில் ஈடுபட்டனர். இதில் காணி உரிமையாளர்கள், அரசியல் தலைவர்கள் மக்கள் எனப் பலர் ஒன்று திரண்டிருந்தனர். வட்டுவாகல் பாலம் மறிக்கப்பட்டு போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினர். சம்பவ இடத்திற்கு வந்த மாவட்டச் செயலக அதிகாரிகளின் வாக்குறுதிகளை ஏற்று மக்கள் போராட்டத்தை கைவிட்டனர். இந்த விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அந்த பிரதேசம் எந்த காரணம் கொண்டும் கடற்படையினருக்கு வழங்க முடியாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னரும் வட்டுவாகல் கடற்படைத் தளத்தின் சுற்றுக் காவலரன்கள் அனைத்தும் நிரந்தரமாக சிமெந்தி னால் கட்டியமைக்கப்பட்டன. கடந்த ஏப்பல் மாதம் மக்கள் கவயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர். (21)

## வாழ்வோம் வளம்பெறுவோம் திட்டத்தில் வடக்கில் 436 குடும்பங்களுக்கு உதவி

முல்லைத்தீவு, ஜூன் 23

வடக்கு மக்களுடைய வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட வாழ்வோம் வளம்பெறுவோம். செயற்றிட்டத்தினூடாக 436 குடும்பங்களுக்கான உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற 12ஆம் கட்ட செயற்திட்டத்தில் 33 குடும்பங்கள் உளீர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மக்களினுடைய வாழ்வாதாரத்தை அடிப்படையாக கொண்டு, வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டு "வாழ்வோம் வளம்பெறுவோம்" எனும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. புலம்பெயர்ந்து வாழும் மக்களுடைய நிதிப்பங்களிப்பில் இந்த உதவிப்பொருள்களை மக்களுக்கு வழங்கி வருகின்றேன்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த செயற்திட்டதின் 12 ஆவது கட்டம் முல்லைத்தீவில் அமைந்துள்ள மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றது. இதில் தாயகத்தைச் சேர்ந்த 33 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். நடைபெற்று முடிந்த பன்னிரண்டாம் கட்டத்துடன் இதுவரையில் 436 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். 12ஆம் கட்டத்துக்கான பங்களிப்பை புலம்பெயர்ந்து வாழும் சதாசிவம் சத்தியசீலன் தனது தந்தையாரின் நினைவாக செய்திருந்தார். அவர் ஒரு இலட்சத்து ஆறாயிரம் ரூபா பெறுமதியில் தமிழ் உறவுகளுக்கு இந்த உதவிப் பொருள்களை வழங்கியுள்ளார். இதில் 30 குடும்பங்களுக்கு அரிசி, மாவு, சீனி பால்மா, தேயிலை, வழலை, பருப்பு உள்ளிட்ட பொருள்களும் மூன்று குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் படியும் வழங்கப்பட்டன. சுன்னாகத்தில் வசிக்கும் திருமதி சதாசிவம் பூமணி, அவரது மகன் சதாசிவம் சத்தியசீலன் ஆகியோர் தமது உறவினர்களுடனும் நேரடியாக வந்து உதவிகளை வழங்கியுள்ளர் - என்றுள்ளது. (21)



## வடக்கு மாகாணத்தில் உள்ள
# தொண்டராசிரியர் மன மகிழ்ச்சியில்
### நியமனத்துக்கான நேர்முகம் நடக்கவுள்ளதால்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோரை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கான நேர்முகத் தேர்வு அடுத்த வாரம் ஆரம்பமாகின்றது. இது தொடர்பான அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றமை குறித்து தொண்டர் ஆசிரியர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

"வடக்கு மாகாணத்தில் கடந்த பல வருடங்களாக தொண்டராசிரியர்களாக பணியாற்றி வரும் எமக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம். அதன் அடிப்படையில் தொண்டராசிரியர்களுடைய விவரங்கள் அதிகாரிகளால் திரட்டப்பட்டன. தொண்டராசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுடைய பெயர் விபரங்களும் வலயக் கல்வி அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இருந்த போதும் எமக்கான நியமனங்கள் தாமதமாகிக் கொண்டிருந்தன.

எனவே இது தொடர்பான முடிவுகளை எட்டுவதற்காக பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. பத்திரிகைகள் ஊடாக எமது பிரச்சினைகள் வெளிக்கொணரப்பட்டன. அரசியல் தலைவர்கள் .இது தொடர்பாகப் பேசினர்.

நேர்முகத்தேர்வின் அடிப்படையில் தொண்டராசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்வதாக தெரிவிக்கப்பட்டது. இறுதியில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் எதிர்வரும் 28, 29, 30 ஆம் திகதிகளில் எமக்கான நேர்முகத் தேர்வுகள் இடம்பெற இருப்பதாக தெரிவித்திருந்தார்.

தற்போது அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் கடந்த இரண்டு நாள்களாக கடிதங்கள் கிடைக்கப்பட்டுள்ளன. மகிழ்ச்சியாக உள்ளது.

நாங்கள் பட்ட துன்பங்களுக்கு எமது நிரந்தர நியமனம் எமது தாய் தந்தையரை மகிழ்வுக்கு உள்ளாக்கியுள்ளது - என்றனர். (21)

# உண்மைக்கு மாறான குற்றச்சாட்டை அனந்தி சசிதரன் முன்வைத்துள்ளார்

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதி மோசடி, அதிகார முறைகேடு, பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்த விசாரணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் கல்வி அமைச்சர் த.குருகுலராசா முதலமைச்சருக்கு முன்வைத்த தன்னிலை விளக்க அறிக்கையின் மூன்றாம் பகுதி.

### உறுப்பினர் சுகிர்தன் இரட்டை முகம்

இருப்பினும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான ச.சுகிர்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், க.தர்மலிங்கம், சி.அகிலதாஸ், அ.அஸ்மின், கே.சயந்தன், அ.பரஞ்சோதி, இ.ஆனோல்ட், வே.சிவயோகன், பா.கஜதீபன், க.வ.கமலேஸ்வரன் ஆகிய 11 உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் எனக்கூடாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு 2016.12.16ந் திகதிய கடித மூலம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய சி.நந்தகுமார் அவர்கள் மீதான அமைச்சரவை தீர்மானத்தை மாற்றி அமைப்பதற்கான கோரிக்கையை முன்வைத்தும், நிதியாண்டு முடிவுறும் காலத்தை கருத்தில் எடுத்தும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 11 ஐச் சேர்ந்த சி.நந்தகுமார் அவர்களை 2017.01.16ஆம் திகதி முதல் அவரது தரத்திற்குரிய உதவிச் செயலாளர் பதவி வழங்குவதற்கும் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தனர்.

இதற்கமைய மீண்டும் கல்வி அமைச்சின் செயலாளரால் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு 2016.12.27ல் நடைபெற்ற 47ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. (இல : கஅ/பத்திரம்/78/2016)இற்கு அமைவாக "சி.நந்தகுமார் அவர்களை தற்காலிகமாக கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக 2017.02.23 வரை இணைப்புச் செய்து, பின்னர் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஓய்வு பெற்றதும் அந்தப் பதவிக்கு சி.நந்தகுமார் அவர்களை நியமனம் செய்வதற்கும், மாகாண அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது".

அதற்கமைவாக கல்வி அமைச்சின் செயலாளரால் NP/03/02/GA/1/19 இலக்க 2017.01.03 திகதிய கடிதமூலம் சி.நந்தகுமார் அவர்களை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சி.நந்தகுமார் அவர்கள், "ஓய்வு பெறும் நிலையில் இருந்த தன்னை இடமாற்றம் செய்தது தவறு என மாகாண நிர்வாக சுற்றறிக்கை இல : NP/02/2009(7) - 2009/03/25 மூலம் தமது சாட்சியத்தின்போது தெரிவித்தார்".

சி.நந்தகுமார் அவர்கள் குறிப்பிட்டுள்ள சுற்றறிக்கையில் பந்தி இல : 5.8 ல் "அலுவலரின் வேண்டுகோள் அல்லது வேறு சிறப்புத் தேவைகள் இருந்தாலொழிய, 53 வயதைக் கடந்த அலுவலர்களை மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் செய்தலாகாது. எனினும் அவர்கள் மாவட்டத்துக்குள் இடமாற்றங்களுக்கு உட்படுவார்கள். 59 வயதைக் கடந்துள்ள அலு வலர்களுக்கு அவர்களால் இடமாற்றம் கோராதவிடத்து மாவட்டத்துக்குள்ளேனும் இடமாற்றம் செய்தலாகாது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சி.நந்தகுமார் அவர்களுக்கு 2017.01.16இல் வயது 58 வருடங்கள் 2 மாதங்களாகும். அத்துடன் இவர் மாவட்டத்துக்குள்ளேயே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இது குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கமைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தை முறையற்ற நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றம் தொடர்பான முறைப்பாட்டுக்குழுவின் தலைவரால் NP/COS/AD/02/PE இலக்க 2016.10.10ந் திகதிய கடிதமூலம் முதலமைச்சருக்கு முகவரியிட்டு எனக்குப் பிரதியிட்டு எழுதிய கடிதத்தை, முதலமைச்சர் NP/CM/CS/03/68 இலக்க 2016.11.07ந் திகதிய செயலாளருக்கு அறிவுறுத்தி எனக்கும், முறையற்ற நியம னங்கள் பதவியுயர்வு தொடர்பான விசாரணைக்குழுவின் தலைவருக்கும் பிரதியிட்ட கடிதத்தின் படி எந்தவித காலதாமதமுமின்றி உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதத்தில், இவர் இடமாற்றம் செய்யப்பட்ட பதவியான உதவிச் செயலாளர் இலங்கைக் நிர்வாக சேவைக்குரிய பதவியேயன்றி இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குரிய பதவி அல்ல என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் அதை நன்கு வாசித்து விளங்கியே தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இதற்கு எந்தவித மேன்முறையீடும் இன்றுவரை அவரால் செய்யப்படவில்லை. அத்துடன் விசாரணைக் குழுவின் அறிக்கையில் சிவபாதம் நந்தகுமார் அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 11ஐச் சேர்ந்த தனக்கு இலங்கை நிர்வாக சேவை தரம் 111 இற்குரிய பதவி வழங்கப்பட்டிருப்பதாக தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். இத்தகவலை எந்தவித ஆவண ரீதியான பரீட்சிப்புமின்றி விசாரணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட கல்வி அமைச்சுக்கான ஆளணியில், வடமாகாண கல்வி அமைச்சில் இலங்கை நிர்வாக சேவை தரம் 11 அல்லது தரம் 111 க்குரிய பதவியே உதவிச் செயலாளர் பதவியாகும். எனவே சி.நந்தகுமார் அவர்களால் சாட்சியத்தின் போது இது தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்து முற்றிலும் தவறானதாகும். எனவே இக்குற்றச்சாட்டு வெற்றும் வெறிதானதுமாகும்.

மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்த அதே வேளை இரட்டை முகத்துடன் சி.நந்தகுமார் அவர்களை உதவிச் செயலாளர் பதவிக்கு நியமிக்குமாறு மாகாண சபை உறுப்பினர்கள் பதினொரு பேர் கையொப்பமிட்டு அனுப்பப்பட்ட மனுவில் கையொப்பமிட்டுள்ளார் என்பது இங்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

### முறைப்பாடு 3.2, 3.3 க்கான விளக்கங்கள்

3.2 யா/யூனியன் கல்லூரி அதிபர் நியமனத்தில் யா/யூனியன் கல்லூரி பழைய மாணவராக இருந்த வரதன் மாஸ்ரர் என்பவரை ஓர் நாடாளுமன்ற உறுப்பினரின் செல்வாக்கு மூலம் சிறிர் காலம் படித்த காரணத்துக்காக அவரை அந்தப் பாடசாலையின் அதிபராக நியமிக்க கல்வி அமைச்சின் செயலாளருக்கு



அழுத்தம் கொடுத்தமை.

3.3 குறித்த வரதன் என்பவர் கற்கை விடுமுறையில் இருக்கும் போது அவரை அதிபராக நியமித்ததன் மூலம் அதிகார முறைகேடுபுரிந்தமை.

மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக ஆளுநரின் குறிப்பாணை 2013/01இன் பிரகாரம் பிரிவு 2 சி 5ன் படி மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கே அதிகார கையளிப்பு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக வகை கூறுபவர் கல்வி அமைச்சின் செயலாளரே ஆவார். ஆயினும் இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் இது தொடர்பான விளக்கம் பின்வருமாறு.

யாஏயூனியன் கல்லூரி அதிபர் வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரால் நேர்முகத்தேர்வு நடாத்தப்பட்டு நேர்முகத்தேர்வில் தோற்றிய நான்கு பேரில் தில்லையம்பலம் வரதன் என்பவர் அதிகூடிய புள்ளி பெற்றிருந்தமையால் அவருக்கு கல்வி அமைச்சின் செயலாளரால் அந்தப் பதவி வழங்கப்பட்டது. இது தொடர்பாக என்னால் எவ்வித அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. எந்த ஓர் நாடாளுமன்ற உறுப்பினரும் இது தொடர்பாக எனக்கு அழுத்தம் தரவில்லை.

மேலும் அனுமதிக்கப்பட்ட கற்றல் விடுமுறையில் இருக்கும் ஒருவர் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்பது தொடர்பில் தாபனவிதிக்கோவையில் எந்தவிதமான தடைகளும் இல்லை என்பதுடன், சம்பந்தப்பட்டவர் அந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு கடமையைப் பொறுப்பேற்ற தினத்திலிருந்து அவரது கற்கை விடுமுறை தன்னியல்பாகவே முடிவுறுத்தப்பட்டுவிடும்.

இவ்வகையிலேயே தி.வரதன் யா/யூனியன் கல்லூரிக்கு அதிபராக கடமையேற்றவுடன், அந்தத் திகதியிலிருந்து அவரது கற்கை விடுமுறை தானாகவே முடிவுறு த்தப்பட்டுவிட்டது. எனவே கற்கை விடுமுறையில் இருக்கும் தி.வரதன் என்பவருக்கு அதிபராக வழங்கப்பட்ட நியமனம் மூலம் அதிகார முறைகேடு மேற்கொள்ளப்பட்டது என்ற குற்றச்சாட்டு எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. உண்மையில் இது அவரது அடிப்படை உரிமையை பேணும் செயலாக இங்கு அமைந்துள்ளது.

### முறைப்பாடு 3.4இற்கான விளக்கம்

3.4 குறித்த அதிபரின் நியமனத்தை உடன் நிறுத்துமாறு மாகாண சபையில் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாகாண சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் அதனை செயற்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காது இருக்க செயலாளரை தடுத்தமை.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக, இந்தக் குற்றச்சாட்டிலிருந்து விசாரணைக்குழு என்னை விடு வித்துள்ளது. எனினும் அந்தக் குற்ற ச்சாட்டில் "முதலமைச்சர் தலைமையில் மாகாண சபை அமர்வில்" எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மாகாண சபை அமர்வு அவைத்தலைவரின் தலைமையிலேயே நடைபெறுகின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

### முறைப்பாடு 3.5 அ. இற்கான விளக்கங்கள்

3.5 அ. 2015ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலய அதிபர் தனது பாடசாலையில் கல்வி கற்ற மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், கல்வி அமைச்சருக்கு முறைப்பாடு செய்திருந்தபோதும் அந்த அதிகாரிகளுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமை.

3.5 ஆ. குறித்த அதிபர் பாடசாலை மாணவியுடன் தகாத முறையில் நடந்துகொள்ள முயன்ற விடயத்தை பாடசாலை வகுப்பாசிரியர் வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேளுக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்தார். அதற்காக அந்த ஆசிரியர் பழிவாங்கப்பட்டு வலயக் கல்விப்பணிப்பாளர் முருகவேளால் இடமாற்றம் செய்யப்பட்டமை.

3.5 இ. குறித்த ஆசிரியரின் கடித மூலமான முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அந்த ஆசிரியரை ஏனைய ஆசிரியர்கள் முன்னிலையில் கொச்சைப்படுத்தியமை தொடர்பாக உறுப்பினர் அனந்தி சசிதரன், கல்வி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்தும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்காமை.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பின்வருவனவற்றைக் கூற விரும்புகிறேன்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஒழுக்காற்று விடயம் சம்பந்தமானவை என்பதால் அதிபர்களின் ஒழுக்காற்றுகட்டுப்பாட்டுவிடயத்துக்கான அதிகாரம் ஆளுநரின் குறிப்பாணை 2013/01இன் பிரகாரம் பிரிவு 2 சி 5இன் படி மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கே கையளிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக முழுமையாக வகை கூற வேண்டியவரும், நடவடிக்கைஎடுக்க வேண்டியவரும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரே ஒழிய கல்வி அமைச்சர் அல்ல என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் இது தொடர்பாக எந்த முறைப்பாட்டையும் எனக்கு மேற்கொள்ளவில்லை. நான் அறிந்தவரையில் குற்றச்சாட்டில் குறிப்பிட்டிருப்பது போல 2015ஆம் ஆண்டில் கிளி/பாரதிபுரம் வித்தியாலத்தில் இவ்வாறான சம்பவம் எதுவுமே நடைபெறவில்லை. எனவே இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது. ஆதலினால் இதிலிருந்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் முற்றிலும் ஆதாரமற்ற அடிப்படையில் உண்மைக்கு மாறான குற்றச்சாட்டை இந்த விசாரணைக் குழுவுக்கு சமர்ப்பித்திருந்தமை புலனாகின்றது. எனினும் 2014ஆம் ஆண்டிலே அப்பாடசாலையில் இவ்வாறான சம்பவம் ஒன்று தொடர்பாக கிளி/பாரதிபுரம் வித்தியாலத்தின் பிரதி அதிபர் திருமதி ச.ஜெயகாந்தன் என்பவரால் எனக்கு 2014.07.25ஆம் திகதியிட்ட கடிதமூலம் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஒழுக்காற்று அதிகாரியான கல்வி அமைச்சின் செயலாளருக்கு எனது வமா/அஅ/கபவி இ/க/05 இலக்க 2014.07.28ம் திகதிய கடிதமூலம் அறிவுறுத்தியிருந்தேன்.

இந்தக் கடிதத்தை முன்னிலைப்படுத்தி கல்வி அமைச்சின் செயலாளரால் NP/3/2/GA/Kil இலக்க 2014.08.13 திகதிய கடிதமூலம் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முகவரியிட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குப் பிரதியிட்டு "பாடசாலை விடுமுறை காலமாக இருப்பினும் இந்த முறைப்பாட்டுக்கு முன்னுரிமையளித்து சம்பந்தப்பட்டவர்களை அழைத்து உரிய விசாரணை நடாத்தி தங்கள் அவதானிப்புடன் அறிக்கையை அனுப்புமாறு" கோரி அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

ஏற்கனவே குற்றச்சாட்டு 3.5 ஆ, 3.5 இ என்பன விசாரணைக் குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

### முறைப்பாடு 3.6இற்கான விளக்கங்கள்

3.6 கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் தனக்கேற்றவர்களை அதிபராக நியமனம் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக, ஆளுநரின் குறிப்பாணை 2013/01இன் பிரகாரம் பிரிவு 2சி5 இன் பிரகாரம் அதிபர்களை நிலைப்படுத்தல், இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன குறித்த அதிகாரம் ஆளுநரால் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கே கையளிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பான வகை கூறலுக்கும் நடவடிக்கைக்கும் பொறுப்பானவர் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரே ஒழிய மாகாண கல்வி அமைச்சர் அல்லர் என்பது இங்கு சுட்டிக்காட் டப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக எனது கருத்துக்கள் பின்வருமாறு.

கல்வி அமைச்சின் செயலாளரால் 2015.04.29 திகதியிட்டு பத்திரிகையில் வடமாகாணத்தில் வெற்றிடமாக இருந்த 153 பாடசாலை அதிபர்களுக்கான விண்ணப்பம் கோரல் விளம்பரம் செய்யப்பட்டது. அதன் பிரகாரம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அதிபர் நேர்முகத்தேர்வுக்கு தோற்றிய இருவரில் திருமதி.ஜெ.தனபாலசிங்கம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

அவ்வேளை கிளி/கனகபுரம் மகா வித்தியாலயத்துக்கும், கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கும் திருமதி.இராசரஞ்சிதம் இரவீந்திரநாதன் மாத்திரமே இந்த இரு பாடசாலைகளுக்கும் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றியிருந்தார். குறித்த அதிபர் கிளி/கனகபுரம் மகா வித்தியாலயத்துக்கு அதிபராக கடமையாற்றுவதற்கே தனது சம்மதத்தை தெரிவித்திருந்தார். இதனால் திருமதி.ஜெ.தனபாலசிங்கம் ஏற்கனவே அதிபராக கடமையாற்றியிருந்த கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கு அதிபர் பதவி வெற்றிடம் ஆகியது.

(நாளை தொடரும்)

# குப்பையிலிருந்து வரவுள்ளது மின்சாரம்

கொழும்பு, ஜூன்23

இலங்கையில் முதன்முதலாகக் குப்பைகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கப்பட வுள்ளது.

ஜப்பான் நிறுவனமே இந்தத் திட்டத்தை முதற்கட்டமாக இலங்கையின் வடமேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது.

இதன்படி மாகாணசபை எல்லைக்குட்பட்ட நிறுவன பிரதேசங்களில் சேரும் குப்பைகள் இந்த மின்னாரத் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படவுள்ளன.

ஜப்பான் நிறுவனத்தின் பிரதிநிதிகள் சிலர் வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தஸநாயக்க மற்றும் எதிர்கட்சித் தலைவர் சமல் சேனரத் ஆகியோரைச் சந்தித்து இது தொடர்பான யோசனையை முன்வைத்துள்ளனர். (த-ய)

## இரட்டைக் குடியுரிமை உள்ள எம்.பிக்களின் விவரம் திரட்டு

கொழும்பு, ஜூன்23

இரட்டைக் குடியுரிமை பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்களைத் திரட்டும் பணியில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, இரட்டைக் குடியுரிமையைப் பெறுவதற்கு வழங்கிய ஆவணங்கள் அடங்கிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு, குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர், நாடாளுமன்றத் தலைமைச் செயலாளர் தம்மிக்க தசநாயக்கவுக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவ ரங்களைத் தருமாறு பல்வேறு தரப்பினர் வேண்டுகோள் விடுத்திருப்பதாலேயே இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன என அதிகாரியொருவர் தெரிவித்தார். (த-ய)

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புநர் தேவை.

**077 343 3890**

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய 45 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. தனிப்பட்டவர். யாருமற்றவர் பொறுப்பற்றவர் விரும்பத்தக்கது.

**076 310 3885**

**மல்லாகத்தில் காணிகள் விற்பனைக்கு உண்டு**

மல்லாகம் K.K.S. வீதியிலுள்ள விசாலாட்சி வித்தியாசாலைக்கு அருகிலுள்ள பாடசாலை ஒழுங்கையில் 7 பரப்புடன் சேர்ந்த வீடும். மற்றும் 5 பரப்புக் காணியும விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 871 4374
021 321 9802

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☎ 021- 2227712
Find us on facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**ஆள் தேவை**

யூஸ் உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு பொதி செய்வதற்கு பெண் வேலை ஆள் தேவை.

**077 833 6501, 077 469 4249**



ஸ்ரீ காளியம்மன் துணை
**பண்டித் - குமார் சாஸ்த்திரி**
**ஸ்ரீ காளியம்மன் ஜோதிட நிலையம்**
தொடர்புகளுக்கு
**077 251 8305 / 077 467 0325**

இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம். கைரேகை பார்த்துப்பலன் சொல்லுவார். கணவன். மனைவி சண்டை பிரிவு. காதல் திருமண தடை. இதுவரை திருமணமே ஆகாதவர்கள் வேலை. தொழில். உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். கண்திருஸ்டி. செய்வினை கோளாறு (Black Magoc) போன்றவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.

**நாதன் இன், 394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
(வெலிஸ்ரன் சந்தியில் இருந்து 100 மீ. பெருமாள் கோயில் போகும் பாதையில்)



**ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வர ஆலய பரிபாலன சபையின் அறிவித்தல்**

இன்று (23.06.2017) வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள கொடியேற்றத்துடன் 16 நாள் திருவிழாக் காலப்பகுதியில் ஆலய சுற்றுப்புற வளாகத்தினுள் வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ள விரும்புவோர் 25.06.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வர்த்தக நடவடிக்கைக்கான இடம் வழங்கப்படும். அத்துடன் திருவிழாக் காலங்களில் காவடியினை வாடகைக்கு விடுவோர்கள் முன்கூட்டியே ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும். மேலும் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அறிவுறுத்தலுக்கு அமைவாக ஆலய சுற்றாடலில் பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனைகள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சபை,
தான்தோன்றீஸ்வரர் ஆலயம், ஒட்டுசுட்டான்.

**தேசிய தொழில் தகைமை (NVQ)சான்றிதழ் பயிற்சிநெறி**

**மூன்றாம் நிலையக்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிநெறிகள்**

**விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சிநெறி**

**தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ Leve 4)**

ஒரு வருட கால பயிற்சிநெறி இதில் 6 மாதகாலம் தொழிலுடனான பயிற்சி (On - the job training) வழங்கப்படும். இப்பயிற்சி நெறியின் பின்னர் பல்கலைக்கல்லூரி , விவசாயக் கல்லூரி மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றில் NVQ மட்டம் 5-6 ஐ தொடரமுடியும்.

NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாயபாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும். 16-26 வயதிற்குட்பட்டவராக இருத்தல்

**பயிற்சிக்கட்டணம் இலவசம் பதிவுக்கட்டணம் 1000**

பயிற்சிநெறியில் சேர விரும்புவோர் 28.06.2017 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், கிராம சேவை யாளரின் நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு : அதிபர்
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம் , சுன்னாகம்.
021 224 1420

**பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**காணி கட்டடம் விற்பனை செய்தல்**

எமது சங்கத்துக்குச் சொந்தமானதும் ஆட்சியிலுள்ளதும் பருத்தித்துறை. தும்பளை வீதியிலுள்ளதும். 2.7 பரப்பினையுடையதுமான அம்புலியக்கலட்டி என்னும் பெயரினையுடைய கட்டடத்துடன் கூடிய காணி விற்பனை செய்யப்படவுள்ளது.

இக்காணியினைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா. 1000/- வை சங்கத்தில் வைப்புச் செய்து கேள்விப் படிவத்தினைப் பெற்று விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

கேள்வி மனு விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 10.07.2017 இற்கு முன்னதாக " **பொதுமுகாமையாளர், பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), கிராமக்கோட்டடி, புலோலி, பருத்தித்துறை** " என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**காணி கட்டடம் விற்பன்னை** " எனக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

கேள்வி மனுவுக்காக வைப்பினைச் செய்யாத விண்ணப்பங்களும் விண்ணப்பத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

கேள்வி மனு நடைமுறைகளை மீறும் விண்ணப்பதாரருக்கு கேள்வி வைப்பு மீளளிக்கப்படமாட்டாது.

காணி கட்டடத்தினை. அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும். மேலதிக விவரங்களுக்கு சங்க தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பொதுமுகாமையாளர்,**
**பரு.ப.தெ.வ.அ.கூ.சங்கம், கிராமக் கோட்டடி,**
**புலோலி, பருத்தித்துறை.** 20.06.2017

**தொலைபேசி இல:**
**021 226 0032**

**அம்மா பரமேஸ்வரி ஜோதிட நிலையம்**
**பண்டித் துளசிராம் சுவாமி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்கள். வம்சாவளியாக அம்மா பரமேஸ்வரி அருள் கொண்டு கைரேகை முகநாடி பிறந்த திகதி நட்சத் திரம் ஜாதகம் ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை. நடக்கப் போகின் றவை இவர் பாரம்பரியமாக ஜோதிடம் சொல்பவர். ஆயுள்பூஜை. லட்சுமிகடாச்சப் பூஜைகள். எல்லா தோசங்க ளுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தாபனங்களுக் கும் பரிகாரம் செய்யப்படும். படிப்பு. தொழில். திருமண யோகம். குழந்தைப் பாக்கியம். , கணவன் மனைவி ஒற்றுமை. ககல்யாண யோகம். எதிரிகள் கண்திருஸ்டி. கோட் வழக்குகள். வசிகரம் செய்யப்படும். எண்கணிதப்படி மண மக்கள் பொருத்தம் பார்க்கப்படும். நம்பிக்கையுடன் இவரை ஒருமுறை சந்தியுங்கள்.

**நேரம்: காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (முலைவச் சந்தி அருகில்) **T.P: 077 2186 324**

**அறிவித்தல்**

21.06.2017 அன்று இளம் பொருளியலாளர் மன்றத்தினால் பொருளியல்துறை மண்டபத்தில் குலுக்கப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டு முடிவுகள் பின்வருமாறு

| | | அதிஸ்டலாபச் சீட்டு இலக்கம் |
|---|---|---|
| 01) முதலாம் பரிசு | - அ. அஜந்தன் | 2744 |
| 02) 2ஆம் பரிசு | - M.நுசந்தினி | 7466 |
| 03) 3ஆம் பரிசு | - Jeeva | 104 |

ஆறுதல் பரிசுகள்

1) K.Vimalathasan - 2609 2) R.Thanusan - 5268 3) T.Sutharsan -2987
4) Uma - 7506 5) S.Sajith - 6806

மேற்கூறப்பட்ட அதிஸ்டசாலிகள் தங்களது பரிசில்களை 30.06.2017 இற்கு முன்னர் அதிஸ்டலாபச் சீட்டுடன் பொருளியல் துறைக்கு வந்து பெற்றுக் கொள்ளவும்.

- நிர்வாகம் -

**சிறுநீரகம் உடன் தேவை**

$B^+$ or $B^-$ or $O^+$ or $O^-$ வகைச்சிறுநீரகம் உடன் தேவை.
வயதெல்லை ஆண் - 25 இற்கு மேல்
பெண்- 30 இற்கு மேல்
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 087 8973, 076 627 7485**

**வேலைவாய்ப்பு**


உல்லாச பயண சபையின் அனுமதியுடன் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல்யமான ஹோட்டலுக்குக் கீழ்வரும் தகுதியான பணியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

1. ஹோட்டல் முகாமையாளர் -Hotel Manager
   (ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி பெற்றவர்கள் விரும்பத்தக்கது)
2. கணக்காளர் Accountant - ஆண் / பெண்
3. வரவேற்பாளர் Receptionist - ஆண் / பெண்
   (ஆங்கில மொழி தொடர்பாடல் முக்கியம். அத்துடன் சிங்களமொழி விரும்பத்தக்கது)
4. காசாளர் Cashier - ஆண் / பெண்
5. சமையலாளர் Cook - ஆண் / பெண்
   (யாழ்ப்பாண சமையல் முறைப்படி சமைக்கக் கூடியவர்கள்)

குறிப்பு :-
பெண்களுக்குப் பாதுகாப்பான தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:-
077 798 3933, 077 085 6058

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லையா குணபாலசிங்கம்**
(காணி வெளிக்கள போதனாசிரியர் பிரதேச செயலகம் - ஒட்டுசுட்டான்)

மலர்வு 23.09.1956 — உதிர்வு 04.07.2016

**திதி: 23.06.2017**

அன்பின் இலக்கணமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் நற்குணங்களின் சிகரமாய்
எங்கள் குடும்பத் தலைவனாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே நீங்கள்
எங்களை விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு நீங்காது
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்

முதலாம் வட்டாரம்,
முள்ளியவளை.

அன்பு மனைவி, மகன்,
உறவினர்கள்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 24.05.2017 அன்று
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

**திருமதி சிவலிங்கம் கனகமணி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.06.2017) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 23.11.1950 — மறைவு 24.05.2017

குடும்பத்தினர்
துப்பிளான் தெற்கு, ஏழாலை.

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்
தோட்டவெளியை வசிப்பிடமாகவும் கொண்ட
திருவாளர்

**தோமஸ் அல்போன்ஸ்**



விண்ணுலகம் அடைந்த முதலாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 17.05.1938 — மறைவு 23.06.2016

உயிரும் உயிர்ப்பும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்
யோவான் 14: 25

இவர் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**துளசிமலர் இரவீந்திரன்**



பிறப்பு 08.03.1962 — இறப்பு 04.07.2016

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் மணி விளக்காய்
வானுலகு போகும்வரை வறுமை அறியாளாய்
இழந்தோம் நாமின்று ஏங்கியே தவிக்கின்றோம்
நெஞ்சில் இருத்தி உம்மை நித்தம் பூசித்து
நின் ஆத்மா சாந்தியுற வேண்டி
நிகரற்ற பரமாத்மாவை வணங்குகின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலல் அழைப்பும்

பிறப்பு 15 . 06 . 1932



இறப்பு 24 . 06 . 2017

**அமரர் சின்னப்பு இராயப்பு**

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

கடந்த 24.05.2017 புதன்கிழமை யேசுவின் சித்தப்படி இவ்வுலகில் வாழ்ந்து உம்பாதம் எய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னப்பு இராயப்பு அவர்களின் ஆன்மா இளைப்பாற்றிற்காக இன்று (23.06.2017) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு அல்லாரை செபமாலை மாதா ஆலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

வெள்ளாம் போக்கட்டி
கொடிகாமம்.

உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 786 9519

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 24.05.2017 புதன் கிழமை
சிவபதமெய்திய எமது குடும்பத்தலைவி

**அமரர் அப்புத்துரை நல்லம்மா**



தோற்றம் 10.03.1933 — மறைவு 24.05.2017

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள்
21.06.2017 புதன்கிழமை கீரிமலை புனித
தீர்த்தகரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (23.06.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவி ருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியை களிலும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருதங்குளம், மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

குடும்பத்தினர்.

# தமிழர்களுக்குத் தமிழீழத்தை ஐ.நா. பெற்றுக்கொடுக்கும்

## இப்படிக் கூறிப் பதறுகின்றார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஜூன் 23
சர்வதேச சட்டங்களை மீறி தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு அதற்கான நிவாரணமாகவே சர்வதேசத்தால் தமிழீழம் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. வடக்கு, கிழக்கில் தமிழீழம் அமையப்போவது துப்பாக்கி முனையில் அல்ல: சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஜனவரி 8ஆம் திகதிக்கு முன் சர்வதேசச் சதி பற்றி நாம் கூறியது எல்லாம் ஒரு கேலியான விடயம் போல்தான் சிலருக்குத் தெரிந்தது. ஆட்சி மாற்றத்தின் பின் பன்னாட்டுத் தலையீடுகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதை எம்மால் இப்போது உணர முடி கின்றது.

2015 இல் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட ஜெனிவாத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோருகின்றது. அரசு அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றத் தவறினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பன்னாட்டுச் சட்டத்தின்படி பெற்றுக் கொடுக்க வேண்டிய அனைத்தையும் ஐ.நா பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். பன்னாட்டு அழுத்தம் காரணமாகவே காணாமற் போனோர் சட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழர்களுக்கு எதிராக போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன என்றும், அவர்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்றும் ஜெனிவா தீர்மானத்துக்கு இலங்கை அரசு அனுசரணை வழங்கியதன் மூலம் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமாக ஐ.நா. தமிழீழத்தை இலகுவாகப் பெற்றுக் கொடுத்துவிடும்.

புதிய அரசமைப்பில் நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றை இந்த அரசு வடக்கு, கிழக்குக்குக் கொடுத்ததும் தமிழீழம் உருவாவதற்கு இலகுவானவழி ஏற்படும். அந்த ஏற்பாட்டின் ஊடாக ஐ.நா. தமிழீழத்தை உருவாக்கிக் கொடுக்கும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பன்னாட்டுச் சட்டத்தின் அடிப்படையில் நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூறி விரைவில் ஜெனிவாவில் பிரேரணை ஒன்று கொண்டு வரப்படும். அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு தமிழீழம் உருவாக்கப்படும்.

இலங்கை இப்போது எதிர்நோக்கி இருக்கும் ஆபத்து இது. இலங்கையின் தலையெழுத்தைத் தீர்மானிப்பது இலங்கை மக்கள் அல்ல பன்னாட்டுச் சக்திகள்.

அதற்கான வழியை இந்த அரசு திறந்து விட்டுள்ளது. மகிந்தவின் ஆட்சில் இந்த வழியை அடைத்தே வைத்திருந்தோம்.

போரால் பிரிக்கப்படவிருந்த நாடு இப்போது சர்வதேச சட்டத்தை வைத்துப் பிரிக்கப்படப் போகின்றது. இது நடந்தால் அதை மீளப்பெற முடியாது. பிரிக்கப்பட்ட நாட்டை மீண்டும் இணைக்க முடியாது என்றார். (த-ய)

## இடரினால் பாதிக்கப்பட்ட மாணவருக்குப் புதிய சீருடை

கொழும்பு, ஜூன்22
இயற்கை இடரில் பாதிக்கப்பட்ட 58,000 இற்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்குப் புதிய சீருடைகள் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

முதல்கட்டமாக மாணவர்களுக்குப் புதிய சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட ஏனைய உபகரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவா விதாரன தெரிவித்துள்ளார்.

கொழும்பு, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் குறித்த வேலைத்திட்டம் முதலில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ய)


### மரண அறிவித்தல்கள்

## திருமதி சரோஜினிதேவி கனகலிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி கனகலிங்கம் 21.06.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா கனகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் கிருஷ்ணவேணி (கனடா), கஜேந்திரகுமார் (ஆஸ்திரேலியா), நந்தகோபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற இராஜகுலசிங்கம் மற்றும் கமலாதேவி, ஜெயவீரசிங்கம், பரராஜசிங்கம், சாந்தாதேவி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தர் (கனடா), அமலா (ஆஸ்திரேலியா), தர்ஷினி (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப.9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
021 205 2697

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

### மரண அறிவித்தல்

## சபாரட்ணம் நகுலேஸ்வரன்

(இளைப்பாறிய நீர்ப்பாசனத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்)



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை சிவலிங்கப்புளியடியைப் பிறப்பிடமாகவும், 34/3, செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் நகுலேஸ்வரன் நேற்று (22.06.2017) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - மாணிக்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், யோகேஸ்வரன், நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், உமாசங்கர் (அஞ்சலகம் - யாழ்ப்பாணம்), குஷாந்தினி ஆகியோரின் தந்தையும், முரளிதரன் (ஹாட்லிக் கல்லூரி), கார்த்திகா ஆகியோரின் மாமனாரும், மதுராங்கனி, கவிதாங்கனி, செந்தூரன், ரஜிதாங்கனி, ரமணன் ஆகியோரின் தாய்மாமனும், மணிகண்டனின் பெரிய தந்தையும், நடராசா, புவனேஸ்வரி, காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் துரைசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், மேதினிகா, கோகனன், சாய்தனியா, ஆகர்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2017) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34/3, செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.



மண்ணில்
02 . 09 . 1957

விண்ணில்
21 . 06 . 2017

## அருட்தந்தை கிருஸ்ரி செல்வராஜா

(திருவுளச்சபை)

இலங்கை திருவுளச்சபையை சார்ந்த அருட்தந்தை கிறிஸ்ரி செல்வராஜா அடிகள் கடந்த 21.06.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அடிகளின் உடல் யாழ். திருவுளச்சபை உருவாக்க தளத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (24.06.2017) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்
திருவுளச்சபை, இலங்கை

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்

(புங்குடுதீவு 12 ஆம் வட்டாரம்)

அன்னை மடியில்
20.05.1935

ஆண்டவன் அடியில்
25.05.2017

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (24.06.2017) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் அமரத்துவம் அடைந்த நேரம் சகல வழிகளிலும் உறுதுணை புரிந்து அஞ்சலி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும் மற்றும் வெளிநாட்டில் இருந்து அனுதாபம் தெரிவித்த எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

இல.07, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## நெஞ்சங்கள் நிறைந்த நினைவஞ்சலி

யேசுமரியை சூசை துணை

மண்ணகத் தாயின் மடியில்
15.01.1915



விண்ணகத் தாயின் மடியில்
23.06.1990

### அமரர் வயித்தியான் மரிசிலின்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

யேசுமரியை சூசை துணை

மண்ணக அன்னையின் மடியில்
10.06.1926



விண்ணக அன்னையின் மடியில்
15.05.1993

### திருமதி திரேசம்மா மரிசிலின்

"தெய்வம் தொழா அள் கொழுநன் தொழு (து) எழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

எங்களை வாழ வைத்த தெய்வங்களை அன்புடன் நினைவு கூரும்
மருமகன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

16/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

# அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்பாடு புதுப்பிக்கப்படும்

*சபையில் கூறினார் தலைமை அமைச்சர்*

கொழும்பு, ஜூன்23
2007ஆம்ஆண்டுஅமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்புஒத்துழைப்பு உடன்பாட்டைப்புதுப்பித்துக் கொள்வதற்கு அரசு முடிவு செய்துள்ளதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர்,
2007இல்அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட கையகப்படுத்தல்மற்றும்குறுக்குச் சேவைகள்உடன்பாடு இந்த ஆண்டுடன் செல்லுபடியற்றதாகிறது. இதனைப் புதுப்பிக்கஅரசுமுடிவுசெய்துள்ளது.
இந்த உடன்பாடு பாதுகாப்புத் துறையில் இலங்கையின் ஆற்றலை வலுப்படுத்தும். அத்துடன் எமது படைகளுக்குப் பயிற்சி மற்றும் திறன் விருத்தி வாய்ப்புகள் கிடைக்கும். இரு நாடுகளுக்கும் இடையிலான இயங்கு திறனுன் அதிகரிக்கும்.
இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு, கால அவகாசம் தேவைப்படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.
உடன்பாடுவரையப்பட்டபின்னர் அதுநாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அது தொடர்பாகவிவாதமும்நடத்தலாம். அணிசேரா கொள்கையை விட்டு எமது வெளிவிவகாரக்கொள்கை விலகிச் செல்லாது -என்றார். (த-ய)

# கழிவுகள் தேங்கிக்கிடப்பதே டெங்குநோய் பரவக் காரணம்

**மருத்துவர்கள் சங்கம் குற்றச்சாட்டு**

கொழும்பு, ஜூன்23
திண்மக் கழிவுகள் உரிய நேரத்தில் அகற்றப்படாமல் குவிக்கப்படுவதே டெங்கு நுளம்புகள் பெருகுவதற்குப் பிரதான காரணமென அரசமருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
சங்கத்தின் பேச்சாளர் டாக்டர் சமந்த ஆனந்த தெரிவிக்கையில்:
கடந்த ஆறுமாதங்களில் நாட்டில் 63,987 டெங்கு நோயாளர்கள் இனங்கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 200 பேர் உயிரிழந்துள்ளனர். நிலைமைமிகவும்விபரீதமாகியுள்ளது. திண்மக்கழிவுகளைக் கிரமமாக அகற்றும் வரையில் இந்தநோயைக்கட்டுப்படுத்த முடியாது - என்றார். (த-ய)

# தேரர்களை கண்டபடி கைது செய்ய முடியாது

## இதனாலேயே ஞானசாரரைக் கைது செய்வதில் இழுபறிநிலை ஏற்பட்டது என்கிறது பொலிஸ்

கொழும்பு, ஜூன்23
பொதுமகன் ஒருவரைக் கைதுசெய்வதற்கும், தேரர் ஒருவரைகைதுசெய்வதற்குமிடையே பெரும் வித்தியாசங்கள் உள்ளன. இதனால்தான் ஞானசார தேரரைக் கைது செய்வதில் இழுபறி நிலையேற்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன் தினம் அரச தகவல் திணைக்களத்தில்நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கேள்வி பதில் நேரத்தில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



“பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்து சிவில் இடங்களுக்குச் சர்வ சாதாரணமாகச் செல்ல முடியும். இந்த நடைமுறை விகாரைகளுக்குள் சாத்தியப்படாது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்து சிவில் இடங்களுக்குச் சர்வ சாதாரணமாகச் செல்ல முடியும். இந்தநடைமுறைவிகாரைகளுக்குள் சாத்தியப்படாது.
இதன்காரணமாகவேஞானசாரதேரரைப்பொலிஸாரால் கைதுசெய்ய முடியாது போனது. நாமும் அவரைக் கைதுசெய்ய கடந்த மூன்று வாரங்களாகத் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்தோம். எனினும், எம்மால் கைது செய்யமுடியாது போய்விட்டது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இந்த விடயமானது நிச்சயமாக எமக்கு வெற்றியான ஒன்றல்லஎன்றார். (த-ய)

# டெங்கு ஒழிப்புக்கு சுதந்திரக் கட்சியின் சிறப்புச் செயலணி

கொழும்பு, ஜூன்23
டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் பணியில் சுதந்திரக் கட்சியின் ஐயாயிரம் இளைஞர், யுவதிகளைக்கொண்ட செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது எனக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் தெரிவித்தார்.
இந்தச் செயலணி நாட்டின் சகல பிரதேச செயலாளர் மட்டங்களிலும் பணிகளை ஆரம்பித்துள்ளது.
சிறப்பாக, உள்ளூராட்சி மன்றங்களால் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்புப் பணிகளுக்கு இவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள். இந்தப் பணி தொடர்ந்துமூன்றுமாதங்களுக்கு முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (த-ய)

# பிணைமுறிகள் விவகாரத்தில் சட்டம் மௌனம்

*ரில்வின் சில்வா ஆதங்கம்*



கொழும்பு, ஜூன்23
மத்தியவங்கிபிணைமுறிமோசடிகள் இடம்பெற்று இரண்டு வருடங்களாகியும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் விடயத்தில்சட்டம்இன்னமும்மௌனம் காத்துவருகின்றதுஎனமக்கள்விடுதலை முன்னணியின்செயலாளர்ரில்வின்சில்வாகுற்றஞ்சாட்டினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மோசடியில்ஈடுபட்டவர்களைத்தண்டிப்பதற்குஅரசுதயக்கம் காட்டிவருவதால் குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இந்தவிவகாரத்தைவிசாரித்தஆணைக்குழுமோசடிகள் அனைத்துக்கும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனே பொறுப்பு எனத் தெரிவித்துள்ளது. இருந்தபோதிலும் மகேந்திரன் தற்போதும் தந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார் என்பது அரசின் பராமுகத்துக்கு நல்ல உதாரணம். எனவே, அரசு பிணைமுறி மோசடியாளர்களுக்கு உரியதண்டனைகளை வழங்கவேண்டும் -என்றார். (த-ய)

# கொழுத்த சம்பளம் பெறும் எயார்லைன்ஸ் அதிகாரிகள்

*அறிக்கை முன்வைக்குமாறு பணிப்பு*

கொழும்பு, ஜூன்23
சிறிலங்கன்எயார்லைன்ஸ் விமான நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சம்பளங்கள் பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.
இது தொடர்பாக அண்மையில்அமைச்சரவைக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இதன்போது குறித்த நிறுவனத்தின்பணிப்பாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். நிறுவனத்தில் நிலவும் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் பற்றி இங்கு ஆராயப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவரின் மாதாந்தச்சம்பளம்13ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ்கள் எனவும்தெரிவிக்கப்பட்டது.
எனவே, அவர்களின்மாதாந்தச் சம்பளங்கள் பற்றிய அறிக்கையொன்றை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு அரச தலைவர் உத்தரவிட்டிருக்கிறார். (த-ய)

# அரச ஊடக நிறுவனங்களின் தலைவர் பதவிகளில் மாற்றம்

கொழும்பு, ஜூன்23
அரச ஊடக நிறுவனங்கள் சிலவற்றின் உயர் பதவிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக சுதர்சன குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.
எனினும், சுயாதீன தொலைக் காட்சி மற்றும் தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை.
அத்துடன், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் புதிய தலைவராக கிறிசாந்த குரே நியமிக்கப்படவுள்ளார். (த-ய)

# நுவரெலியா இணைப்புக்குழு தலைவராகத் திலகராஜ் எம்.பி.

நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். ஒருங்கிணைப்புக்குழு தலைவராகச் செயற்பட்ட மலைய புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.
இந்த நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் அந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். (த-ய)

# ஜேர்மனி டுசில்டோர்வ் நகரிலுள்ள கற்பக விநாயகர் ஆலய குடமுழுக்கு

கொழும்பு, ஜூன் 23
ஜேர்மனியின் டுசில்டோர்வ் மாநிலத்தின் மேபுஷ் நகரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கற்பக விநாயகர் ஆலயத்தின் குடமுழுக்கு நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம்ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.
நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணி முதல் 10.40 மணி வரையுள்ள சுபநேரத்தில் விநாயகப் பெருமானுக்குக் குடமுழுக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
ஹெயர்லாண்ட் (ஹொலண்ட்), லிம்பேர்க் முருகன் கோயிலைச் சேர்ந்தசிவாகமபூஷணம், சிவாகம ஞான சூரியன் அகோர சிவாச்சாரியார் சிவஸ்ரீ உருத்திரானந்தக் குருக்கள் பிரதிஷ்டா குருவாக அமர்ந்து குடமுழுக்கை நடத்தி வைப்பார். (த)



# மோசடிக் குற்றவாளிகள் விரைவில் சிறை செல்வர்

*அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு*



கொழும்பு, ஜூன்23
மத்தியவங்கிபிணைமுறி மோசடிக் குற்றவாளிகள் விரைவில் சிறைக்குச் செல்வார்கள்என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொதுமக்களின்பணத்தைக்கொள்ளையிட்ட அரசியல்வாதிகளும், அவர்களுக்குத் துணைபோன அதிகாரிகளும்சட்டத்தின்பிடியிலிருந்து தப்பிவிடமுடியாது. அவர்கள் கொள்ளையிட்டுத் தேடிய சொத்துகள் அனைத்தும் அரசுடமையாக்கப்படும்.
இந்தக்கொள்ளைக்கு உடந்தையாக இருந்த பல அதிகாரிகள்பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். எனினும், பணி இடைநிறுத்தம் மாத்திரம் அவர்களது குற்றங்களுக்குத்தீர்வாகாது. அவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டும் என்றார். (ய)

# மூத்த ஊடகர் குகநாதனுக்கு சுவிஸில் பாராட்டு விழா

பேர்ண், ஜூன் 23
புலம்பெயர்ந்து வாழும் மூத்த ஊடகவியலாளர் ஞா. குகநாதன் ஊடகப் பணியில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்ததை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழா சுவிஸ் சென் மாக்கிறத்தன் நகரில் அண்மையில் நடைபெற்றது.



சென் மாக்கிறத்தன் கதிர்வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் இந்த விழா ஆலய மண்டபத்தில் தலைவர் வே. கணேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.
உதயன் பத்திரிகையின் முன்னைநாள் செய்தி ஆசிரியருமான ஞா. குகநாதன் 15 வயதில் ஊடகப் பணியை ஆரம்பித்தார். ஈழமுரசு, உதயன் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களில் பணியாற்றிய இவர், ஈழநாடு, தினபதி, ஈழமுரசு, உதயன் ஆகிய பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராகவும் பணியாற்றினார். தனது பணிக் காலத்தில் பல இளம் பத்திரிகையாளர்களை உருவாக்கியவர் அவர். பல ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார்.
போர்ச் சூழல் காரணமாகப் பல ஊடகவியலாளர்கள் புலம் பெயர்ந்த போதிலும் தான் பிறந்த மண்ணை விட்டு அகலுவதில்லை என்ற விடாப்பிடியான கொள்கையுடன் செயற்பட்டு வந்த அவர், பல சந்தர்ப்பங்களில் கொலை முயற்சிகளில் இருந்து தப்பியிருந்தார்.
அவர் மீதான கொலை முயற்சி போர் முடிவுற்ற காலத்திலும் தொடர்ந்ததை அடுத்து, கடுமையான தாக்குதலுக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சுவிஸ் நாட்டுக்கு புலம் பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.
தற்போது சுவிஸ் நாட்டில் வாழும் குகநாதனின் 50 வருட ஊடகப் பணியைப் பாராட்டி அவருக்கு "நவயுக நக்கீரன்" என்ற பட்டம் ஆலய பரிபாலன சபையினரால் வழங்கப்பட்டது.
இந்த நிகழ்வில் பிரான்ஸ் மனித உரிமைகள் மையத்தின் இயக்குநர் ச.வி. கிருபாகரன், மூத்த ஊடகவிலாளர்களான இரா.துரைரெத்தினம், சண் தவராஜா, விடுதலைப் புலிகள் ஏட்டின் முன்னைநாள் ஆசிரியர் ரவீந்திரன், சுவிஸ் உதயதாரகை பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும் லொசான் மாநகரசபை உறுப்பினருமான தம்பிப்பிள்ளை நமசிவாயம், விடுதலைப் புலிகளின் முன்னாள் சுவிஸ் பொறுப்பாளர் செ. குலம், சுவிஸ் தமிழ்க் கல்விச் சேவை அமைப்பின் பொறுப்பாளர் க. பார்த்திபன் ஆகியோர் உட்படப் பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (த)

## மீன்பிடித் துறையில் முதலிட சீனா ஆர்வம்

கொழும்பு, ஜூன் 23
இலங்கையில் மீன் உற்பத்தியில் முதலீடு செய்வதற்குச் சீன முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.
சீன முதலீட்டாளர்களுக்கும் மீன்பிடி மற்றும் நீரியல் வள இராஜாங்க அமைச்சர் திலிப் வேதஆராச்சிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
மீன் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளுக்கு முதலீடுகளை மேற்கொள்ளத் தாம் தயாராகவுள்ளனர் என சீன முதலீட்டாளர்கள் கூறியுள்ளனர்.
சீனாவிலுள்ள மேலும் சில முதலீட்டாளர்களையும் இதன் பொருட்டு அனுப்பிவைக்க முடியும் என முதலீட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர் என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு அறிவித்துள்ளது. (த-ய)

# காணாமல்போனோருக்கான அலுவலகம் பொறுப்புக்கூறும் கட்டமைப்பை கொண்டதல்ல

## கூறுகிறார் அமைச்சர் சுவாமிநாதன்

கொழும்பு, ஜூன்23
காணாமல்போனோர் அலுவலகமானது சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கான கட்டமைப்போ, பொறுப்புக்கூறலுக்கான அமைப்போ அல்ல எனப் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற காணாமற்போனோர் அலுவலகம் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசு கடந்த காலத்தில் அளித்த வாக்குறுதியின் பிரகாரமே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்திற்கான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.



இது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவான கட்டமைப்பல்ல. பொறுப்புக்கூறலுக்கான அமைப்பும் அல்ல. சட்டத்தின் 132 பிரிவுக்கமைய இந்த அலுவலகத்தினால் கண்டுபிடிக்கப்படும் விடயங்களைக் கொண்டு சிவில் அல்லது குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.
இந்த அலுவலகத்துக்கு கிடைக்கும் சகல தரவுகளினதும் இரகசியம் பேணப்படும் எனச் சட்டத்தின் 15ஆவது சரத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் இந்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. நீதிமன்றத்தின் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியாது.
அத்தோடு, இந்த அலுவலகம் ஒரு இனம் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மாத்திரம் அமைக்கப்படவில்லை. இலங்கை முழுவதும் நடைபெற்ற காணாமல்போன சம்பவங்களை ஆராயவே அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, சிங்களம், தமிழ், முஸ்லிம் எனஎவ்விதபாகுபாடும்இன்றி இந்த அலுவலகத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (த-ய)

# புலிகளைவிட ஜே.வி.பியால் நாட்டுக்கு அதிகளவு சேதம்

## விஜயபால எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 23
30 வருடப் போரின் மூலம் நாட்டுக்குப் புலிகள் ஏற்படுத்திய சேதத்தைவிட ஜே.வி.பி. ஏற்படுத்திய சேதங்கள்தான் அதிகம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசியல் அதிகாரம் இல்லாதவர்கள் இந்த அரசுக்கு எதிராக எதையும் கூற முடியும். ஜே.வி.பி. கண்ணை மூடிக் கொண்டு அரசை விமர்சிக்கின்றது. நாம் ஜனநாயகத்தை மதித்துச் செயற்படுவதாலேயே ஜே.வி.பிக்கு நாடாளுமன்றில் பிரதான எதிர்க்கட்சி பதவியும் கோப் குழுவின் தலைவர் பதவியும் கொடுத்தோம்.
இந்த நாட்டை முன்னேற்றுவதற்காக எதையும் விட்டுக்கொடுக்க நாம் தயார். மகிந்த வந்துஎம்முடன் இணைவதற்கு விரும்பினாலும் இணைத்துக் கொள்வோம்.
ஜே.வி.பி. எந்தவித அடிப்படையும் இன்றி எமது அரசை விமர்சிக்கின்றது. இவர்களால் ஆட்சி நிர்வாகத்தை ஏற்று நடத்த முடியாது. மகிந்த ஆட்சியில் அமைச்சுப் பதவிகளை ஏற்று ஒரு வருடத்திலேயே விட்டு விட்டு ஓடிவிட்டனர். ஆட்சித் திறன் அவர்களிடம் இல்லை. விமர்சிக்கும் திறன்தான் உண்டு.
30வருடங்கள் புலிகள் ஏற்படுத்திய சேதத்தை விட ஜே.வி.பி. ஏற்படுத்திய சேதம்தான் அதிகம். அப்படிப்பட்டவர்கள் எமது அரசைவிமர்ச்சிப்பதற்குத் தகுதியற்றவர்கள். அவர்கள் தமது கசப்பான, இந்த நாட்டுக்கு விரோதமான கடந்த காலம் குறித்துச் சிறிது எண்ணிப்பார்க்கவேண்டும்- என்றார். (த-ய-3)

## மொரகஹகந்த திட்டத்தில் விரைவில் மின்னுற்பத்தி

கொழும்பு, ஜூன் 23
இரத்தினபுரி மாவட்டத்தின் மொரகஹகந்த நீர்மின்னுற்பத்தி நிலையத்தில் ஆய்வுப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் அதன் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
தேசிய மின்கட்டமைப்புக்கு 25 மெகவோட் கொள்ளளவு மின்சாரத்தை சேர்க்கக்கூடிய மொரகஹகந்த நீர் மின்னுற்பத்தி நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் எதிர்வரும் மழைக்காலத்துடன் மின்னுற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் குறுகிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மின்னுற்பத்தி நிலையம் இதுவாகும்.
மொரகஹகந்த நீர்த்தேக்கமானது கடல் மட்டத்திலிருந்து 132 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

# கட்டார் வாழ் இலங்கையர் அச்சம் கொள்ளவேண்டாம்


## அந்த நாட்டுத் தூதரகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 23
கட்டாரில் வாழும் இலங்கையர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என கட்டார் தூதரகம் அறிவித்துள்ளது.
கட்டாரில் தங்கியிருக்கும் ஒரு லட்சத்து 50ஆயிரம் இலங்கையர்களை அந்நாடு வெளியேறப்போவதாக, கட்டாருக்கான இலங்கைத் தூதுவர் ஏ.எஸ்.பி.லியனகேயை மேற்கோள் காட்டிச் சில ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
இலங்கை அயலுறவு அமைச்சு மற்றும் கட்டாரிலுள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவற்றுடன் இலங்கையிலுள்ள கட்டார் தூதரகம் தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டபோதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
அத்துடன் மேற்படி செய்தி தவறானது என்றும் தற்போதைய களநிலவரங்கள் குறித்து கட்டாரில் வாழும் இலங்கையர்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
சில வளைகுடா நாடுகள் கட்டாருடனான தமது இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்டு அந்த நாடு மீது விதித்துள்ள தடை நாட்டின் பொருளாதார, வர்த்தக உறவுகளில் எந்தவிதமான பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. அந்த நாட்டுக் குடிமக்கள் மற்றும் அங்கு வாழும் 150,000 இலங்கையர் உட்பட வெளிநாட்டவர்கள் அனைவரினதும் சாதாரண வாழ்க்கையில் எந்தப் பாதிப்பையும் அது ஏற்படுத்தவில்லை.
எனவே, இரு நாட்டினதும் உத்தியோகபூர்வ ஊடக அறிக்கைகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பக்கசார்பற்ற செய்திகளை வெளியிடுவதன் மூலம் மாத்திரமே இலங்கை - கட்டார் நட்பு உறவுகளைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும் என கட் டார் தூதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-ய)

# கொழும்பு நகருக்குள் விரைவில் படகுச்சேவை

## போக்குவரத்து நெரிசலைக் குறைக்க

கொழும்பு, ஜூன்23
கொழும்பு நகருக்குள் போக்குவரத்து படகுச் சேவையொன்றை ஆரம்பித்து வைப்பதற்கு நகர அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
மட்டக்குளி - வெள்ளவத்தை, வெள்ளவத்தை - பத்தரமுல்லை, கொழும்பு ஹங்வெல்ல ஆகிய நகரங்களுக்கு இடையில் இந்த போக்குவரத்துப் படகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.
நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
இதேவேளை, கொழும்புநகர் மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் அமைந்துள்ள ஏரிகள் மற்றும் கால்வாய்களைப் பயன்படுத்தி இந்தப் படகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. (த-ய)



பிரிட்டனில் உள்ள ஸ்டோன் ஹென்ஞ் என்றும் கற்கால நினைவுச் சின்னம் யுனெஸ்கோ அமைப்பால் உலகப் பாரம்பரிய இடமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் காலம் தொடர்பில் முன்பின் முரணான கருத்துக்கள் இருந்தாலும் கிறிஸ்துவுக்கு முன்னர் 2500 தொடக்கம் கிறிஸ்துவுக்கு முன்னர் 2000 வரையிலான காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று பொதுவான கருத்துண்டு. இந்த நினைவுச் சின்னத்துக்குப் பல நூற்றுக்கணக்கான மக்கள் சென்று சூரிய உதயத்தைக் காண்பது பழமைவாய்ந்த மரபாக இருந்து வருகிறது. (ம)

## 2 தினங்களில் மின்னல் தாக்கி 22 பேர் சாவு

டாக்கா, ஜூன் 23
பங்களாதேஷில் கடந்த ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை என இரண்டு தினங்களில் மட்டும் மின்னல் தாக்கி 22 பேர் உயிரிழந்துள்ளனர்.
பங்களாதேஷில் ஆண்டுதோறும் மின்னலுக்கு நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பது தொடர்கதை ஆகி வருகிறது.
கடந்த ஆண்டு அங்கு மின்னலுக்கு 200 பேர் உயிரிழந்தனர். குறிப்பாக கடந்த ஆண்டு மே மாதம் ஒரே நாளில் மின்னலுக்கு 82 பேர் உயிரிழந்தனர்.
தற்போதைய பருவநிலை மாற்றம். இந்த மின்னல் தாக்குதலை மேலும் அதிகரிக்கச்செய்துள்ளது.
காடுகளை அழித்ததும், பனைமரம் போன்ற உயரமான மரங்களை வெட்டியதும் மின்னல் தாக்குதலுக்கு சில காரணங்களாக சொல்லப்படுகிறது.
இந்த நிலையில் கடந்த 18, 19 ஆகிய இரு தினங்களில் அதாவது 48 மணி நேரத்தில் மின்னல் தாக்கியதில் 22 பேர் உடல்கருகி உயிரிழந்தனர். (ம)

## பா.ஜ.கவின்

சென்னை, ஜூன் 23
இந்தியாவின் குடியரசுத் தலைவர் தேர்தலி
நாட்டின் ஆளும் கட்சியான பா.ஜ.கவினா
தப்படும் வேட்பாளருக்கு ஆதரவு கொ
முடிவை தமிழகத்தின் ஆளும் கட்சியான
கழகம் எடுத்துள்ளது.
குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின்
காலம் முடிவடைகிறது. இதனால் அந்த இ

## ஐ.எஸ்ஸின்
## அமெரிக்கத்

டமஸ்கஸ், ஜூன் 23
சிரியாவில் அமெரிக்க கூட்டுப்படையினர் நடத்திய வான் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைமை மதகுரு கொல்லப்பட்டார் என்ற தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளன.
சிரியாவில் கடந்த 6 ஆண்டுகளாக உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகிறது. அதிபர் அசாத் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியாளர்கள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும் சிரியாவில் வலுவாக வேரூன்றியுள்ளது.
ஈராக் நாட்டின் பாக்தாத் நகரை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைமை மதகுருவாக துர்கி பின் அலி செயற்பட்டு வந்தார். கடந்த மே மாதம் சிரியாவின் மயாதீன் நகரில்

## காங்கோவில் கலவரங்களால் 8 மாதத்தில் 3,300 பேர் உயிரிழப்பு

கின்ஷிசா, ஜூன் 23
ஆபிரிக்க நாடான காங்கோவில் நடைபெற்று வரும் உள்நாட்டு கலவரத்தில் கடந்த 8 மாதங்களில் மட்டும் 3 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்தனர் என்ற அதிர்ச்சிகர தகவல் வெளியாகியுள்ளது.
மத்திய ஆபிரிக்க நாடான காங்கோ குடியரசில், கஸாய் பிராந்தியத்தில் அரச படையினருக்கும், பழங்குடியின கிளர்ச்சியாளர் படைக்கும் இடையே தொடர்ந்து போர் நடந்து வருகிறது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் இந்தப் போரில் சிக்கி 3 ஆயிரத்து 300க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று உள்நாட்டு ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டன.
இந்தப் போரில் கஸாய் பிராந்தியத்தில் உள்ள சுமார் 20 கிராமங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பகுதியில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டு மொத்தமாக ஒரே குழிகளில் புதைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று ஐ.நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் விரைவில் வாக்கெடுப்பு நடத்த உள்ளது. (ம)

## தொன் கணக்கான வெடிபொருள்கள் ரக்கா நகர வீடுகளுக்குள் பதுக்கல்

டமஸ்கஸ், ஜூன் 23
சிரியாவின் ரக்கா நகரில் தமது கட்டுப்பாட்டில் இருந்த நூற்றுக்கணக்கான வீடுகளுக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தொன் கணக்கான வெடிபொருள்கள் மற்றும் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருந்த தகவல் தற்போது வெளிவந்துள்ளது.
சிரியாவின் முக்கியமான நகர்களில் ஒன்றான ரக்காவின் பெரும் பகுதி ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து தற்போது மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட பகுதிகளில் தீவிர சோதனை நடத்தப்படுகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் பயன்படுத்தப்பட்ட வீடுகள் மற்றும் குடியிருப்புத் தொகுதிகளில் சோதனை மிகவும் உச்சமாக நடத்தப்படுகிறது. நூற்றுக்கணக்கான வீடுகளில் இருந்து தொன் கணக்கில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான ஒளிப்படங்களைப் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. (ம)



## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பி
## மீட்கப்பட்ட மிதிவெடிகள

சிரியாவின் ரக்கா நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு புதைத்து வைத்திருந்த ஒருதொகுதி மிதிவெடிகளை சிரியா இராணுவம் அழித்துள்ளது.
ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனி நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் சிரியாவின் ரக்கா நகரும் இருந்தது. இந்த நகரை மீட்கும் போர் தற்போது மிகவும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. பெரும்பாலான இடங்கள் மீட்கப்பட்டு விட்டன.
தமது பின்னடைவைத் தவிர்பதற்காகவும் அரசதரப்பினருக்கு பின்னடைவைக் கொடுப்பதற்காகவும் தாம் கைவிட்டுச் சென்ற இடங்களில் எல்லாம் மிதி வெடிகளை புதைத்து



வைத்துவிட்டுச் சென்றுள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அவ்வாறு புதைக்கப்பட்ட மிதிவெடிகள் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

## 2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக்கை வணிகமாக்கி

டோக்கியோ, ஜூன் 23
டோக்கியோ ஒலிம்பிக் தொடரைக் காணவரும் மக்கள் கூட்டத்தை இலக்குவைத்து மிகவும் ஆடம்பரமான ரயில் பயணமொன்றை ஆரம்பித்திருக்கிறது ஜப்பான் அரசு. 30 பேர் இந்த ரயிலில் முதல் முறை பயணத்தை மேற்கொண்டனர். 2 இரவுகள், 3 பகல்களைக் கொண்ட இந்தச் சுற்றுப் பயணத்தில் பசுமையான வயல்வெளிகள், கடற்கரைகள், பழங்காலப் புனிதத் தலங்கள் போன்றவற்றைக் காணலாம். இருவர் தங்கும் விதத்தில் அனைத்து வசதிகளும் கொண்ட



ஆடம்பரமான அறை
5 நட்சத்திர விடுதிகள
யல் தொட்டி, மிகப்
குளிர்சாதன வசதி. இ
பட்டிருக்கின்றன. புக
உணவுகள் தயாரிக்
துக்கொண்டே கன
எழிலை ரசிக்கலாம்.
இரவு உணவுக்குப்
லாம். மதுபானசாலை
மாக இருந்தாலும் இ
ஆட்கள் காத்திருக்கிற
வரை முன்பதிவு செ
துக்காக இருவருக்கு
சம் ரூபா கட்டணம் அ

# ன் வேட்பாளருக்கு அ.தி.மு.க. ஆதரவு


தேர்தலில் அந்த
கவினால் நிறுத்
வு கொடுக்கும்
சியான அ.தி.மு.

ர்ஜியின் பதவிக்
அந்த இடத்துக்கு

விரைவில் தேர்தல் நடத்தப்படவுள்ளது. பா.ஜ.கவின் சார்பில் ராம்நாத் கோவிந் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரை அ.தி.மு. கழகம் ஆதரிக்க வேண்டும் என்று கடந்த 19ஆம் திகதி இந்தியத் தலைமை அமைச்சர் மோடி கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பில் பரிசீலனை செய்துவந்த தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தமது ஆதரவை அவருக்கு வழங்கினார்.

இந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் அ.தி.மு.க. எவரை ஆதரிப்பது என்பதை கட்சியின் பொதுச் செயலாளர் சசிகலா முடிவுசெய்வார் என துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறிவந்த நிலையில், இந்த அறிவிப்பை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



பன்னாட்டு யோகா தினம் நேற்றுமுன்தினம் உலகமெங்கும் பரவலாகக் கொண்டாடப் பட்டது. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யோகா நிகழ் வின் ஒளிப்படமே இது. (ம)

# பின் தலைமை மதகுரு கத் தாக்குதலில் சாவு



பதுங்கியிருக்கும் போது, அமெரிக்கக் கூட்டுப்படைகள் நடத்திய வான் தாக்குதலில் உயிரிழந்தார் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல் பக்தாதியும் உயிரிழந்தார் என்ற தகவல் முன்னதாக வெளியிடப்பட்டிருந்தது. எனினும் இது உறுதிப்படுத்தவில்லை. தற்போது துர்கி பின் அலியும் உயிரிழந்தார் என்ற செய்தி உறுதிப்படுத்தப்படாத செய்தியாகவே வந்துள்ளது. (ம)

## சீனர்களுக்கு நுழைவிசைவு கட்டுப்பாட்டுக்கு பாக். திட்டம்

பீஜிங், ஜூன் 23

பாகிஸ்தான் நாட்டிற்கு வருகை தரும் சீனர்களுக்கான நுழைவிசைவு கட்டுப்பாடுகளை கடுமையாக்க அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

சீனா - பாகிஸ்தான் பொருளாதார திட்டம் காரணமாக பாகிஸ்தானில் வாழும் சீனர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. இவர்களது பாதுகாப்பிற்காக பாகிஸ்தான் அரசு 15 ஆயிரத்துக்கும் அதிகமான ராணுவ சிப்பாய்களை சீனர்கள் வாழும் பகுதியில் குவித்துள்ளது. இந்த நிலையில், பாகிஸ்தான் நாட்டிற்கு வருகை தரும் சீனர்களுக்கான நுழைவிசைவு கட்டுப்பாடுகளை கடுமையாக்க அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

பலூசிஸ்தானில் உள்ள மஸ்தாங் மாவட்டத்தில் சீன நாட்டைச் சேர்ந்த ஒரு தம்பதி ஐ.எஸ். ஆயததாரிகளால் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்தே பாகிஸ்தான் இந்த முடிவினை எடுத்துள்ளது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## சீனாவில் நாய்க்கறி திருவிழா

பீஜிங், ஜூன் 23

சீனாவில் தடையை மீறி பல இடங்களில் நாய்க் கறி திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. யூலின் நகரில் இந்த கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது.

சீன மக்களிடம் நாய்க் கறி சாப்பிடும் பழக்கம் உள்ளது. அங்கு ஒவ்வொரு ஆண்டும் நாய்க்கறி திருவிழா நடத்துவது வழக்கம். இந்தத் திருவிழாவின் போது, பல்லாயிரக்கணக்கான நாய்களை கொன்று அவற்றில் விதவிதமான உணவை தயாரித்து சாப்பிடுவார்கள். நாய்க்கறி திருவிழாவுக்கு பல்வேறு சமூக அமைப்புகளும், விலங்கியல் ஆர்வலர்களும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதனால் சீன அரசு நாய்கறி திருவிழா நடத்த ஏற்கனவே தடை விதித்து இருந்தது. ஆனாலும், தடையை மீறி சீனாவில் பல இடங்களில் நாய்க்கறி திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ம)

# ப்பிடமிருந்து கள் அழிப்பு



பலநூற்றுக்கணக்கான மிதிவெடிகள் ரக்காவில் உள்ள எய்ன் இஸ்ஸா கிராமத்தில் வைத்து அழிக்கப்பட்டன. (ம)

## இளவரசர் பிலிப் மருத்துவமனையில்

லண்டன், ஜூன் 23

பிரிட்டன் ராணி எலிசபெத்தின் கணவரும் எடின்பரோ கோமகன் என்றழைக்கப்படும் அந்த நாட்டின் இளவரசரான பிலிப் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த வருடத்துடன் அரச பணிகளில் இருந்து பிலிப் ஓய்வு பெறுகிறார் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், இளவரசர் பிலிப் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக நேற்றுமுன்தினம் இரவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று பக்கிங்ஹாம் அரண்மனை நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எத்தகைய உடல் உபாதைகளால் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்பது தொடர்பான விரிவான தகவல்கள் ஏதும் அந்த செய்திக் குறிப்பில் விவரிக்கப்படவில்லை. தற்போது 96 வயதாகும் இளவரசர் பிலிப்புக்கு கடந்த 2013 ஜூன் மாதம் வயிற்றில் ஒரு அறுவை சிகிச்சை நடந்தது. அதன்பிறகு பெரிய அளவிலான உடல்நலக்குறைவு எதுவும் அவருக்கு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# க்கியது ஜப்பான்

ன அறைகள் இருக்கின்றன.
விடுதிகளைப் போன்று மார்பிள் தரை, குளி
மிகப் பெரிய படுக்கைகள், அலங்காரம்,
வசதி, இணைய வசதி போன்றவை செய்யப்
றன. புகழ்பெற்ற சமையல் கலைஞர்களால்
தயாரிக்கப்படுகின்றன. உணவை ருசித்
டே கண்ணாடிகள் வழியே இயற்கை
க்கலாம்.
வுக்குப் பிறகு பியானோ இசையைக் கேட்க
னசாலை வசதியும் உண்டு. விலை அதிக
ாலும் இந்த ரயிலில் பயணம் செய்வதற்கும்
திருக்கிறார்கள். அடுத்த ஆண்டு மார்ச் மாதம்
திவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பயணத்
வருக்கு இலங்கை மதிப்பில் சுமார் 35 லட்
ணம் அறவிடப்படுகிறது. (ம)


# நயினாதீவு
## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய
## 2017 ஆம் ஆண்டு (ஏவிளம்பி வருடம்)
# உயர் திருவிழா



| | | | | |
|---|---|---|---|---|
| 25.06.2017 | ஞாயிற்றுக்கிழமை | 01 ஆம் திருவிழா | பகல் | கொடியேற்றம் 12.00 மணி |
| 29.06.2017 | வியாழக்கிழமை | 05 ஆம் திருவிழா | இரவு | முத்துச்சப்பறம் |
| 01.07.2017 | சனிக்கிழமை | 07 ஆம் திருவிழா | இரவு | கைலைக்காட்சி |
| 03.07.2017 | திங்கட்கிழமை | 09 ஆம் திருவிழா | பகல் | எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் |
| 04.07.2017 | செவ்வாய்க்கிழமை | 10 ஆம் திருவிழா | பகல் | சிவபூஜைக் கைலைக்காட்சி |
| | | 10 ஆம் திருவிழா | இரவு | திருமஞ்சம் |
| 05.07.2017 | புதன்கிழமை | 11 ஆம் திருவிழா | பகல் | விசேட கருட சர்ப்ப பூஜை வாயு பட்சணி நாகம்வீதியுலா |
| | | | இரவு | பூந்தண்டிகை |
| 06.07.2017 | வியாழக்கிழமை | 12 ஆம் திருவிழா | | குதிரை வாகனம் |
| 07.07.2017 | வெள்ளிக்கிழமை | 13 ஆம் திருவிழா | பகல் | கைலைக்காட்சி இரவு |
| | | | இரவு | சப்பறம் |
| 08.07.2017 | சனிக்கிழமை | 14 ஆம் திருவிழா | பகல் | தேர் |
| 09.07.2017 | ஞாயிற்றுக்கிழமை | 15 ஆம் திருவிழா | காலை | தீர்த்தம் |
| | | 15 ஆம் திருவிழா | மாலை | திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 10.07.2017 | திங்கட்கிழமை | 16 ஆம் திருவிழா | இரவு | பூங்காவனம் தெப்போற்சவம் |

குறிப்பு :

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பெயரால் ஏமாற்றுப் பேர்வழிகள் எவரிடமும் எப்பொருளையும் வழங்க வேண்டாம் என அம்பிகை அடியார்களைக் கேட்டுக் கொள்கின்றோம். அமுத சுரபி அன்னதான சபையினர் வழமை போல உற்சவ காலத்தில் சிறப்பாக இவ்வாண்டும் அன்னதானப் பணியினைச் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்வதாக அறிவித்துள்ளனர். அவர்களது தொண்டர்களை உறுதிப்படுத்தி வழமை போல் அக் கைங்கரியத்திற்கு . ஒத்துழைப்பு நல்கலாம். அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(சி.21810) (13.18)

அறங்காவலர் சபை,

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## அகதிகளுக்கு துணையிருப்போம்

வடக்குமாகாணசபையின்இழுபறி,பிடுங்குப்பாடு, பதவிக் கவிழ்ப்பு நாடகத்துக்கு மத்தியில் தமிழர்கள் கவனம்செலுத்தவேண்டிய முக்கிய தினமான அகதிகள் தினத்தைக் கண்டுகொள்ளாமலேயே விட்டுவிட்டோம். ஜூன் 20ஆம் நாள் உலக அகதிகள் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. பலகோடிக்கணக்கான அகதிகளின்துணிபு, பலம், விடாமுயற்சி என்பவற்றை நினைவூட்டும் பொருட்டு இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்களுக்கு ஏனையவர்கள்தமது ஆதரவை, அனுதாபத்தைத் தெரிவிப்பதற்காகவுமே இந்தத்தினம்கடைப்பிடிக்கப்படுகிறது.

உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களாகவும், உலகின் பல நாடுகளுக்கும்அரசியல்அகதிகளாகவும், பொருளாதார அகதிகளாகவும் அலைந்து திரிபவர்களாக மாறிவிட்டவர்கள்தமிழர்கள். பொருளாதார அகதிகளாக மேற்குநாடுகளுக்குப் பறந்துவிடத் துடித்துக்கொண்டும் இருப்பவர்கள். அகதிகளாவதன்வலியை நன்கு உணர்ந்தவர்கள்.

இன்றும்கூடத்தமது சொந்த இடங்களில் இருந்து அகற்றப்பட்டு இடம்பெயர்ந்தவர்களாக வாழ்பவர்கள்பலர் இருக்கிறார்கள். அவர்களின் காணிகளும் நிலங்களும் படையினர் வசம் இருப்பதால் அவற்றை மீட்டுத் தரக் கோரிப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

உலகம் முழுவதும் 65 லட்சத்து 60 ஆயிரம் பேர்தமது சொந்தஇடங்களைவிட்டுப்பலவந்தமாகவிரட்டப்பட்டிருக்கிறார்கள்என்கிறதுஐக்கியநாடுகள்சபையினுடைய புள்ளிவிவரம். அவர்களுக்குமக்கள்தமது ஆதரவையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த ஆண்டுக்கான அகதிகள் தினம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையினுடைய அறிக்கையின்படி, ஒரு கோடியே 20 லட்சம் சிரியர்களைப் போர் இடம் பெயரவைத்துள்ளது. 77 லட்சம் கம்போடியர்கள், 47 லட்சம் ஆப்கானிஸ்தானியர்கள், 42 லட்சம் ஈராக்கியர்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தஅறிக்கையின்படி, அகதிகளில் 84 சதவீதமானவர்கள் குறைந்த மற்றும் நடுந்தர வருமானம் பெறும் நாடுகளைச் சேர்ந்தவர்கள். அவர்களில் மூவரில் ஒருவர் வறிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

உள்ளூரிலேயே இடம்பெயர்ந்தவர்கள் அகதிகள் என்ற வகைக்குள் உள்ளடக்கப்படுவதில்லையானாலும் அவர்களின்துன்பங்கள்அகதிகளுக்குஎந்தவிதத்திலும் குறைந்தது அல்ல.

தமிழர்கள், அகதிகளையும், உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களையும்ஒருங்கேகொண்ட ஒருசமூகத்தினர். இந்த இரு பகுதியினருமே தொடர்ந்தும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருபவர்கள். மேற்கு நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைவதற்காகவே ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு செல்பவர்களும், அகதித் தஞ்சம் வழங்கப்படாத நிலையில் பல நாடுகளில்தடுப்புமுகாம்களில்வசிப்பவர்களுமாகதமிழ்அகதிகள்தொடர்ந்தும்அவலங்களைச்சந்தித்து வருகின்றனர்.

அதேபோன்றே 25 வருடங்கள் கடந்தும் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள், தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாதவர்களாக இன்னமும்தவிக்கின்றனர். தமது நிலங்களையும் காணிகளையும் இலங்கைப் படையினர் ஆக்கிரமித்திருப்பதால், போர் முடிந்து 8 வருடங்கள் கடந்தபோதிலும், அவர்கள் தொடர்ந்தும் துன்பத்திலேயே உழல்கிறார்கள்.

மைத்திரிரணில்கூட்டுஅரசுபதவியேற்றபின்னரும்கூட அவர்களின் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. தமது காணிகளை மீளக்கேட்டு 4 மாதங்களாக மக்கள் போராட்டங்களைநடத்திவருகின்றபோதிலும், அவர்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. தொடர்ந்தும் துன்பங்களையே அனுபவித்து வருகிறார்கள் அவர்கள். அவர்களுக்கு ஆதரவாகவும் உறுதுணை[illegible]இருப்போம். அதுவே உலக அகதிகள் தினத்[illegible]ம்.

# தமிழரசுக் கட்சியின் முடிவுக்காக காத்திருக்கும் தமிழ் மக்கள்

இந்துமதி

வடக்குமாகாணசபையில் இடம்பெற்ற வேண்டத்தகாத சம்பவங்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும் புதிய ஞானோதயத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை உறுதியாகக் கூறமுடியும். தம்மால் பதவியில் அமர்த்தப்பட்ட ஒருவரே தம்மை ஆட்டிப்படைக்கும் விதமாக நடந்து கொள்வாரென அவர்கள் சிறிதேனும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் அது நடந்து முடிந்திருக்கின்றது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர்கள், தமிழரசுக் கட்சிக்கும் கூட்டமைப்பின் தலைவருக்கும் எதிராகக் குரல் கொடுக்கத் தவறவில்லை. இன்னும் சொல்லப்போனால் விக்னேஸ்வரனை ஆதரிப்பதை விட, தமிழரசுக் கட்சியையும் கூட்டமைப்பையும் எதிர்ப்பதையே இவர்கள் தமது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தனர். சில ஊடகங்கள் இதில் வரிந்து கட்டிக் கொண்டு செயற்பட்டதையும் காண முடிந்தது.

### தமிழரசுக் கட்சிக்கு எதிரான ஊடகப் பரப்புரை

விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டபோது; முதலமைச்சருக்கு ஆதரவாக வடக்கு கொந்தளிக்கும்; முழு அடைப்பு இடம்பெறும்; வடக்கில் எல்லாமே முடங்கி விடும் என்றெல்லாம் சில ஊடகங்கள் ஆரூடம் தெரிவித்திருந்தன. முழுக்கடை அடைப்பை மேற்கொள்ளுமாறு கூறி விசேட பதிப்புக்குள் செய்திகள் பலவற்றையும் அந்த ஊடகங்கள் வெளியிட்டது. இந்த ஊடகங்கள் எப்போதுமே கூட்ட மைப்புக்கும் தமிழரசுக் கட்சிக்கும் எதிரான கருத்துக்களை வெளியிடுவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றன. மகிந்த ஆட்சியின் போது ஒட்டுக்குழுக்கள் குடாநாட்டில் மேற் கொண்ட அட்டூழியங்கள் ஏராளம். ஆனால் அவை தொடர்பாக இந்த ஊடகங்கள் வாயைத் திறக்கவேயில்லை. ஓரவஞ்சனையாக நடந்து கொண்டன. ஆனால் கூட்டமைப்பையும் தமிழரசுக் கட்சியையும் திட்டித் தீர்த்தன. முதலமைச்சராக விக்னேஸ்வரன் பொறுப்பேற்றதன் பின்னர் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இவர்தான் பொருத்தமான ஆள் என்பதைப் புரிந்து கொண்டன. முதலமைச்சரைப் புகழ்ந்து எழுதுவதில் இவர்களுக்கு தனியான ஆர்வம் பிறந்து விடும். கூட்டங்களில் கலந்து கொள்கின்றபோது தம்மைப் பற்றித் தாமே புகழ்ந்தும் கொள்வார்கள்.

வடபகுதியில் இடம்பெற்ற சம்பவங்களை ஊதிப் பெருப்பித்து மக்களின் மனதில் வன்மத்தை ஏற்படுத்துவதில் இந்த ஊடகங்கள் முக்கிய பங்கை வகித்தன. ஓர் இனத்தின் மத்தியில் பிளவை ஏற்படுத்துவதற்கு இத்தகைய ஊடகங்களே போதும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கட்சிகள் மத்தியில் இணக்கப்பாடு இல்லவே இல்லை

இனிமேல் விடயத்துக்கு வருவோம். நான்கு கட்சிகள் இணைந்து தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இயங்குவதாகக் கூறப்படுகின்றது. ஆனால் அண்மைக்காலமாக அந்த இணைப்பைக் காணமுடியவில்லை. பங்காளிக் கட்சிகளில் சில கூட்டமைப்பின் தலைமையை ஒரு பொருட்டாக மதிப்பதாகவே தெரியவில்லை. தலைவர் பதவியிலிருந்து சம்பந்தனை விலகி நிற்குமாறு கூறும் அளவுக்கு நிலைமை சீரழிந்து போய்க் காணப்படுகின்றது. கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பில் உள்ளவர்களாலேயே மதிக்கப்படாத தன்மையும் வெளிப்படையாகத் தெரிகின்றது. இவையெல்லாம் தமிழரசுக் கட்சியையும், கூட்டமைப்பையும், வெளிப்படையாக அவமதிக்கின்ற செயல்களாகும். கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் மக்கள் மத்தியில் அதற்கு எதிரான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். கூட்டமைப்பினால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லையெனத் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். மக்களில் ஒருபகுதியினர் இதை நம்புவதாகவே தெரிகின்றது. முதலமைச்சர் விக்னேஸ்வரனைப் புகழ்ந்து துதி பாடுபவர்களும் இவர்கள் தான்.




### தமிழரசுக் கட்சி தீர்க்கமான முடிவை மேற்கொள்ள வேண்டும்

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் அதற்கெனப் பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர்கள் உள்ளனர். தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம் மிக்க கொள்கைகள் இன்னமும் மறைந்து விடாமல் இருப்பதால் மக்களின் ஆதரவு அந்தக் கட்சிக்குத் தொடர்கின்றது. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இந்த இக்கட்டான வேளையில் இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வடக்கின் தற்போதைய உண்மைநிலை மக்களைச் சென்றடையும் வகையில் தொடரான பரப்புரைகளில் அவர்கள் ஈடுபட வேண்டும். தவறான கருத்துக்களைப் பரப்பி வருபவர்களுக்குத் தக்க பதிலடி வழங்க வேண்டும். கட்சித் தொண்டர்களின் மனம் தொய்வடைந்து போவதற்கு அனுமதிக்கக் கூடாது. அதை விட, துரோகிகளை இனம் கண்டு அவர்களைக் களையெடுத்துவிட வேண்டும். கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகள் தொடர்ந்தும் முரண்படுவதால் கூட்டமைப்பு என்பது இல்லாமற் போய்விடும். ஆகவே அவர்களுடன் உடனடியாகப் பேசி ஒரு தீர்க்கமான முடிவை எட்ட வேண்டும். தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பேணும் பொருட்டு உருவாக்கப்பட்டதுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. ஆனால் உண்மையானகூட்டமைப்பை இன்று காணமுடியவில்லை. கூட்டமைப்பு என்ற பெயர்தான் இடைநடுவில் தொங்கிக் கொண்டிருக்கின்றது. இது நீடிக்கவேண்டுமா? இல்லையா? என்பதைத் தமிழரசுக் கட்சியே தீர்மானிக்க வேண்டும்.

தமிழரசுக் கட்சி எதிர்காலத்தில் எடுக்கப் போகின்ற முடிவுகள் தான் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும். இதற்காகத்தான் தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள்.

சேரலாதன்



# பாவ விமோசனம் பெறுவாரா ராகுல் காந்தி?

சில தினங்களுக்கு தமிழ் நாட்டுக்கு முன்னர், வருகை தந்த ராகுல்காந்தி, தமிழர்கள் அன்பானவர்கள், வீரம் மிக்கவர்கள், புலிகளுக்கு நிகரானவர்கள் என்றெல்லாம் புகழாரம் சூட்டிவிட்டுத் திரும்பிச் சென்றுள்ளார். கூடவே தமிழ் நாட்டில் தமக்குப் பரிமாறப்பட்ட உணவுகளில் பொரித்த கோழி இறைச்சி, பொரித்த இறால் ஆகியவற்றைப் பொதி செய்வித்துத் தமது அன்புச் சகோதரிக்கு எடுத்துச் சென்றதாகவும் தெரிய வருகின்றது.

**ராகுல்காந்தியின் பூர்வீகம் அரசியல் பின்னணி கொண்டது**

ராகுல்காந்தி இந்தியாவின் புகழ்பூத்த முதலாவது தலைமை அமைச்சராகப் பதவி வகித்த ஜவகர்லால் நேருவின் பூட்டன் என்பதுடன், ஈழத்தமிழர்கள் மீது மாறாத அன்புகொண்ட இந்திரா காந்தி அம்மையாரின் பேரனுமாவார். இந்திரா காந்தியின் மூத்த புதல்வரான ராஜீவ் காந்திக்கும், இத்தாலியப் பெண்ணான சோனியாவுக்கும் மகனாகப் பிறந்த இவர், இந்தியாவின் பாரம்பரியங்களை மிகவும் நேசிப்பதுடன், இந்திய அரசியலிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். தற்போது தமது தாயாரின் தலைமையின் கீழுள்ள காங்கிரஸ்கட்சியின் துணைத் தலைவராகவும்ராகுல் காந்தி விளங்குகின்றார். விரைவில் அவரே காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியையும் ஏற்றுக் கொள்வாரெனத் தெரிகின்றது.

இறுதிப் போரின்போது விடுதலைப் புலிகளை எந்த வகையிலாவது தோற்கடித்து, அழித்துவிடுவதே இந்திய அரசின் திட்டமாகக் காணப்பட்டது. ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகளே கொன்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதால், அவரது குடும்பத்தினர் விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்பதில் தீவிர அக்கறை காட்டினர். இந்திய மத்திய அரசின் நிர்வாகம் காங்கிரஸ் கட்சியின் வசம் இருந்ததும், அந்தக் கட்சியின் தலை மைப் பொறுப்பில் சோனியா காந்தி அமர்ந்திருந்ததும் இந்த எண்ணம் நிறைவேறுவதற்கு உதவின. அப்போதைய இந்தியத் தலைமை அமைச்சரான மன்மோகன்சிங், சோனியா காந்தியின் ஆணைகளைத் தட்டிக்கழிக்க முடியாத நிலையில் இருந்தார். இதற்காகவே அவர் சோனியாகாந்தியினால் தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்தப்பட்டார்.

**விடுதலைப் புலிகளை ஒழிக்க இலங்கை அரசு வகுத்த வியூகம்**

விடுதலைப் புலிகளைத் தனித்து நின்று வெல்ல முடியாதென்பது இலங்கை அரசுக்கு நன்றாகவே தெரிந்த விடயமாகும். இதன் காரணமாகவே அப்போதைய அயலுறவுத் துறை அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமரைப் பயன்படுத்தி வெளி நாடுகளில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்விக்கின்ற முயற்சியில் இலங்கை அரசுஇறங்கியது. ஒருதமிழரான லக்ஷ்மனும் தமக்கு இலங்கை அரசு வழங்கிய பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றினார். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட வேறுபல நாடுகளும் விடுதலைப் புலிகளைத் தடை செய்தன. இறுதிப் போர் இடம்பெற்றபோது இந்தியா முக்கிய பங்கை ஆற்றியது. இந்தியா வழங்கிய ஆயுதங்கள் மட்டுமல்லாது, இந்தியச் சிப்பாய்களுக்குப் போர்க்களத்தில்செயற்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

**விடுதலைப் புலிகளை அழித்து ஒழிக்க உதவி புரிந்த பன்னாடுகள்**


புலிகளின் ஆயுதக் கப்பல்கள் இடைநடுவில் அழிக்கப்பட்டமைக்கு அமெரிக்காவும், இந்தியாவும் வழங்கிய உளவுத் தகவல்களே காரணமாகின. இதன் காரணமாக போரின் இறுதிக் கட்டத்தில் புலிகள் தமக்குத் தேவையான ஆயுதங்களுக்குத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. அவர்களது தோல்விக்கு இதுவுமொருபிரதானமானகாரணமாகும். பல ஆயிரக்கணக்கான அப்பாவித்தமிழர்களின் இறந்த உடல்களை ஏறி மிதித்தவாறு நின்று கொண்டு மகிந்த ராஜபக்ச வெற்றிக் கோசம் எழுப்பினார். இந்திய அரசும் இந்த வெற்றியைப் பெரிதாகக் கொண்டாடியது. தமிழ் மக்களின் அவலங்கள் தொடர்பாக இலங்கை அரசோ அல்லது இந்தியாவோ சிறிதுகூட அக்கறை காட்டவில்லை. இது இன்றுவரை தொடரத்தான் செய்கின்றது.

> ஈழத் தமிழர்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொள்வதில் இதய சுத்தியுடன்செயற்பட வேண்டும். நாட்பட்ட ரணங்களையும் உரிய மருந்துகளிட்டுக் குணப்படுத்தலாம். இதைப் போன்று தான் ஈழத் தமிழர்களின் காயங்களுக்கும் உரிய சிகிச்சைகள் வழங்கிக் குணப்படுத்த வேண்டும். இதனைச் செய்வதற்கு இந்திராவின் பேரனான ராகுலால் நிச்சயம் முடியும். மனமிருந்தால் இடமுண்டு என்பார்கள். அது ராகுல் காந்தியின் உள்ளத்திலும் எழ வேண்டும்.

ராகுல்காந்தி என்றோ ஒரு நாள் இந்தியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்பார் என்பது அரசியல் ஆய்வாளர்களது கணிப்பு. அதற்கான தகுதிகள் எல்லாம் அவரிடம் நிறையவே உள்ளன. சுமார் 130 கோடி மக்களுக்குத் தலைமை தாங்குவதென்பது சாதாரணமானதொரு விடயமல்ல. அதுவும் இந்தியா போன்றதொரு நாட்டின் தலைமைப் பொறுப்பை வகிப்பதென்பது நெருப்பாற்றை நீந்திக் கடந்து செல்வது போன்றது. ஆனாலும் இவை யாவற்றையும் சமாளித்து ராகுல் காந்தி இந்தியாவின் தலைமையை ஏற்கும் வாய்ப்பு உருவானால் இலங்கைத் தமிழர்களையும் அவர் ஒருகணம் சிந்தித்துப்பார்க்காமல் இருக்க முடியாது.

ஏனென்றால் அந்த மக்களுக்கு இவரது குடும்பத்தினர் இழைத்த பாவங்கள் தற்போதும் அவரது குடும்பத்தினரைப் பின் தொடர்கின்றன. அந்த மக்களின் அவலக் குரல்கள் இன்னமும் வானை முட்டி எழுந்து நிற்கின்றன. தமது அவலக் குரல்கள் ஓய்ந்து ஆனந்தக் குரல்களாக மாறப்போகும் அந்த நாள்களுக்காகத்தான் ஈழத் தமிழர்கள் காத்திருக்கின்றனர். இதற்கு வழி அமைத்துக் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடமை இந்தியாவுக்கு நிறையவே உள்ளது. ஏனென்றால் இலங்கைத் தமிழினத்துக்கான அவலனத்தின் மூல காரணமே இவர்கள் தான்.

ஆகவே ராகுல்காந்தி தமது பாட்டியான இந்திரா காந்தி அம்மையாரின் வழியில் சென்று ஈழத் தமிழினத்துக்கு உதவிட வேண்டும். அவர்களின் துயரங்களைத் துடைத்துவிட வேண்டும். இந்திரா காந்தி அம்மையார் சுட்டுக் கொல்லப்பட்டபோது ஈழத் தமிழர்கள் துடியாய்த் துடித்தார்கள். ராகுல்காந்தியும் ஈழத் தமிழர்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொள்வதில் இதய சுத்தியுடன்செயற்பட வேண்டும். நாட்பட்ட ரணங்களையும் உரிய மருந்துகளிட்டுக் குணப்படுத்தலாம். இதைப் போன்றுதான் ஈழத் தமிழர்களின் காயங்களுக்கும் உரிய சிகிச்சைகள் வழங்கிக் குணப்படுத்த வேண்டும். இதனைச் செய்வதற்கு இந்திராவின் பேரனான ராகுலால் நிச்சயம் முடியும். மனமிருந்தால் இடமுண்டு என்பார்கள். அது ராகுல் காந்தியின் உள்ளத்திலும் எழ வேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### அதிர்ச்சி தரும் அநீதிச் செயல்கள்

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் இலங்கையில்ஆயிரத்து546 பேர்படுகொலையுண்டனர் என்கின்றது பத்திரிகைச் செய்தியொன்று. எமது நாடு இன்னமும் கூட கொலைகளின் தேசமாகத் திகழ்வதற்கு இந்தத் தகவல் ஒரு சான்றாகவே அமைந்துள்ளது. அதாவது இரண்டு நாள்களுக்கு 3 பேர் படுகொலைகளுக்குள்ளாகுகின்றனர். படுகொலைகளின் கணக்கில் வராமல் நடந்தேறிய படுகொலைகள் இதில் உள்ளடக்கப்படாமலும் இருக்கலாம். நல்லாட்சி அரசு பதவிக்கு வந்தும்கூட படுகொலைகள் தொடர்வது ஆரோக்கியமானது அல்ல.

ஆரோக்கியமென்பது உளநலமும் உடல் நலமும் சேர்ந்ததொன்று. இத்தகைய கொலைச் சம்பவங்கள் குறித்த செய்திகளால் சாதாரண மக்களுக்கு குருதி அழுத்த நோய் போன்றவை ஏற்பட வாய்ப்பதிகம். நடைபெற்ற படுகொலைகளுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் இனங்காணப்பட்டு நீதி விசாரணையூடான தீர்ப்பு மூலம் தண்டனை வழங்கல் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுவதனூடாக இத்தகைய படுகொலைகள் அதிகரித்துச் செல்வதைக் கட்டுப்படுத்தலாம். சட்டம், ஒழுங்கு, நீதித் துறை கள் இணைந்து சிறப்பாகச் செயற்படுத்துவதனூடாகவே நல்லாட்சி அரசு என்பது அர்த்தமுள்ளதாக அமையும். நாட்டுக்கும் களங்கம் ஏற்படாமலிருக்கும்.

ப.சிவலிங்கம், ஒட்டுசுட்டான்.

### சுகாதார அதிகாரிகள் கவனிப்பார்களா?

அருந்தும்நீர், சுவாசிக்கும்காற்று, உண்ணும் உணவு என்பவற்றில் மாசடைவு ஏற்படுவதால் சிறுவர் முதல் பெரியோர் வரை தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்கிறது உணவுத் தயாரிப்பில் பல சரக்கு வகைகள் முதன்மை பெறுகின்றன. தமிழர் பகுதிகளில் பலசரக்குக்கடைகள், மற்றும் கூட்டுறவுச் சங்கக் கடைகளின் உரிமையாளர்கள்மற்றும்முகாமையாளர்களது அசமந்தப் போக்கால் மூடைகளில் திறந்த நிலையில் வைத்துப் பேணப்படும்சீனி,பருப்பு,உழுந்து,கடலைபோன்ற தானியவகைகளை எலி, கரப்பான் பூச்சி, பல்லி முதலியவை ருசிபார்த்து சேதப்படுத்துவதுடன் எச்சங்களையும் இட்டுச் செல்வதால் நுகர்வோர் அசுத்தமான பொருள்களை வாங்கநேர்வது கவலைகக்குரியது. வசதி படைத்தவர்கள் தரமான பொதிசெய்யப்பட்ட பொருள்களை சிறப்பு அங்காடிகளில் கூடிய விலை செலுத்தி வாங்கி பயனடைவர். மத்தியதர, கீழ்மட்டப் பொது மக்களே சுகாதாரச் சீர்கேடான பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவதால், கூடிய அளவில்நோய்களுக்குஇலக்காகநேர்கிறது. சுகாதார அதிகாரிகள் இது விடயமாக கவனம் செலுத்தி கடை உரிமையாளருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம். இதனால் பாவனையாளர்கள் பெரும்பயனடைவர்.

எஸ்.சுப்பிரமணியம், கல்வயல்

# பொருளாதார முன்னேற்றத்தை அபிவிருத்தியின் வழி துரிதமாக்கிக் கொள்வதே அரசின் நோக்கம்

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



"அனைத்து நாடுகளுடனான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை துரிதமாக்கிக் கொள்வதே அரசின் தற்போதைய கொள்கை" இவ்வாறு தெரிவித்தார் அரசதலைவர் மைத்திரிபால சிறிசே.

இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க உயர் பிரதிநிதிகள் குழுவை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் அண்மையில் சந்தித்த போதே அரச தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்துக் கருத்துரைத்துள்ள அவர்,

"நாட்டில் மீண்டுமொரு போர்ச் சூழல் ஏற்படுவதனைத் தவிர்க்கும் விதமாக நாட்டில் நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக நாட்டில் நல்லிணக்கத்தை பலப்படுத்துதல், மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் பொருளாதார உறுதிநிலையை ஏற்படுத்தி அனைத்து மக்களதும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துவதே அரசின் தற்போதைய குறிக்கோள்.

> “அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையேயான இருதரப்பு ரீதியிலான உறவுகளை பலப்படுத்தவும் இலங்கையின் புதிய அபிவிருத்திதிட்டங்களுக்காக அமெரிக்காவின் ஒத்து ழைப்பை பெற்றுக்கொள்ள வும் இலங்கை அரசு எதிர்பார்த்துள்ளது.

'புவியியல் ரீதியிலே இலங்கை முக்கிய அமைவிடத்தில் உள்ளது. கப்பல் போக்குவரத்தில் மட்டுமன்றி இந்து சமுத்திர பிராந்தியத்தின் பாதுகாப்பு தொடர்பிலும் பங்களிப்பினை செய்து வருகிறோம். இலங்கை பெரிய வெளிநாட்டு முதலீட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பிலும் கவனமெடுக்க வேண்டியுள்ளது" - என்றார்.


## CSE — COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

22/6/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -16.52 | 6,714.73 | 6,731.25 |
| S&P SL20 | -9.40 | 3,913.62 | 3,923.02 |
| வியாபாரப்புரள்வு | | 495,493,792 | 1,014,600,900 |
| உள்நாடு:- கொள்வனவு | | 339,471,456 | 499,090,944 |
| விற்பனை | | 324,880,512 | 378,364,320 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 156,022,304 | 515,509,952 |
| விற்பனை | | 170,613,248 | 636,236,610 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சிங்கர் ஸ்ரீலங்கா | SINS.N | 49.00 | 1,197,970 | 56,903,346 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 176.10 | 261,714 | 45,713,660 |
| டயலொக் | DIAL.N | 11.90 | 2,519,552 | 29,981,531 |
| ஆர் ஐ எல் புறப்பட்டி | RIL.N | 8.50 | 3,119,330 | 27,043,682 |
| சிலிங்கோ இன்சூரன் | CINS.N | 1,502.00 | 16,201 | 24,319,734 |
| லங்கா டையில் | TILE.N | 112.00 | 196,655 | 22,610,487 |
| இலங்கை கொமரஷல் வங்கி - | COMB.N | 138.70 | 160,384 | 22,436,183 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X | 207.00 | 107,263 | 22,096,770 |
| அலுமெக்ஸ் | ALUM.N | 24.20 | 889,649 | 21,377,396 |
| சென்றல் பைனான்ஸ் | CFIN.N | 90.10 | 225,109 | 20,372,662 |

- பங்குலாபம் -

கேன்வீனியன் பூட் - ரூபா 4:00
ஹரிசந்ரா மில் - ரூபா. 20:00
சிலோன் காடியன் இன்வெஸ்மென் - ரூபா. 4:00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 244 |
| விலை உழைப்பு | 11.4 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

# கேள்வி அறிவித்தல்

## 2011-2014 ஆம் ஆண்டு வரையான முத்திரைத் தீர்வை கட்டணங்களை மீளளித்தலுக்கான விசேட செயற்றிட்டம்

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை வட மாகாணம்

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, தகுதிவாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப் பட்ட வீதி வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, சித்தி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த் துக்கொள்ளப்படாதவராகவும் 04/2016(i) ம் இலக்க 30.09.2016 ஆம் திகதிய பொதுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி வேலை செய்வதற்கான கீழே அட்டவணையில் காட்டப்பட்டபடி பொருத்தமான தரத்தில் பதிவினை மேற்கொண்டிருப்பதுடன் வடக்கு மாகா ணத்திற்குள் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/ செயலாளர் வவுனியா தெற்கு தழிழ் பிரதேச சபை நேரியகுளம் வீதி நெளுக்குளம் வவுனியா (தொலைபேசி: 024 222 5737, தொலைநகல்- 024 205 0067, மின்னஞ்சல் npvstps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் 14.07.2017ஆம் திகதிவரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்விப் ஆவணத்தினை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் தலைவர்/செயலாளர், வவுனியா தெற்கு தழிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி நெளுக்குளம் வவுனியா எனும் இடத்திலிருந்து 23.06.2017 திகதியிலிருந்து 14.07.2017 வரை காலை 09.00 மணிக்கும் பிற்பகல் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக் கப்படாத கட்டணமாக ரூபா 2000/= (வரிகள் நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படவேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/செயலாளர் வவுனியா தெற்கு தழிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி நெளுக்குளம் வவுனியா எனும் முகவரிக்கு 14.07.2017 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக் கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63 (அறுபத்தி மூன்று நாட்கள் 15.09.2017) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/43(5)/5.5/16-1/17 | கூமாங்குளம் நூலக வீதி கல்லிட்டு தாரிடல் | 3.056 மில்லியன் | 03 மாதங்கள் | C8 வீதி வேலை | 31000.00 | 13.10.2017 |
| NP/14/43(5)/5.5/16-2/17 | தோணிக்கல் சேக்கிழார் வீதி கல்லிட்டு தாரிடல் | 2.617 மில்லியன் | 03 மாதங்கள் | C8 வீதி வேலை | 27000.00 | 13.10.2017 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 06.07.2017 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக் கட்டடத்தில் நடைபெறும் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ள முடியும்.

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,
நெளுக்குளம், வவுனியா.
23.06.2017

# தேசிய தர விருதை பெற்றுக்கொண்டது களனி கேபிள்ஸ் பி.எல்.சி

இலங்கையின் முதல் தர பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகின்ற களனி கேபிள்ஸ் பி.எல்.சி இரண்டாவது தடவையாக தேசிய தர விருதை பெற்றுக்கொண்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஹில்டன் விடுதியில் இடம்பெற்ற இந்த விருது வழங்கும் நிகழ்விலேயே பெரியளவு உற்பத்தி நிறுவனமாக இயங்குகின்றமை, இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனத்தின் தர நிர்ணயங்களை ஒரு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக பேணுகின்றமை என்பதான வரையறைகளின் கீழான தெரிவாக 2017 ஆம் ஆண்டிற்கான இந்த விருது களனி கேபள்ஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தவிர, விசேடத்துவமான விருதாக கருதப்படுகின்ற மேற்படி தேசியவிருதினை இருதடவைகள் வெற்றியீட்டிய இலங்கையின் ஒரேயொரு வயர் உற்பத்தி நிறுவனமாக களனி கேபிள்ஸ் பிஎல்சி திகழ்கின்றமை நோக்கத்தக்கது.

இந்த விருதை பெற்றுக்கொண்டமை தொடர்பில் கருத்துரைத்துள்ள களனி கேபள்ஸ் பிஎல்சியின் பணிப்பாளரும் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான மஹிந்த சரணபால,

"களனி கேபிள்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான இயக்கத்தின் பின்னணியில் சிறந்த தர நிர்ணயங்களை பேணிவருகிறோம். எமது தயாரிப்புகள் வாடிக்கையாளர்களினால் முதல் தர பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்கள் உற்பத்தியாளர்களாக நாட்டில் இனங்காணப்பட்டுள்ளன.

எமது நிறுவனத்துக்கு இது ஒரு சொத்தாக அமைந்துள்ளது. எமது தயாரிப்பின் சிறந்த தரத்துக்கு இது உண்மையான உறுதிமொழியாக அமைந்துள்ளது. தேசிய தர விருதுகளை இரண்டாவதாக வெற்றியீட்டியமையானது களனி கேபிள்ஸ் தயாரிப்புகளில் 2006 ஆம் ஆண்டு முதல் பேணப்படும் நிலைபேறான தரங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன" -என்றார்.

# வாகனங்களுக்கான தண்டத் தொகையை அதிகரிப்பதற்கு முன்மொழிவுகள் நடைமுறைக்கு

## சிறப்புக்குழு அறிக்கை சமர்ப்பிப்பு

போக்குவரத்து விதிகளை மீறுகின்ற வாகனங்களுக்கு எதிராகதாக விதிக்கப்படும் தண்டத் தொகையை 25 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் வரை அதிகரிப்பதற்கான யோசனை முன்மொழிவு ஒன்று முன் வைக்கப்பட்டுள்ளதான தகவலை போக்குவரத்து தொழிற் சங்கம் வெளிப்படுத்தியுள்ளது.

இதன்படி கடந்த டிசெம்பர் மாதம் 03 ஆம் திகதி அரச தலைவரின் ஆலோசனை வழிநடத்தலுக்கு அமைவாக வாகனங்களுக்கான தண்டத்தொகையை விதிப்பது தொடர்பான பிரச்சினையை விசாரிப்பதற்கு சிறப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டதாகவும்அந்தக் குழு சார்ந்து நிதி, போக்கு வரத்து, சட்டம் ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்கள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் பொலிஸார் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தவிர, இந்தக் குழுவின் ஆரம்ப அறிக்கையானது தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் தண்டத் தொகை விதிப்பனவிற்கான பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களும் அவற்றிற்கான தற்போதைய தண்ட விதிப்பனவுத் தொகை மதிப்பீடுகளும் குறித்துக்காட்டப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரா.தனம்



# ஏவிளம்பியின் கால நோன்பிடை அருளின் திருப்பொலிவுறும் ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரம்

இலங்கைத் திருநாட்டின் வடக்கே அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்தை தனித்துவம் செய்யும் இறையருள் பேறுகளாக இரண்டு விடயங்களை நோக்கலாம். அவற்றுள் ஒன்றாக வற்றாப்பளை அம்மன் ஆலயத்தையும் அங்கு அற்புதம் மொழிந்து எட்டு நாள்கள் உப்பு நீரிலே விளக்கு எரியும் கனிவையும் குறிப்பிட முடியும் அதேபோன்று ஒட்டிசுட்டான் தான்தோன்றீசுவரர் ஆலயமும் அருள் மொழிவால் தனிச்சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது. ஆலயத்தில் வருடாந்தம் ஆனி மாதத்தில் வருகின்ற அமாவாசை தினத்தன்று கொடியேற்றத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து வருகின்ற பௌர்ணமி நாளன்று தீர்த் தோற்சவமும் இடம் பெறுகின்றன. அந்த வகையிலே ஏவிளம்பி வருட மகோற்சவம் இன்றை தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

## ஆலயத்தின் தோற்றம்




ஆலயத்தின் தோற்றம் பற்றிய விபரங்களை சரியாக அறியமுடியாவிட்டாலும் கர்ண பரம்பரைக் கதைக ளையும், வரலாற்றுக் குறிப்புகளையும் கருத்தில் கொண்டு சோழ மன்னர் காலத்தில் இந்த ஆலயம் தோற் றம் பெற்றிருக்கலாம் என்ற கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பு மூன்று சித்தர்கள் வன்னிப் பிரதே சத்துக்கு வந்தனர் என்றும் அவர்களுள் ஒருவர் ஒட்டுசுட்டான் என அழைக்கப்பட்ட இடத்திலிருந்து பிரிந்து சென்று தென் மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ளவாவெட்டிமலையிலும்,இரண்டாவது சித்தர் காதலியார் சமளங்குளத்திலும் வாழ்ந்து அங்கே சமாதியடைந்தார் என்றும் மூன்றாவது சித்தர் ஒட்டுசுட்டானில் ஒரு கொன்றை மரநிழலிலே நிஷ்ட்டையிலிருந்து சமாதியடைந்தார் என்றும் வரலாற்றுக் குறிப்புகள் குறிப்பிடுகின்றன. மேலும் ஆலயத்தின் தோற்றம் பற்றி செவி வழி வந்த கதையாக யாழ்ப்பாணம் இடைக் காட்டைச் சேர்ந்த திரிபுரத்திரகுமார் என்னும் சைவ மணவாளரும்,அவருடைய இரண்டு பிள்ளைகளும், அவர்களது உறவினர்களும் வன்னிக்கு வந்து குடியேறினர் என்றும் அந்த இடம் இடைக் காட்டு மக்கள் வாழ்ந்த தன்மையினால் இடைக்காடு என்றும் பெயர்குறிப்பிடப்பட்டது. திரிபுத்திரனார் குரக்கன் பயிரிட்டு அவற்றை அறுவடை செய்யும் காலமதில் விளைச்சலைப் பெற்று அதன் பின்பாக பயிர்களின் அடிப்பாகத்திற்குத் தீயிட்டதாகவும், எரிந்து போகாத பகுதியை மண்வெட்டி கொண்டு செருக்கும் போது மண்வெட்டி அங்குள்ள சிவலிங்கத்தின் மேல் பட்டு பால் வடியத் தொடங்கியதாகவும்,இன்றும் கூட அந்தச் சிவலிங்கத்தில் வெட்டிய அடையாளம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்த விடயங்களை அறிந்துகொண்ட வன்னியனார் விரைந்து சென்று அந்த அற்புதத்தை பார்வையிட்டதுடன் அந்த இடத்தில் ஆலயம் ஒன்றினை அமைத்து வழிபாடு செய்யுமாறு உத்தரவிட்டார். தோற்றம் பெற்ற கல்லினை பிள்ளையார் என நினைந்து உருவகித்து கொன்றையடிப் பிள்ளையார் என பெயர் சூட்டி அழைத்ததனர் எனவும் சொல்லப்படுகிறது. ஆரம்பத்திலே பிள்ளையார் எனக் கருதப்பட்ட கல்லானது சிறிது சிறிதாக வளர ஆரம்பித்து சிவலிங்கமாக உருவகம் கொண்டது.தானே தோன்றியது என்ற காரணத்தின் அடிப்படை கொண்டு தான் தோன்றீஸ்வரன் என அச்சிவலிங்க உருவத்தை அழைக்கலாயினர். தீயிட்டும் எரியாத இடத்திலிருந்து தோன்றியதால் வேகாவனேஸ்வரர் எனவும் பெயர் கொண்டு அழைத்தனர். முல்லைத்தீவின் இதயமாக ஒட்டுசுட்டான்சிவன்கோயில் இன்றும் உயிர்த்துடிப்பனை இயங்குநிலை பெறச் செய்கிறது. இங்கு எழுந்தருளி அருளுரைக்கும் சிவலிங்கம் சுயம்பு லிங்கம் ஆகையால் தான் தோன்றீஸ்வரர் என்ற நாமத் திருச் சொரூபங்களுள் அவர் சிறப்பிடம் பெறுகிறார்.

## திருப்பணி வேலைகள்

ஆலயத் திருப்பணி வேலைகள் ஐந்து கட்டங்களாக இடம் பெற்றுள்ளன. ஆரம்பத்திலே வன்னியனார் கட்டளைப் படி சிறு கோயில் அமைக்கப்பட்டது. இரண்டாவதாக யானை பிடிக்க அருள்புரிந்த பெருமானுக்கு உபகாரமாக பணிக்கர்கள் (யானை பிடிப் போர்) கோயிலை மேலும் பெருப்பித்துக் கட்டி திருப்பணி செய்தனர். குளக் கோட்டன் மேற்கொண்ட ஆலயத் திருப்பணி வேலைகள் மூன்றாவது கட்டமாக நோக்கப்படுகின்றது. சின்னத்துரை ஓவசியரின் திருப்பணி வேலைகள் நான்காவது கட்டமாக நோக்கப்படுவதுடன் தற்போதைய ஆலய பரிபாலன சபையும், திருப்பணிச் சபையும் மேற்கொண்டு வருவதான திருப்பணிகளை ஐந்தாவது கட்டமாக குறிப்பிட்டு சொல்லிவிட முடியும்.

## மகோற்சவம்


ஆனி மாத அமாவாசை தினத்திலே கொடியேற்றத் திருவிழா இடம்பெறுவதுடன் பௌர்ணமி தினத்தன்று தீர்த்த உற்சவம் இடம்பெறும். தொடர்ந்து பதினாறு நாள்கள் ஆலயத்தின் திருவிழாக்கள் சிறப்புற இடம்பெறும். வேட்டைத் திருவிழா, தேர் திருவிழா, தீர்த்தத்திருவிழாக்களின் போது ஆலயத்தில் அதிகளவான பக்தர்கள் ஒன்றுகூடுவர். கொடியேற்றத் திருவிழா இடம் பெற்ற தினத்திலிருந்து ஒட்டி சுட்டான் பிரதேசத்தை அண்டியுள்ள மக்கள் கூட்டம் மாமிச உணவுகளை விடுத்து ஆசார சீலர்களாக இருந்து அயல் ஊர்களிலிருந்து வருவோர்க்கு அன்னதானம் வழங்குவர். அவர்களும் இறை தியானத்திலிருந்து பாற்செம்பு, ஆட்டக்காவடி, பறவைக்காவடி போன்ற நேர்த்திக் கடன்களை பக்திபூர்வமாக நிறைவேற்றுவர்.

> ஆரம்பத்திலே பிள்ளையார் எனக் கருதப்பட்ட கல்லானது சிறிது சிறிதாக வளர ஆரம்பித்து சிவலிங்கமாக உருவகம் கொண்டது. தானே தோன்றியது என்ற காரணத்தின் அடிப்படை கொண்டு தான் தோன்றீஸ்வரன் என அச்சிவலிங்க உருவத்தை அழைக்கலாயினர்.

## வேட்டைத் திருவிழா

திருவிழாக்களிலேயே அதி சிறப்பான விழாவாக உற்சவங்களின் 13 ஆவது நாளில் இடம்பெறுவதான வேட்டைத் திருவிழா முக்கியத்துவம் பெறுகிறது. அடியவர்கள் அனைவரும் விரதமிருந்து ஆலயம் சென்று வழிபட்டு இறைவன் வேட்டையாடும் இடம் அமையப்பெற்றுள்ள வனப்பகுதிபகுதிக்குச் சென்று குழைகளாலான உடை யணிந்து வேடுவராக காட்சியளிப்பர். பெருந்திரளாக ஒன்றுகூடி இறைவனின் பின்னாக அணிவகுத்து நிற்பர். தீராத நோய்களையெல்லாம் தீர்க்கும் கருணைக்கடலான சிவபெருமான் குதிரையின் மேல் ஆரோகணித்து வேட்டையாடச் செல்வார். வாகங் குழைகளினால் உடையணிந்து, அந்தக் குழையினாலான தொப்பியையும் அணிந்து கொண்டு உடல் முழுவதும் கரியைப் பூசி ஒப்பனை செய்து கொண்டு தடி ஒன்றின் நுனியில் குழைகளைக் கட்டுவர். அதனைக் கைகளில் ஏந்திச்செல்வர். வேடுவத்தலைவன் தேன் நிறைந்த சுரக்குடுவையைத் தாங்கி நிற்பான். வேட்டைத்திருவிழாவில் சுவாமி மட்டுமே எழுந்தருளுவார். அவர் பெரிய தலைமை வேடன் போல குதிரையில் செல்கையில் வேடுவப் படையானது அணிதிரண்டு அவர் பின்னாய்ச் செல்வதைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும். வேட்டை நிகழ்வு முடிவுற்றதும் சிவபெருமான் வேடுவர் புடைசூழ ஆலயம் திரும்புவார். ஈஸ்வரன் ஆலய வாசலை அடைந்ததும் இறைவியான பூலோக நாயகியார் ஈஸ்வரன் மீது ஊடல் கொண்டு கதவை மூடிவிடுவார். அம்மனுக்கும் சுவாமிக்கும் வாக்குவாதம் இடம் பெறும். வாக்குவாதத்தின் முடிவில் கதவு திறக்கப்படும். ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம் பெற்றதும் வேடுவ அடியவர்கள் தத்தமது உடைகளைக் களைந்து நீராடி அர்ச்சனைகளைச் செய்வர். இந்தக் காட்சிகள் என்றும் கண்களில் இருந்து அகன்றிடாதவை. அருளின் பொலிவை தத்ரூபம் செய்பவை.

காலத்தால் பிந்திய சுயம்பு லிங்கக் கோயில்கள் இரண்டு இங்கு காணப்படுகின்றன. ஒன்று ஒட்டிசுட்டானிலும் மற்றையது கொக்கட்டிச் சோலையிலும் அமையப்பெற்றுள்ளன. வரலாறுகளைத் தனித்துவம் செய்து நிற்குமம் ஒட்டிசுட்டான் தான்தோன்றீசுவரர் எனவும் வேகாவனேஸ்வரர் எனவும் அழைக்கப்படுகிறது. எம்பெருமான் பூலோகநாயகி சமேதராய் வெளி வீதி உலா வரும் காட்சி 7ஆம் திருவிழா அன்று அடியவர்களுக்கு கிடைக்கப்பெறும். ஆனாலும் தற்போது கொடியேற்றத் திருவிழாவன்றே வேகாவனேஸ்வரர் பூலோகநாயகி சமேதராய் வெளி வீதி உலா வருவதும் உண்டு.



எம்பெருமானை நினைந்து, நற்சிந்தனைகளின் தியானம் கொண்டு வழிபட்டு எம் குறைகளையெல்லாம் அவனிடம் ஒப்புதல் செய்வோம். வினைகள் களைந்து எல்லோரும் இன்புற்றிருக்க எம்பெருமான் பூலோகநாயகி சமேதராய் திருவருளை ஈந்திடட்டும்.

*"தென்னாடுடைய சிவனே போற்றி...*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.....*
*இன்பமே சூழ்க...*
*எல்லோரும் வாழ்க...*
*சிற்சபேசா....சிவ சிதம்பரம்......!!*

# உங்கள் ராசிக்கு எந்த நாள்கள் அதிர்ஷ்டம் துரதிஷ்டம் தெரியுமா?






சோதிடத்தில் ஒருவரது ராசியை வைத்து, ஒரு மாதத்தில் அவருக்கு எந்தெந்த நாள்கள் அதிர்ஷ்டம் மற்றும் துரதிஷ்டமாக அமையும் என்பதை தெரிந்துக் கொள்ளலாம்.

**மேஷம்**
மேஷ ராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாள்கள் 2, 3, 11, 12, 13, 21, 22, 29, 30, 31. துரதிஷ்டமான நாட்கள் 19, 20, 23, 24, 27, 28 ஆகும்.

**ரிஷபம்**
ரிஷப ராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாள்கள் 7, 8, 16, 17, 18, 25, 26. துரதிஷ்டமான நாள்கள் 4, 5, 23, 24, 27, 28, 31 ஆகும்.

**மிதுனம்**
மிதுன ராசி உள்ளாவர்களுக்கு அதிர்ஷ்டமான நாள்கள் 7, 8, 16, 17, 25, 26. துரதிஷ்டமான நாள்கள் 4, 5, 23, 24, 27, 28, 31 ஆகும்.

**கடகம்**
கடகராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாள்கள் 9, 19, 11, 20, 27, 28. துரதிஷ்டமான நாள்கள் 2, 3, 6, 7, 8, 25, 26, 29, 30, 31 ஆகும்.

**சிம்மம்**
சிம்மராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாள்கள் 2, 3, 12, 13, 21, 22, 29, 30. துரதிஷ்டமான நாள்கள் 4, 5, 6, 9, 10, 27, 28 ஆகும்.

**கன்னி**
கன்னிராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாள்கள் 4, 5, 14, 15, 16, 23, 24. துரதிஷ்டமான நாள்கள் 2, 3, 7, 8, 11, 12, 13, 29, 30 ஆகும்.

(நாளை தொடரும்)

## வரலாற்றில் இன்றைய தினம்



1532 - புனித உரோமப் பேரரசர் ஐந்தாம் சாள்ஸுக்கு எதிராக இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியும், பிரான்சின் முதலாம் பிரான்சிசும் ஓர் இரகசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

1757 - மூவாயிரம் பிரிட்டிஷ் துருப்புக்கள் றொபேட் கிளீங் தலைமையில் கிராஜ் உட்டவுல்லா தலைமையிலான ஐம்பதாயிரம் இந்தியத் துருப்புக்களை பகீரதி நதி ஓர பிளஸ்ஸி கிராமத்தில் வெற்றிகொண்டது.

1794 - ரஷ்யப் பேரரசி இரண்டாம் கதறீன் உக்ரைன் கீவ் நகரில் குடியேறுவதற்கு யூதர்களுக்கு அனுமதி வழங்கினார்

1868 - ரைப்ரைட்டர் (தட்டச்சு, இயந்திரம்) என அழைக்கப்படும் தனது கண்டு பிடிப்புக்கான காப்புரிமத்தை கிறிஸ்டோபர் லதாம் ஷோல்ஸ் பெற்றக் கொண்டார்.

1894 - பன்னாட்டுஒலிம்பிக்சும்மேளனம், பரிஸின் சோர்போனில் உருவாக்கப்பட்டது

1913 - டொயிறன் போரில் கிரேக்கர்களால் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டது

1940 - பரிஸ் கட்டடக்கலையைப் பார்வையிடுவதற்காக அடொல்ப் ஹிட்லர் மூன்று மணி நேர சுற்றுலாவாக, கட்டடக் கலைஞர் அல்டேட்ஸ்பீர் மற்றும் சிற்பக்கலை ஞர் ஆர்னோ பிறெக்கா ஆகியோருடன் புறப்பட்டார்

1941 - லித்துவேனியசெயற்பாட்டாளர்முன்னணி சோவியத் யூனியனிடமிருந்து லித்துவேனியா சுதந்திரம் பெற்றதாக அறிவித்து இடைக்கால அரசையும் நிறுவியது அடுத்த வாரமளவில் நாஸிகன் அங்கு வரும்வரை மட்டுமே அரசு நீடித்தது

1969 - அமெரிக்காவில் உணவு மற்றும் ஒளடத நீர்வா கத்தால் எனோவிட் எனும் குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை முதன் முதலாக உத்தியோக பூர்வமாக அனுமதிக்கப்பட்டது. இதுவே வாய்மூலமாக பயன்படுத்தப்படும் உலகின் முதலாவது கருத்தடை மாத்திரையாகும்

1967 - மூன்று நாள் கிளாஸ்பரோ உச்சி மாநாட்டுக்காக அமெரிக்க அரசதலைவர் லிண்டன் பி.ஜோன்சனும் சோவியத் பிரதமர் அலெக்ஸி கொசிஜினும் கிளாஸ்கோவில் சந்தித்தனர்

1990 - ஆயிரக்கணக்கானதமிழர்வடக்குநோக்கி திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு வழியாக நடையில் சென்றனர்.

**நாளை**

**ஆனி - 17**
சனிக்கிழமை -01.08.2017
திதி: அட்டமி மு.இ. 11.19 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ. 02.16வரை
சுபநேரம்:02.56-04.26 வரை
ராகுகாலம்:08.56-10.26 வரை

## முதல்வரே இரட்டை நிலைப்பாடு ஏன் ?

மழை கொட்டித் தீர்ந்து ஓய்ந்து விட்டது. தூவானம் இன்னமும் நின்றபாடாகத் தெரியவில்லை. வடக்கு முதல்வர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கூறி விட்டது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தொடர்ந்தும் முதலமைச்சராக இருப்பதற்கு எந்த ஆபத்தும் இல்லை.

ஆனாலும் இதனோடு ஒட்டி எழுந்த பிரச்சினைகள், பிரகண்டங்கள் ஓயவில்லை. பதவி விலகியவர்களின் அமைச்சுப் பதவிகளை, முதலமைச்சர் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது அமைச்சுப் பொறுப்புக்கள் சிலவற்றை கடந்த காலங்களில், பொ.ஐங்கரநேசனிடம் ஒப்படைந்திருந்தார்.


தன்னுடைய வேலைப்பழு.காரணமாகவே அதனைச் செய்தேன் என்று, விக்னேஸ்வரன் வெளிப்படையாக அறிவித்திருந்தார். ஆனால் இப்போது, புதிய அமைச்சர்களை நியமனம் செய்யாது, தனது அமைச்சுக்களுக்கு மேலதிகமாக, பதவி விலகிய இரு அமைச்சர்களின் அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஏற்கனவேமாகாணசபைவினைத்திறனற்றதாக இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டு உள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்கு வலிமை சேர்க்கும் வகையிலான காரியத்தைதான் முதலமைச்சர் தற்போது செய்து முடித்துள்ளார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, நம்பிக்கையில்லாப் பிரேரணை மீளப் பெறப்படுவதற்காக, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தனது நிலைப்பாட்டில் தளர்வை ஏற்படுத்தியிருந்தார். முதலமைச்சர் பதவியில் தான் தொடர்வதற்காக, கடந்த 14ஆம் திகதி கொடுத்த தீர்ப்பில் சில விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டிருந்தார். இதே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்தான், 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் நடந்த எழுக தமிழ் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியிருந்தார். அவர் தனது உரையில், "ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். அதாவது இன்றைய காலகட்டத்தில் நாடாளுமன்றத்திற்குத் தெரியப்படுவதாலோ அல்லது மாகாணசபைகளுக்குத் தெரியப்படுவதாலோ எமது உரிமைகளை நாம் வென்றெடுத்துக் கொள்ள முடியாது" என்று தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைப் பதவிகள் தமிழர் உரிமையைப் பெற்றுத் தராது என்று அந்தக் கூட்டத்தில் திரண்டவர்கள் முன்பாக முதலமைச்சர் கூறியிருந்தார்.

அப்படிக் கூறிய முதலமைச்சர் விக்னேஸ்வரன்தான், அந்தப் பதவியில் இன்னமும் தொடர்ந்துகொண்டிருக்கின்றார்.




அதனைவிட அந்தப் பதவிக்கு ஆபத்து வந்தபோது சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்து இன்னமும் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றார்.

இதைச் சொல்லும்போது, முதலமைச்சர் மீது கொண்ட காழ்ப்புணர்வு காரணமாகக் கூறுவதாகச் சிலர் நினைக்கக் கூடும். ஆனாலும், முதலமைச்சர் ஒன்பது மாதங்களுக்கு முன்னொரு பேச்சும், ஒன்பது மாதங்களின் பின்னர் வேறொரு நடவடிக்கையாகவும் இருந்தால் அதை எவ்வாறு சொல்லாமல் மூடி மறைக்க முடியும்?

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எழுக தமிழ் பேரணியில் பொய்யுரைத்திருக்க வேண்டும். இல்லையெனில், ஒன்றுமில்லாத, தமிழர் உரிமையைப் பெற்றுத் தராத பதவியைக் காப்பாற்றி அதில் தொடர்வதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் முயன்றிருக்க மாட்டார். இந்தப் பதவியூடாகவும் பணி செய்யலாம் என்பதால்தான், இவ்வளவு சலசலப்புக்கு மத்தியிலும் தனது பதவிக்கு வந்த ஆபத்தை அவர் பெரும் சிரமப்பட்டு முறியடித்து விட்டார்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 2 | | 9 | | 7 | |
| 8 | | | | | | | | 1 |
| | | 6 | | | | 9 | | |
| 5 | | | 9 | | 1 | | | 4 |
| | 6 | | | 3 | | | 8 | |
| 3 | | | 8 | | 2 | | | 7 |
| | | 5 | | | | 6 | | |
| 7 | | | | | | | | 5 |
| | 8 | | 5 | | 3 | | 4 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 4 | 8 | 1 | 2 | 7 | 5 | 3 |
| 2 | 5 | 3 | 4 | 7 | 9 | 8 | 1 | 6 |
| 8 | 7 | 1 | 5 | 6 | 3 | 9 | 2 | 4 |
| 3 | 8 | 9 | 2 | 4 | 7 | 5 | 6 | 1 |
| 6 | 2 | 5 | 1 | 9 | 8 | 4 | 3 | 7 |
| 1 | 4 | 7 | 6 | 3 | 5 | 2 | 9 | 8 |
| 5 | 9 | 6 | 3 | 8 | 4 | 1 | 7 | 2 |
| 7 | 1 | 8 | 9 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 4 | 3 | 2 | 7 | 5 | 1 | 6 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

டார்லிங் நீ என்னை
எவ்வளவு லவ் பண்றே?
என் இதயம் மொபைல் மாதிரி
அதில் நீ தான் சிம் கார்ட்




ஆனால் என் மொபைல்
டபிள் சிம்......

kowsika @Bubbly_Girl__ · Ma

பணம் உலகத்தைக் கவரும்.
வார்த்தைகள் மனிதரைக்
கவரும். இரக்கம் நிறைந்த ஒரு
செய்கை கடவுளையே கவரும்.

twitter






# தளபதி ஆனார் விஜய்

16 வயதில் சினிமாவில் அறிமுகமாகி இன்று 60 படங்களைத் தாண்டி நிற்கிறார் நடிகர் விஜய். படம் வெற்றியோ தோல்வியோ தயாரிப்பாளருக்கு நஷ்டத்தை தராதா நாயகனாக வளர்ந்து நிற்கிறார். இயக்குனர் எஸ்.ஏ.சந்திரசேகரின் மகன் என்கிற அடையாளம் அவர் சினிமாவில் அறிமுகமாவதற்கு பயன்பட்டிருக்கலாம்.

ஆனால் அவர் வளர்ந்தது. இந்த உயரத்தைப் பிடித்தது எல்லாமே அவரது சொந்த உழைப்பினால் தான். 1993 ஆம் ஆண்டு வெளிவந்த செந்தூரப்பாண்டி படத்தில் தான் விஜய்க்கு இளைய தளபதி என்று புனை பெயர் சூட்டப்பட்டது. . அப்போது ரஜினி நடித்த தளபதி படம் வெளிவந்த நேரம். விஜய், ரஜினியின் தீவிர ரசிகர் என்பதால் அந்த படத்தின் பெயரை இணைத்து இளைய தளபதி என்ற பட்டம் சூட்டப்பட்டது. அந்தப் பட்டமே அவருக்கு நிலைத்து விட்டது. இளைய தளபதி பட்டம் சூட்டப்படும்போது அவருக்கு வயது 20.


ஆனால் இப்போது 40 வயதை கடந்து விட்டார். இப்போதும் அவரை இளைய தளபதி என்றால் பொருத்தமாக இருக்குமா? இதனால் தளபதி ஆகிவிட்டார். விஜய்யின் பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட அவரது 61 ஆவது படமான 'மெர்சல்' படத்தின் முதல் பார்வை போஸ்ரரில் அவரது பட்டம் தளபதி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இனி அவர் அவ்வாறே குறிப்பிடப்படுவார். ரசிகர்களால் அவ்வாறே அழைக்கப்படுவார்.

ஒரு காலத்தில் காதல் இளவரசன் என்பது தான் கமல் ஹாசனின் பட்டம். 60 வயதைத் தாண்டிய பிறகும் எப்படிக் காதல் இளவரசனாக இருக்க முடியும் என்று கமல் அந்தப் பட்டத்தை அண்மையில் ஆர்யாவுக்கு கொடுத்தார். ஒரு குறிப்பிட்ட வயதைத் தாண்டியதும் காதல் இளவரசன் பட்டம் மறைந்து உலக நாயகன் ஆனது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய அம்சம்.

எல்லோருக்கும் பிடிச்ச மாதிரி
இருக்கனும்னா...




பணமாகத்தான் இருக்கனும்.



பின்னாடி பசங்க வாறாங்கனு
வைச்சிருகாங்க...



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** சுயநலம் கருதி சிலர் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் அதிகம் பணி புரிந்தால் மட்டுமே எதிர்பார்த்த இலாபம் வரும். மாணவர்கள் கவனமுடன் படிப்பதால் தரத்தேர்ச்சி சீராகும்.

**இடபம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் குழப்பம் வந்து விலகும். குடும்பத்தினருடன் வாக்குவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பண வரவை விட செலவு அதிகரிக்கும். கண்களின் பாதுகாப்பில் தகுந்த கவனம் தேவை.

**கடகம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி மறையும். பணவரவு திருப்திகரமாகும். நண்பர்களுடன் பழைய நினைவுகளை பேசி மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி நிலை உருவாகும். இலாபம் அதிகரிக்கும். குடும்ப விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும்.

**கன்னி:**செயல்களில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் குறைபாடுகளை உடனடியாக சரி செய்வது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நன்று.

**துலாம்:** உங்கள் கருத்துக்களை மற்றவர் தவறாக உணர்ந்து கொள்ளலாம். குடும்ப விஷயங்களை பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** குடும்ப ஒற்றுமையை பாதுகாக்க முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**தனுசு:** உங்கள் பேச்சில் வசீகரம் உருவாகும். சமூகத்தில் மதிப்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். ஆதாயம் உயரும். இயன்ற அளவில் உதவி செய்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** எதிலும் விடாமுயற்சி தேவைப்படும். பொறுமையால் சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சீராக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர்.

**கும்பம்:** நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய மாற்றம் செய்வீர்கள். இலாபம் உயரும். பெண்கள் பிறர் பார்வையில் அதிக பணம் செலவு செய்ய வேண்டாம். ஆரோக்கியம் பலம் பெறும்.

**மீனம்:** சவால்களை ஏற்று செயல்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.



# நான் விரும்பும் தொழில்



- ★ உலகில் பிறந்த எவரும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்ய வேண்டும்.
- ★ நாம் உயிருடன் வாழ உணவு தேவை. உணவைப் பெற்றுக் கொள்ள உழைப்பு மிக அவசியம்.
- ★ ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்தமான, பொருத்தமான தொழிலைச் செய்யலாம்.
- ★ தொழில்களில் ஏற்றத் தாழ்வு கிடையாது. செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள்.
- ★ சோம்பேறியாக இல்லாமல் பிறருக்கு உதவக் கூடிய எந்தத் தொழிலையும் செய்யலாம்.
- ★ ஆசிரியர் வாழ்க்கைக்கு வழிகாட்டுபவர்.
- ★ மருத்துவர் நோய்களில் இருந்து உயிர் காப்பவர்.
- ★ இந்தத் தொழில்களை சேவைகள் என்பர்.
- ★ நான் விரும்புவது ஆசிரியத் தொழிலையே.
- ★ ஆசிரியர் மாணவர்களின் அக விழியைத் திறப்பவர்.
- ★ சிந்தனையைத் தூண்டுபவர். நற்பழக்கங்களைச் சொல்லித் தருபவர் ஆசிரியர்.
- ★ மானிடர் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுபவர் ஆசிரியரே.
- ★ குரு இல்லா வித்தை பாழ் என்பார்கள்.
- ★ எழுத்தறிவித்தவன் இறைவனுக்கு சமமாவான்.
- ★ மாதா, பிதா, குரு, தெய்வம் என போற்றப்படுவர்களுள் குரு முக்கிய இடம் பெறுகிறார்.
- ★ அறிவைப் புகட்டி அன்பைப் பெருக்கும் ஆசிரிய தொழிலையே நான் மிகவும் விரும்புகிறேன்.



# தோப்புக் கரணம்

## தவறுக்குத் தண்டனை; அறிவுக்கு விருத்தி

ஒரு காலத்தில் தோப்புக் கரணம் போடுவது பாடசாலைகளில் சாதாரண விடயம். தவறு செய்தாலோ அன்றேல் வீட்டுப் பாடம் செய்து வராவிட்டாலோ ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தண்டனையாக தோப்புக்கரணம் போட வைப்பது வாடிக்கை. இதைவிட பரீட்சை சமயத்தில் மாணவனுக்கு பக்தி அதிகரித்து விட்டால், அதிக மதிப் பெண்களைப் பெறுவதற்காக பிள்ளையார் முன் தோப்புக் கரணம் போடுவதுமுண்டு. ஆனால் இக்காலத்தில் இந்த தோப்புக்கரணம் போடுவதை நாம் காண முடிவதில்லை. ஆனால் இந்த தோப்புக்கரணத்தை ஆய்வுக்கெடுத்துக் கொண்ட அமெரிக்க மருத்துவ ஆய்வாளர்கள், இதனை ஒரு உடற்பயிற்சியாக எடுத்து செய்து வருவதன் மூலம் இது பல மூளை நரம்பியல் நோய்களுக்கு மருந்தாகிறது என்று கூறுகின்றனர். நோயாளர்களுக்கு பரிந்துரையும் செய்கின்றனர்.

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சலைத் சேர்ந்த மருத்துவர் எரிக் ரொபினஸ் தோப்புக் கரணம் என்ற உடற்பயிற்சியால் மூளையின் செல்களும் நரம்புகளும் சக்தி பெறுகின்றன என்றும், பரீட்சைகளில் மிகக் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற ஒரு பள்ளி மாணவன் இந்த உடற்பயிற்சியை சில தினங்கள் தொடர்ந்து செய்த பின் நல்ல மதிப் பெண்கள் வாங்க ஆரம்பித்தார் என்றும் தான் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு இந்தப் பயிற்சியைப் பரிந்துரை செய்கிறேன் என்றும் குறிப்பிட்டார்.
யேல் பல்கலைக்கழக நரம்பியல் நிபுணர் யூஜினியஸ் அங் காதுகளைப் பிடித்துக் கொள்வது மிக முக்கிய அக்குபஞ்சர் புள்ளிகளைத் தூண்டி விடுகிறதென்றும், இடது கையால் வலது காதையும் வலது கையால் இடது காதையும் பிடித்துக் கொண்டு உட்காந்து எழுகையில் மூளையின் இரு பகுதிகளும் பயனடைகின்றன என்றும் கூறுவதோடு, தான் தினமும் இந்த உடற் பயிற்சியைச் செய்கிறேன் என்றும் கூறுகிறார்.
Autism, Alzhelmer போன்ற இக்காலத்தில் அதிகரித்து வரும் நோய்களுக்குக் கூட இந்த உடற்பயிற்சியை ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரைக்கிறார்கள். ப்ராணிக் சிகிச்சை நிபுணர் கோ.சோக். சூயி தன்னுடைய Super Brainyoga என்ற நூலில் தோப்புக் கரணம் பற்றியும் அதன் பலன்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளதோடு, தனது சொற்பொழிவுகளிலும் இது பற்றி அதிகம் குறிப்பிடுகிறார். இதனால்தான் தோப்புக்கரணம் பாடசாலைகளில் எம்முன்னோரால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. படிக்காத மாணவர் இம்முறையால் தண்டிக்கப்பட்டுவதன் மூலம் அவர்களது அறிவுத்திறன் அதிகரிக்கும். இந்தப் பயிற்சியைத் தினமும் மூன்று நிமிடங்கள் செய்தால் போதும் வியக்கத்தக்க அறிவு சார்ந்த மாற்றங்களைக் காணலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

# அக்கரைகள் பச்சையில்லை



செல்வரத்தினம் என்ற விவசாயி வைத்திருந்த காளை மாட்டுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. "ச்சே! என்னமாய்க் கொடுமைப்படுத்துகிறான் இந்த முதலாளி. என்னையும் ஒரு உயிரினம் என்று பாராமல் சுட்டெரிக்கும் வெயிலிலும்,குலை நடுங்க வைக்கும் குளிரிலும் காடு கரம்பைகளை உழ வைத்து வாட்டி எடுக்கிறானே! மலைபோல நெல் மூட்டைகளை வண்டிலில் ஏற்றி அதில் என்னைப் பூட்டி வாயில் நுரை தள்ளும் அளவுக்கு பாடாய்ப் படுத்துகிறானே! சாப்பாடாகிலும் நல்லதாக கிடைக்கிறதா? அதுவும் இல்லையே! மக்கிப் போன வைக்கோல், காய்ந்து போன புல், புளித்த நீர்க் கஞ்சி. இதெல்லாம் ஒரு சாப்பாடா? முறுக்கு போன்ற வைக்கோல் பசுமையான புல், பருத்திப் புண்ணாக்கு பசுமையான இலை தழைகள். இப்படி சாப்பாடு போடும் ஒரு முதலாளி எனக்கு எப்போது கிடைப்பார்? என ஏங்கியது காளை.
"நிச்சயம் வேறு முதலாளிமார் என்றால் மற்றக் காளைகளுக்கு திறமான உணவுகள் கொடுப்பார்கள். வாரா வாரம் குளிப்பாட்டுவர். விசேட வைபவங்கள் என்றால் இனிப்பு பொங்கல் அது, இது என அமர்களப்படுத்தி மரியாதைகள் செய்வர். இவை கிடைக்க வேண்டுமானால் இங்கிருந்து வெளி யேற வேண்டும்" என முடிவெடுத்தது காளை.
மறு நாள், காளை தனக்கு நோய் வந்து விட்ட மாதிரி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு படுத்து விட்டது. "ஏய் எழுந்திரு. இன்று உனக்கு என்ன வந்தது? நெல்மூட்டைகளை சந்தைக்கு கொண்டு போக வேண்டும்" என்று கூறி மாட்டின் வாலைப் பிடித்து முறுக்கினான் முதலாளி. ஆனால் மாடு இரண்டு மூன்று நாள்கள் எழுந்திருக்கவேயில்லை. விவசாயி, மாட்டுக்கு வயதாகி விட்டது என்ற முடிவுக்கு வந்தான். மற்றொரு விவசாயிக்கு காளையை விற்றும் விட்டான். காளைக்கு மகிழச்சி. தன் நடிப்பையிட்டு தானே பெருமைப்பட்டுக் கொண்டு முன்னைய சொகுசுக் கனவுகளோடு புதிய விவசாயி வீட்டுக்குச் சென்றது.
அந்த விவசாயி வீட்டிலும் அதே நிலை தான். முன்னைய முதலாளி சாப்பாட்டு விடயத்திலாவது தாராளமானவன் என காளை உணர்ந்தது. இந்த விவசாயி நிறைய வேலை வாங்குவான். ஆனால் காய்ந்த வைக்கோலை என்றாலும் கொஞ்சம் தாராளமாகத் தரமாட்டான். அசிங்கமான நீர்த்தொட்டியில் புளித்த அழுக்கு நீரை வேறு ஊற்றுவான். காளை மாட்டின் பசுமையான புல், கனவுகள் எல்லாம் சிதைந்து போயின. "இந்த முதலாளியைப் பார்க்கிலும் முன்னையவர் பரவாயில்லை. அங்கேயே இருந்திருக்கலாம்" என்றும் காளை நினைத்தது. இனி என்ன செய்வது என மிகவும் கவலைப்பட்டது. ஆயினும் உல்லாச வாழ்வை மனம் தேடவே செய்தது. "விலங்குகள் மேல் பற்றும் பாசமும் கொண்ட ஒரு மனிதன். உலகில் இல்லாமலா போய் விடுவான்" என நினைத்துக் கொண்டது.
மீண்டும் படுக்கையில் வீழ்ந்தது. விவசாயி "அட இது கிழட்டு மாடு போலும். வாங்கிய கொஞ்ச நாள்க ளுக்குள் இப்படி படுத்து விட்டதே. ஏமாந்து போனோமே! உடனடியாக இந்தச், சனியனை அம்பிட்ட விலைக்கு வித்து தொலைக்க வேண்டும்" என புலம்பினான். இரண்டொரு நாள்களில் காளையை விற்றும் விட்டான். காளைக்கோ அங்கி ருந்து விடுதலை கிடைத்ததில் மிக்க மகிழச்சி "இந்த மனிதன் நிச்சயம் நல்லவனாக இருப்பான். இவன் வீட்டில் நான் நீண்ட ஆயுளுடன் மகிழ்வாக இருப்பேன்" என்று எண்ணியபடி மூன்றாவது முதலாளி முன்னால் மிடுக்காக நடந்து சென்றது காளை.
மறுநாள் விடிந்தது. காளையை அவிழ்த்துக் கொண்டு ஊரின் ஒதுக்குப் புறமான ஒரு குடிசைக்குச்சென்ற முதலாளி, கையில்பணம்பெற்றுக் கொண்டு அங்கு நின்றவர்களிடம் காளையை ஒப்படைத்து விட்டுச் சென்று விட்டான்.
காளையோ எதுவும் புரியாமல் விழித்தது. சிறிதுவேளையில் குடிசைக்குப் பின்புறமாக காளையைக் கொண்டு சென்ற நால்வர் அதன் கால்களைச் சேர்த்துக் கட்டினர். காளை தடாலென தரை விழுந்து மிரண்டு அலறியது. தனக்கு நடக்கப் போகும் விபரீதத்தை அது உணர்கையில் கழுத்தில் கயிறு இறுக பலமான கத்தி ஒன்று காளையின் கழுத்தில் இறங்கியது.

**போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.**
**அதிக ஆசை அதிக துன்பம்.**
**இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழ்வதே**


# இரண்டு படங்களுக்கும் இடையில் 12 வித்தியாசங்கள் உண்டு கண்டுபிடியுங்கள்




# ரோஜாக் கூட்டம்

ரோஜாக்களின் வரலாறு சுவையானது. மனிதன் புவியில் தோன்றுவதற்கு 5 கோடி வருடங்களுக்கு முன்பே அவை தோன்றி விட்டன என்று சொல்லப்படுகிறது. எனினும் ரோஜாக்களில் இப்பொழுதுள்ள வகைகளையும் அவற்றின் எழிலையும் மனிதனே உண்டு பண்ணினான். வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் ரோஜாக்களைத் தோட்டக் கலைஞர்கள் எவ்வாறு பேணி வளர்த்தார்கள் என்பதும், ஏராளமான கவிஞர்கள் ரோஜாக்களின் புகழை எத்தகைய சொற்களால் பாடியுள்ளார்கள் என்பதும் தெரியவரும். ரோஜாக்கள் நீண்ட காலமாக மனித சமுதாயத்தின் குடும்பங்களின் செல்வச் சீமாட்டிகளாக வளர்ந்து வந்திருக்கின்றன. வெயில் கொழுத்தும் மண்ணிலும் துருவப் பகுதிகளில் பனிக்கட்டி மண்டலங்களிலும் அவை உயிர் தரிக்கும்.
நெப்போலியனின் மனைவி ஜோஸப்பைன் ராணி ஐரோப்பாவில் அப்போது கிடைத்த 250 வகையான ரோஜாக்களை ஒன்று திரட்டி அரண்மனைப் பண்ணையில் வளர்த்தார். அவற்றின் இனங்களைப் பெருக்கினார். அவர் அடிச் சுவடுகளைப் பின்பற்றி தோட்டக் கலைஞர்கள் ரோஜாக்களைப் பேணி வந்தனர். அவர்கள் ஒட்டு முறை மூலம் 8 ஆயிரம் ரோஜா வகைகளை உருவாக்கினர்.
அமெரிக்க தோட்டப் பண்ணைகளில் ஒட்டுமுறை மூலமாக ரோஜாக்களை இனப்பெருக்கம் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு வருடமும் அமெரிக்கா சுமார் 10கோடி ரோஜாக்கன்றுகளை ஏற்றுமதி செய்கிறது. ஒட்டுமுறைகளில் ஒரு ரோஜா செடியில் பலநூறு வகையும் நிறங்களும் கொண்ட ரோஜாப் பூக்கள் பூத்துக் குலுங்குவது கொள்ளை அழகுதான்.





சாவகச்சேரி சங்கத்தானை முருகமூர்த்தி ஆலய தேர்த் திருவிழா நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது. (4,9)



சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்டட்ட பாடசாலை மாணவர்களுக்கான வீதிப்போக்குவரத்துப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. (4,9)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமைச்சர் பீல்ட் மார் சல் சரத் பொன்சேகா கூறியுள்ளார். கடவத்தை விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினரின் அர்ப்பணிப்பிலேயே வடக்கு மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்துள்ளது. அதற்குப் பாதகம் ஏற்படுத்தும் வகையில் எவரேனும் செயற்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இனவாதக் கருத்துகளைத் தூண்டிவிட முயற்சித்தால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும்.

அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் மட்டுமல்ல அதையும் தாண்டிச் சென்று மேலதிக நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் - என்றார். (த-ய)

**மணமகள் தேவை**

28 வயது நிரம்பிய கௌரவ குடும்பத்தை சேர்ந்த அரச உத்தியோகம் புரிகின்றவருக்கு மணமகள் தேவை.
-077 6567 681, 021206 0141

**RENT CAR (A/C)**

Airport Services, Wedding Hire, Jaffna & Trinco Tour Services, Local Services
Phone No. - 077 6940 325

**நாஹா மருத்துவ நிலையம்**

கடூரமான கை. கால் விறைப்பு, பாரிசவாதம், ஆஸ்மா, தீராத புண்கள், மாறா நோய்களை குணமாக்கும் மருந்தியல்.
வங்கி முன் லேன்,
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி,
(ஜெகபதி வீடு),மானிப்பாய். -077 3212740

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் உடுவில் வீதியில் உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு
தொடர்பு: 077 7120979

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1374
சீட்டிழுப்பு திகதி 2017.06.22
வெற்றி இலக்கங்கள்
06 18 32 64 O
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 13,802,300/-
Web: www.dlb.lk

**SUPER BALL**
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் ▶ 666
சீட்டிழுப்பு திகதி ▶ 22.06.2017 வியாழக்கிழமை
F 03 37 41 73
சுப்பர் ஜக்பொட்
ரூ. 49, 575, 900/=
வெல்லப்படவில்லை
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



பிறப்பு
1962.05.09
இறப்பு
2017.05.24

கடந்த 24.05.2017 புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது பாசமிகு குடும்பத்தலைவர்

அமரர் **வடிவேலு அன்பழகன்** (சின்னக்கிளி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (23.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

12, பாரதி வீதி, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

**சௌபாக்ய / Development Fortune**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 50
சீட்டிழுப்பு திகதி ▶ 22.06.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 26 36 40 46
சுப்பர் இலக்கம்: 03
அதிர்ஷ்ட மாதம்: பெப்.
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 12, 869, 174/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3, 023, 378/=
அடுத்த ஜக்பொட் ரூ. 1, 089, 458/=
24.06.2017 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## கொக்குவில் வளர்மதி முன்பள்ளி பதவிவெற்றிடங்கள்

**1) முன்பள்ளி ஆசிரியர் (பொது) 2) முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் 3) முன்பள்ளி ஆசிரிய மேற்பார்வையாளர்.**

1) அனுபவமும் ஆற்றலும் தராதரமும் கொண்ட முன்பள்ளி கற்கையில் டிப்ளோமா அல்லது அதற்கொத்த தராதரம் பெற்றவர்கள் (கலைத்துறை விளையாட்டு, நாடகம் போன்ற முன்பள்ளி கற்றலுடன் தொடர்புடைய ஆற்றல்கள்) மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

2) ஆங்கில பாட டிப்ளோமா /கல்வியல் கல்லூரி ஆங்கில பாடம் நிறைவு செய்த/வேறு ஏதாவது இதற்கு ஒத்த அல்லது மேலதிக தகைமை கொண்ட முன்பள்ளி ஆங்கில கற்பித்தலில் அனுபவம் உள்ளவர்கள்.

3) முன்பள்ளி அல்லது ஆரம்பப்பள்ளி கற்பித்தலில் அனுபவமும் தராதரமும் கொண்டிருப்பதுடன் மேற்பார்வை செய்த அனுபவம் கொண்டவர்கள் ஓய்வுபெற்ற ஆசிரியர்களாயினும்

மேற்படி பதவிகளுக்கு அதற்குரிய தராதரம் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம். திறமைக்கேற்ப சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். திறமைக்கேற்ப சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். EPF.ETF செலுத்தப்படும்.

கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பத்தில் தங்கள் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு 30.06.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நேர்முகத்தேர்வு விவரம் தொலைபேசி மூலம் அறியத் தரப்படும்.

**முன்பள்ளி இணைப்பாளர்,
கொக்குவில் வளர்மதி முன்பள்ளி,
சம்பியன்லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

# INVITATION FOR BIDS- JAFFNA MUNICIPAL COUNCIL

1. The Chairman Local Authority Procurement Committee on behalf of the Municipal Council, Jaffna Northern Province, now invites sealed bids from eligible and qualified bidders for the Improvement works as described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of Construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) of the bidding document.
5. Interested bidders may obtain further information from the **Commissioner, Municipal Council Jaffna. (T.No: 021-2216468/ Fax 0212222334) on any working day from 0900 hrs to 1400 hrs from 27June 2017.**
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Commissioner, Municipal Council, Jaffna from 27 June 2017 until 19July 2017 from 0900 hrs to 1400 hrs upon payment of a non-refundable fees of Rs. 2000.00 + VAT.** The method of payment should be by cash.
7. Bids shall be delivered to the address below **The Commissioner, Municipal Council, Jaffna onor before 1400 hrs on 19July 2017.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Bids shall be valid upto63 days (Sixty three) till 20Sep2017 after the deadline for bid submission.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| Se. no | Bid No | Description of Work | Engineer's Estimated Cost /(Rs in million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Valid Period |
| 1 | JMC/WD/06/PSDG/2017/01 | Improvement of Puthumaimatha East, West & South veethy. | 1.101 | 2 months | C9 or above | 12,000.00 | 18.10.2017 |
| 2 | JMC/WD/06/PSDG/2017/02 | Improvement of Arulampalam lane at Ariyalai. | 0.716 | 2 months | C9 or above | 8,000.00 | 18.10.2017 |
| 3 | JMC/WD/06/PSDG/2017/03 | Improvement of Mulli lane at Ariyalai. | 0.833 | 2 months | C9 or above | 9,000.00 | 18.10.2017 |
| 4 | JMC/WD/06/PSDG/2017/04 | Improvement of Uppukulam North lane. | 1.859 | 2 months | C9 or above | 19,000.00 | 18.10.2017 |
| 5 | JMC/WD/06/PSDG/2017/05 | Improvement of Thillaivayal 1st, 2nd, 4th& 5th lanes. | 4.962 | 3 months | C8 or above | 50,000.00 | 18.10.2017 |
| 6 | JMC/WD/06/PSDG/2017/06 | Improvement of Ice Plant & Reclamation link Roads. | 1.095 | 2 months | C9 or above | 11,000.00 | 18.10.2017 |
| 7 | JMC/WD/06/PSDG/2017/07 | Improvement of Neernochithalvu lane at Ariyalai. | 1.037 | 2 months | C9 or above | 11,000.00 | 18.10.2017 |
| 8 | JMC/WD/06/PSDG/2017/08 | Improvement of AdappanVeethy 1st, 2nd& 3rd lanes. | 1.414 | 2 months | C9 or above | 15,000.00 | 18.10.2017 |
| 9 | JMC/WD/01/CF.Rd/2017/25 | Construction of MurugamoorthyVeethy by lane, Thaamarai Veethy 1st, 2nd,3rd by lanes &BharathyVeethy 3rd lane. | 2.506 | 3 months | C8 or above | 26,000.00 | 18.10.2017 |
| 10 | JMC/WD/01/CF.Bu/2017/26 | Renovation of the Jaffna Clock Tower. | 0.732 | 2 months | C9 or above | 8,000.00 | 18.10.2017 |

10. Pre bid meeting will be held at 10.00 hrs on 12July2017 in the Municipal Council Building, Jaffna. Interested bidders may attend the pre-bid meeting at their own expenses.

**Chairman, Local Authority Procurement Committee,
Municipal Council, Jaffna, Northern Province.**

23.06.2017

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

**ANNUAL PRIZE GIVING -2017**

**Saturday 24th June 2017**
**at 09.30 am**

**Chief Guests**

**Dr.Karunyan Arulanantham**
M.D,FACE,FAAP, DCH
Medical Director, Antelope Valley
Community Clinic, Lancaster, California, USA

&

**Dr (Mrs)Inpamani Arulanantham**
M.D, FCAP
Medical Director, Pathology and Laboratory, Palmdale
Regional Medical Centre,
Palmdale, California, USA

**Chairman**

**Ven Samuel J.Ponniah,**
Archdeacon of Jaffna & Manager of the College

*Parents, old boys & Well - Wishers are cordially invited.*

**- Principal, Staff & Students -**

## மரண அறிவித்தல்கள்

### அருட்பணி கிறிஸ்ரி செல்வராஜா அடிகளார் (IVD)



பிறப்பு 02.09.1957 இறப்பு 21.06.2017

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் நீர் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்பணி கிறிஸ்ரி செல்வராஜா அடிகளார் (IVD) 21.06.2017 புதன்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஜெயராஜா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் அன்ரனி சற்குணராஜா (கனடா), இம்மனுவேல் ஆனந்தராஜா (இலங்கை, ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்), மேரி ஜெயராணி (கனடா), ஜேம்ஸ் ஜெயசீலராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திருவுளப் பணியாளர் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் புனித மரியன்னை பேராலயத்தில் பி.ப.3.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலைஉற்றார்.உறவினர்,நண்பர்கள்,அருட்தந்தையர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ஜெ.இ.ஆனந்தராஜா**

### சபாரட்ணம் சற்குணானந்தன்

(முன்னாள் செயலாளர், வலி. மேற்கு பிரதேச சபை)



மலர்வு 24.04.1939 உதிர்வு 21.06.2017

யாழ்ப்பாணம், சங்கரத்தையைச் சேர்ந்த சபாரட்ணம் சற்குணானந்தன் (முன்னாள் செயலாளர், வலி. மேற்கு பிரதேச சபை) 21.06.2017 புதன் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் - பாக்கியவதி தம்பதி யரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் சிவகாம்பிகை அம்மாளின் அன்புக்கணவரும் சிவானந்தன் (U.S.A), மோகன வரதன் (கணக்காளர் George Steuarts Travels L.T.D) காலஞ்சென்ற தயானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலேஸ்வரி (U.S.A), மதனா (ஆசிரியை, கொழும்பு இராம நாதன் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் சரண் (U.S.A),அருண்(U.S.A), ஷானிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.06.2017) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவாலி வீதி,**
**சங்கரத்தை, வட்டுக்கோட்டை.**

**தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**021 225 0799, 077 7567 259**
**072 2469 103**

## பிரதி...

துறக்கவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகெண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அயலுறவு அமைச்சின்கீழ் தேசிய லொத்தர் சபை கொண்டுவரப்பட்டுள்ளது. இது தவறான அணுகுமுறையாகும். இப்படி வழங்குவதற்கு அதிகாரமும் இல்லை. எனவே, இங்கு அதிகார துஷ்பிரயோகம் நடந்துள்ளது. அதேவேளை, தற்போது தனியார் நிறுவன மொன்றுக்கு எதனோல் உற்பத்திக்காக அனுமதியை அரசு வழங்கியுள்ளது. அதற்கு என்ன காரணம்? அப்படியென்றால் கல்லோயா நிறுவனத்தை நட்டமான நிலமையில் தொடர்ந்து செயற்பட அனுமதிக்கப்போகின்றதா என்ற கேள்வியும் உள்ளது.

நமது நாட்டில் நான்கு கசினோ நிலையங்கள் காணப்படுகின்றன. இந்த நிலையங்களிலிருந்து ஆயிரம் மில்லியன் வீதம் 4 ஆயிரம் மில்லியன்கள் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், இது வரையில் 2 ஆயிரத்து 400 மில்லியன்களே பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 3 ஆயிரத்து 600 மில்லியன்கள் பெறப்படாதிருப்பதற்கு என்ன காரணம்? இந்த விடயங்கள் நிதி அமைச்சின் அறிக்கையில் காணப்படவில்லை.

இதனால்தான் கணக்காய்வாளர் நாயகம் நிதி அமைச்சின் அறிக்கை தொடர்பில் எதனையும் கூறமுடியாது என்று பின்னிற்கின்றார். அதேநேரம், நாட்டின் கடன் தொகையில் 5.8 பில்லியன் ரூபாக்கள் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கின்றன. அது குறித்த பதிவுகள் இல்லை. யாருக்கு செலுத்தப்பட்டுள்ளன என்பது குறித்த தகவல்கள் இல்லை. ஆகவே, அது தொடர்பில் அவதானத்தைச் செலுத்தவேண்டியுள்ளது.

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் 10 இலட்சத்துக்குட்பட்ட வைப்புத்தொகைக்கு 10 சதவீத வட்டி வழங்கப்படும் என்றும், அதற்கு அதிகமான வைப்புக்கு 12 சதவீத வட்டியும் வழங்கப்படும் என்று கூறப்பட்டாலும் இது அரச வங்கிகளில் வைப்பிலிடுவதற்கு குறித்த வட்டி வழங்கப்படாத நிலமையே உள்ளது. காரணம், அந்தத் தொகைகளை நிதி நிறுவனங்களில் வைப்பிலிடுவதற்கே அவ்வாறான வட்டி வழங்கப்படுகின்றது. இவையெல்லாம் என்னவென்று கருதுவது.

நாடாளுமன்ற கணக்குக் குழுத் தலைவராக நிதி பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ண காணப்படுகின்றார். அவர் பிரதி நிதி அன்மச்சராக இருக்கும் அதேநேரத்தில் எவ்வாறு மேற்பார்வைக் குழுவின் தலைவராக தெரிவானார் என்பது தொடர்பில் பரஸ்பர நிலைமைகள் காணப்படுகின்றன. ஆகவே அவர் இரண்டில் ஒரு பதவியைக் கைவிடுவதே நல்லாட்சி அரசுக்கு சிறந்தாக அமையும்- என்றார். (த)

## நீதிச்...

இலங்கையின் நீதித்துறையில் காணப்படும் குறைபாடுகள், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் என்பன தொடர்பாக அண்மையில் ஐக்கிய நாடுகளுக்கான சிறப்புப் பிரதிநிதி மொனிகா பின்டோ ஐ.நா.வில் அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை இலங்கை அரசும், பன்னாட்டுச் சமூகம் கருத்திற்கொள்ள வேண்டுமென உலகத் தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய சமாதான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அதற்கு பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைப் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டுமெனவும் பேரவை வலியுறுத்தியுள்ளது. (த-ய)

## சைட்டம்...

விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமலேயே நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தைக் கோரியிருந்த கூட்டு எதிரணி உறுப்பினர்கள் உரியநேரத்தில் சபையில் பிரசன்னமாகி இருக் காததான் காரணமாகவே நாடாளுமன்றம் நேற்று இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய தினேஷ் குணவர்தன, பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளமை பாரதூரமான விடயமென சுட்டிக் காட்டி இது பற்றி விவாதிக்கவேண்டும் எனக் கோரினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இது பற்றி எதிரணி உறுப்பினர்கள் கலந்துரையாடியுள்ளனர் எனக் குறிப்பிட்டதுடன், விவாதத்துக்குரிய நேரத்தை ஒதுக்குவது பற்றி சபை முதல்வர், அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் வினவினார்.

"மதுவரி சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகளை அங்கீகரிப்பதற்கான விவாதம் முடிவடைந்த பின்னர் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்தை நடத்தலாம். இதன்படி, மாலை 5.30இற்கு விவாதத்தை ஆரம்பிக்கமுடியும்" என்று சபை முதல்வர் பதிலளித்தார்.

இதற்கு எதிரணி உடன்படவில்லை. மாலை 4.30 மணிக்கு விவாதம் ஆரம்பிக்கப்படவேண்டும் எனக் கோரினர். இதற்கு ஆளுந்தரப்பும் இணக்கம் வெளியிட்டது. இதையடுத்து மாலை 4.30மணிக்கு விவாதம் நடத்தப்படும் என சபாநாயகர் குறிப் பிட்டார்.

இதற்கமைய மதுவரிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளை அங்கீகரிக்கும் விவாதம் மாலை 4 மணிக்கு நிறைவடைந்து சபை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த இணக்கத்துக்கமைய மதுவரிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளை அங்கீகரிக்கும் விவாதம் நடைபெற்றது. இந்த விவாதம் மாலை 4 மணிக்குப் பூர்த்தியடைந்து சபை இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட பின்னர், சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைக்குமாறு சபைக்கு அந்த வேளையில் தலைமை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்ஆனந்த குமாரசிறி அழைப்பு விடுத்தார். அவ்வேளை மேற்படி பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு தினேஷ் குணவர்தன அவையில் இருக்கவில்லை. இதனால் சபை ஒத்திவக்கப்பட்டது.

இது கூட்டு எதிரணிக்குப் பெரும் ஏமாற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியது. இது அரசால் திட்டமிட்ட அடிப்படையில்செய்யப்பட்டுள்ளதுஎனவும், அவர்கள்விசனம் வெளியிட்டனர். அதன்பின்னர் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தி எதிர்ப்பையும் வெளியிட்டனர். (த)

## மங்கள...

மங்கள சமரவீர ஓரம் கட்டப்பட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடை முறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு இணங்கியதையடுத்து அதற்கு இரு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சர்கள் மட்டக் குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை நேற்றுமுன்தினம் அங்கீகாரம் அளித்தது.

அமைச்சரவைக் கூட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த யோசனையைச் சமர்ப்பித்திருந்தார்.

இதன்படி, தலைமை அமைச்சர் தலைமையில் அமைச்சர்கள் மட்டக் குழுவும், அதற்கு உதவும் வகையில் அதிகாரிகள் மட்டக் குழு வொன்றையும் நியமிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சர்கள் மட்டக் குழுவில், அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, மகிந்த சமரசிங்க, சாகல ரத்நாயக்க, விஜேதாச ராஜபக்ச, திலக் மாரப்பன, ருவான் விஜேவர்த்தன, மற்றும் ஹர்ச டி சில்வா ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எனினும், கடந்த இரண்டரை ஆண்டுகளாக, அயலுறவு அமைச்சராக இருந்து, ஜெனிவா நெருக்கடியைக் கையாண்டவரும், ஜெனிவா பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியான கருத்தை கொண்டிருப்பவருமான நீதியமைச்சர் மங்கள சமரவீர இந்தக் குழுவில் சேர்த்துக்கொள்ளப்படாமை அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சர்கள் குழுவின் விவரம் வெளியிடப்பட்டபோது, மங்கள சமரவீர அதில் உள்ளடக்கப்படாவிடின் அது பெரும் தவறு என்று அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, சுட்டிக்காட்டியிருந்தார்.

அப்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீரவுடன், சிறிலங்கா சுதந் திரக்கட்சி அமைச்சர் ஒருவரையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறினார். இதற்கமைய சுசில் பிரேமஜயந்தவின் பெயரையும் உள்ளடக்கப் பரிந்துரைக்கப்பட்டது.

எனினும், நிதியமைச்சில் தமக்கு அதிகம் வேலை இருப்பதால் இந்தக் குழுவில் பங்கேற்க முடியாது என்று மங்கள சமரவீர மறுத்து விட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-ய)

## நீதிக்கான...

நிலையில், இரு அமைச்சுக்கள் மீதே விசாரணை நடத்தப்படும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று உறுதியாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு முடிவடைந்த பின்னர் பத்திரிகையாளர்கள் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை இடைமறித்துக் கேள்வி எழுப்பினர். 'வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீது மீண்டும் விசாரணை நடத்தப்படுமா?' என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு முதலமைச்சர், "வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரிக்க வேண்டிய தேவை உள்ளது. குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மீண்டும் விசாரணை நடத்தப் புதிய விசாரணைக் குழு விரைவில் அமைக்கவுள்ளேன். அவர்கள் இந்த இரு அமைச்சுக்கள் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை நடத்துவார்கள்" என்று பதிலளித்தார்.

வடக்கு முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சமர்பித்திருந்த வடக்கு மாகாண சபையின்நீதிக்கான அணி, வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு உள்பட 5 அமைச்சுக்கள் மீது சுயாதீனமான, சட்டரீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது. ஆனால் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளார். (வ-5-8)

## ஒன்பது...

உரிய உதவிகள் கிடைக்காத பட்சத்தில் நிலமை மேலும் மோசமடையுமெனவும் அவ்வமைப்பு எச்சரித்துள்ளது.

2017இல் இலங்கையின் அரிசி உற்பத்தி 40 சதவீதத்தால் குறையுமென்று ஐ.நா. உணவு மற்றும் விவசாயத் திணைக் களமும் உலக உணவுத் திட்டமும் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏனைய விவசாய உற்பத்திகளும் பாதிக்கக்கூடும் எனவும் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு தசாப்தங்களில் இலங்கையில் வரலாறு காணாத வறட்சி அண்மையில் ஏற்பட்டது. இதனால், பல விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். அதன் பின்னர் 14 ஆண்டுகளுக்குப் பின்னர் கடும் மழையை இலங்கை எதிர் கொண்டது.

எனினும், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கில் இந்த மழை போதுமானதல்ல. நீர்த்தேக்கங்களில் இன்னமும் நீர்மட்டம் உயரவில்லை என்று ஐ.நா. அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (த)

## நாகம்...

கற்கைகள் மற்றும் ஆய்வு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த "சமாதானத்திற்கான இலங்கையின் போராட்டமும் கற்றுக்கொண்ட பாடங்களும் " என்ற தொனிப்பொருளிலான மாநாட்டின் சிறப்பு அதிதியாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கலந்து கொண்டார். அங்கு அவர் உரையாற்றியதுடன் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

போரின் பின்னர் 14 ஆயிரம் போராளிகளுக்குப் மறுவாழ்வு அளித்து சமூகமயப்படுத்தினோம். அதேபோன்று போர் முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் 595 சிறுவர் போராளிகளை அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்தேன். இவை அச்சுறுத்தலான விடயங்கள் என்றாலும் கூட முக்கியமான விடயமெனக் கருதிச் செய்தோம்.

ஆசியாவில் எம்மை போன்ற நாடுகளுக்கு மேற்குலக நாடுகள் மனித உரிமைகள் தொடர்பாகக் கற்பிக்க வருகின்றனர். நாகம் தீண்டும் போது மனித உரிமைகளை மீறியேனும் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குப் பின்வாங்கப் போவதில்லை. ஆனால் நாட்டை பாதுகாத்த படையினருக்கு எதிராகப் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் மேற்குலகச் சக்திகளின் நோக்கங்களுக்கு அமைவாக தற்போதைய அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

பயங்கரவாதிகளுக்கு அவர்களின் மொழியிலேயே பதில் கொடுக்க வேண்டும். பயங்கரவாதத்தில் நல்லது கெட்டது என்று வேறுபாடில்லை. சனநாயகத்தின் பரம எதிரி பயங்கரவாதம் என்பதை மறந்து விட வேண்டாம்- என்றார். (த)

## ஆளுநர்...

முதலாம், இரண்டாம் கட்ட வாசிப்புக்கள் கடந்த அமர்வுகளில் நடைபெற்றன. அந்த இரு நியதிச் சட்டங்களும் இறுதி செய்வதற்காக முதலமைச்சரால் நேற்றைய அமர்வில் முன்மொழியப்பட்டது. இரு நியதிச்சட்டங்களையும் ஆராயப்பட்ட திருத்தங்களுடன் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் வழிமொழிந்தார். சபையில் இரு நியதிச் சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. அவை வடக்கு மாகாண ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும் என்று அவைத் தலைவர் தெரிவித்தார்.

"எமது மாகாண சபையில் அதிகளவான பிரேரணைகளை நிறைவேற்றி இருக்கின்றோம். எத்தனை நியதிச் சட்டங்களை உருவாக்கியுள்ளோம் என யாரவாது கேட்டால் பதில் அளிக்க முடியாத நிலை இருக்கின்றது. இதற்கு காரணம் எமக்குள் ஒற்றுமை குறைவு. எமது மாகாணத்துக்கு என மாகாண சட்ட வரைபு திணைக்களம் என்ற ஒன்றை உருவாக்கினால் நாம் நியதிச் சட்டங்களை உருவாகக் இலகுவாக இருக்கும்." என்று அந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டினார். (ற-8)

## கடந்த...

இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 97ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. அதிலேயே அவைத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக மேஜர் ஜெனரல் சந்திரசிறி பதவி வகித்தபோது வடக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் சில திணைக் களங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு தொகை ஆளுநர் நிதியத்துக்காக எடுக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. அது தொடர்பில் மாகாண சபை நடவடிக்கைகளை மேற் கொண்டது. முன்னாள் ஆளுநர் பளிகக் காரவின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது. அதையடுத்து மாகாண சபைக்கு அந்த நிதி மீளக் கிடைத்தது. அந்த நிதி மாகாண தலைமைச் செயலாளர் திணைக் களத்தின் கணக்கிலக்கத்துக்கு மாற்றப்பட்டது. நிதி கிடைத்து 8 மாதங்கள் கடந்துள்ளபோதும் இதுவரை அந்த நிதியை மாகாண அமைச்சுக்கள் பயன்படுத்தவில்லை.

அந்த நிதி போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கப் பயன்படுத்துவது என்று உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதற்கான திட்டங்களையோ, முயற்சிகளையே மாகாண சபையின் எந்த அமைச்சும் முன்னெடுக்கவில்லை.

வடக்கு மாகாண தலைமைச் செயலாளருக்கு இந்த மாதம் 13 ஆம் திகதி அந்த நிதியை பயபடுத்த உரிய முயற்சிகளை எடுக்குமாறு கோரி என்னால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது - என்றார். (ற-8)

## குருகுலராசா...

மாகாண சபையின் இணையத் தளத்தில், அவர்கள் தொடர்ந்தும் அமைச்சர்களாகப் பதவி வகிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட கல்வி மற்றும் விவசாய அமைச்சர்களைத் தங்கள் பதவிகளைத் தியாகம் செய்யுமாறு கோரியிருந்தார். இதற்கு அமைவாக கடந்த 15ஆம் திகதி விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், கல்வி அமைச்சர் த.குருகுலராசா 20ஆம் திகதியும் தங்கள் பதவி விலகல் கடிதங்களை வடக்கு மாகாண முதலமைச்சரிடம் ஒப்படைத்தனர். இதற்கு அமைவாக குறித்த அமைச்சுப் பொறுப்புக்களை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஏற்றுக் கொண்டார்.

ஆனாலும் வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில், வடக்கு மாகாண கல்வி அமைச்சராக த.குருகுலராசா மற்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இருவரும் பதவியில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

## தமக்கான...

"வடக்கு மாகாண கல்வி மற்றும் விவசாய அமைச்சுக்களுக்குப் பொருத்தமானவர்களை அமைச்சர்களாக நியமிப்பதற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அவர்களின் சுயவிவரக் கோவைகள் கேட்கப்பட்டுள்ளன. சில உறுப்பினர்கள் இதுவரை அனுப்பியுள்ளனர். கட்சிகள், தகமைகள், மாவட்டங்கள் போன்ற விடயங்கள் ஆராயப் பட்டு புதிய அமைச்சர்களை நியமிப்பது தொடர்பில் முடிவெடுக்கப்படும்" என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பத்திரிகையாளர்களிடம் நேற்றுத் தெரிவித்திருந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்ட உறுப்பினர்கள் நேற்று மாலை வரை, முதலமைச்சரிடமிருந்து அவ்வாறான கோரிக்கை தமக்கு கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டனர்.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக கையெழுத்திட்ட உறுப்பினர்களில் குறிப்பிட்ட சிலருக்கு நேற்று முன் தினம் மாலை, முதலமைச்சரால் மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக அந்த உறுப்பினர்கள் நேற்று மதியத்துக்கு முன்னதாக தமது சுயவிவரக் கோவைகளை முதலமைச்சரிடம் வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5,8)

## தெரிவுக்...

விலகல் கடிதத்தைக்கூட கொடுப்பதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்"

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இரு அமைச்சுக்கள் மீதும் புதிய விசாரணைக்குழு அமைக்கப்படும் என்று பத்திரிகையாளர்களிடம் நேற்றுத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் அமைச்சர் டெனீஸ்வரனின் நிலைப்பாடு என்ன என்று கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு அரசியலில் ஏற்பட்ட அசாதாரண சூழல் முடிவுக்கு வந்துள்ளது. முதலமைச்சருக்கு அறிக்கையிட்ட விசாரணைக் குழுவின் விடயங்களை அவர் இப்போதுதான் சரியாக நடைமுறைப்படுத்தியுள்ளார்.

எனது அமைச்சு மீது முறைப்பாடு தெரிவித்த சாட்சி கடந்த விசாரணைக்கு வரவில்லை என்று முதலமைச்சர் கூறியிருந்தார். யாழ்ப் பாணத்தில் நின்று கொண்டே அந்தச் சாட்சி, அசமந்தப் போக்காக விசாரணைக்கு சமூகமளிக்கவில்லை. அந்தச் சாட்சிக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்குவதை வரவேற்கின்றேன். புதிய விசாரணை - சுயாதீனமான - சட்டவலுவுள்ள - மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய தெரிவுக் குழுவாக அமைய வேண்டும். அந்த விசாரணையை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்கின்றேன். அப்படியான விசாரணைக் குழு அமைக்கப்பட்டால், முதலமைச்சர் கேட்டுக்கொண்டதைப் போன்று எனது ஒரு மாத விடுப்புக் கடிதத்தை கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றேன். தேவைப்படின், விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு எனது பதவி விலகல் கடிதத்தைக் கூட நான் சமர்பிக்கத் தயாராகவே இருக்கின்றேன் - என்றார். (வ-5)

## அடுத்த...

தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபை விவகாரம் ஆராயப் பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்பிக்கப்பட்ட பின்னர், முதல் வருடனான கடிதப் போக்குவரத்துத் தொடர்பில் இரா.சம்பந்தன் கூட்டத்தில் தெரியப்படுத்தினார். வடக்கு அமைச்சர்களை 2013ஆம் ஆண்டு முதலமைச்சரே நியமித்ததையும் சுட்டிக்காட்டினார். விவசாய அமைச்சராக பொ.ஐங்கரநேசன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் நியமிக்கப்பட்டார் என்று இரா.சம்பந்தன் தெரிவித்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அதனை மறுதலித்துள்ளார். பொ.ஐங்கரநேசனை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியே நியமித்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக நாம், மாவை அண்ணனை (நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா) நியமிக்குமாறே கோரினோம். ஆனால், இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனுமே, விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தினர். நடத்த எல்லாக் குழப்பங்கள் - சர்சைகளுக்கும் இருவருமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாணசபையின் அடுத்த முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரனை நியமிக்கச் சொல்லி ஆர்பாட்டம் செய்வார்கள். கடையடைப்பு நடத்துவார்கள். பங்காளிக் கட்சிகள் மூன்றும் தாங்கள் வெளியேறுவோம் என்று சொல்வார்கள். இறுதியில் நீங்கள், அவரைத்தான் அடுத்த முதலமைச்சராகவும் நியமிப்பீர்கள் என்று தெரிவித்துள்ளார்.

இதன்போது, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியைச் சேர்ந்த, நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், அவரை மீளவும் நீங்கள் நிறுத்தினாலும் நாங்கள் ஏற்கமாட்டோம் என்று பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தனின் அலைபேசிக்கு பல முறை தொடர்புகொண்ட போதும் அவர் பதில் அளிக்கவில்லை. (வ-5,101)

## சட்டமா...

நீதிமன்றம் நிராகரித்துள்ளதாகச் சபாநாயகர் கரு ஜயசூரிய நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார். இதனையடுத்துச் சபையில் கடும் வாதப் பிரதிவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதனையடுத்து சபாநாயகர் அறிவிப்பு இடம்பெற்றபோது விடயத்தைச் சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

இது தொடர்பில் சபாநாயகர் தன் அறிவிப்பில், "அரசமைப்பின் 121 (1) சரத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டம் தொடர்பில் உயர் நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது. இந்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்திலிருந்து மீளப்பெறுவதாக நீதி அமைச்சர் தீர்மானித்துள்ளதாகச் சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய இந்தச் சட்டவரைவுக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ள மனுவை மீளப்பெறுவதாக மனுதாரர் அறிவித்துள்ளார். உயர் நீதிமன்றம் இது தொடர்பான மனுவை நிராகரித்துள்ளதாக எனக்கு அறிவித்துள்ளது"-என்றார்.

இந்த அறிவிப்புத் தொடர்பில் மகிந்த ஆதரவு ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தமது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

அவர், "அரசமைப்புக்கு உட்பட்டதெனச் சட்டமா அதிபர் உறுதிப்படுத்திய சட்டவரைவே இவ்வாறு மீளப் பெறப்பட்டுள்ளது. இந்தச் சட்டவரைவுக்கு எதிராக இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. சட்ட விடயங்களை முன்வைக்கும்போது சட்டமா அதிபர் இதனை மீளப்பெறவேண்டுமெனக் கூறியுள்ளார். இந்தச் சட்டவரைவை மீளப் பெற்றிருக்காதுவிட்டால் நிலமை என்ன? இது பாரதூரமான விடயம். இதற்கு முன்னரும் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் மீளப்பெற்றுக்கொண்ட சம்பவங்கள் உள்ளன. சட்டமா அதிபரின் உறுதிப்படுத்தலின் பின்னர் நீதி அமைச்சுக்கு சமர்ப்பித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்படும் சட்டவரைவை அவரே மீளப்பெறுவது நல்லதல்ல. இரு மனுதாரர்களில் ஒருவர் தான் மனுவை மீளப் பெற்றுள்ளார்" என்றார்.

தினேஷ் குணவர்தனவின் கருத்தை மறுப்பளித்து உரையாற்றிய சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, "தினேஷ் குணவர்தனவின் வாதத்தை ஏற்க முடியாது. கீழ் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு மேல் நீதிமன்றத்தால் மாற்றப்படுவதுண்டு. தினமும் காலையில் நேரத்தை வீணடிக்கும் வாதங்களையே இவர்கள் முன்வைக்கின்றனர்" என்றார்.

எனினும், தினேஷ் குணவர்தன் முன்வைத்த கருத்துக்கு ஆதரவாக எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது கருத்தை முன்வைத்தார்.

"தினேஷ் குணவர்தனவின் கருத்துடன் நானும் உடன்படுகின்றேன். நீதி அமைச்சர் குறித்த சட்டவரைவை மீளப்பெறுவதாகச் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார். குறித்த சட்டவரைவு யாப்புக்கு முரணானதாக அவர் கூறவில்லை. ஆனால், அவர் உறுதிப்படுத்திய சட்டவரைவே பின்னர் மீளப் பெறப் பட்டிருக்கின்றது" என்றார் சுமந்திரன்.

எதிர்க்கட்சிகள் கடும் வாதத்தில் ஈடுபட்டுவந்த நிலையில் ஆளுந்தரப்பு சார்பில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா ஆகியோர் கருத்துகளை வெளியிட்டனர்.

இருதரப்பு வாதப் பிரதிவாதங்களையும் செவிமடுத்த சபாநாயர் கரு ஜயசூரிய, தேவையாயின் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பேன் எனக் கூறியதுடன், தினேஷ் குணவர்தன சட்டமா அதிபர் தொடர்பில் கூறிய விடயமொன்றை அவைப் பதிவேட்டில் இருந்து நீக்குவதாகவும் குறிப்பிட்டார். (த)

## 17 இந்திய...

குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 17 பேர் நேற்று மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்றும் வடமராட்சிக் கிழக்குக் கடற்பரப்பில் 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

"தமிழகம், புதுச்சேரி காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 17 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்கள் தற்போது காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன. மலேரியா நோய்த் தொற்றுப் பரிசோதனைகளும் அவர்களிடம் மேற் கொள்ளப்படும்.

17 இந்திய மீனவர்களும் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் இன்று ஒப்படைக்கப்படுவர். அவர்கள் பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப் படுவர்" என்று கடற்படையினர் தெரிவித்தனர். (வ-101)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

**உதயதாரகையின் கால்பந்தாட்டம்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.


**மைக்கல் வி.க. கால்பந்தாட்டம்**

உரும்பிராய் சென். மைக்கல் வினையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.போதனாவைத்தியசாலை அணியை எதிர்த்து யங்கம் பன்ஸ் அணி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழ.க அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கொலின்ஸ் வி.க. கால்பந்தாட்டம்**

குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு புளுரொக்கற் அணியை எதிர்த்து நோத் செவின் ஸ்டார் அணியும் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு பேரல் போய்ஸ் அணியை எதிர்த்து எவ் செவின் சலஞ்சஸ் அணியும் மோதவுள்ளன.

(ம-23-422-108)




# போராடி வெற்றிபெற்றது யாழ். இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணி மோதியது.

ஆரம்பம் சென். பற்றிக்ஸுக்குச் சாதகமாகவே அமைந்தது. இதனால் அந்த அணி முதல் பாதியின் முடிவில் 37:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி கடும் போராட்டத்தை வெளிப்படுத்தியது. முடிவில் 58:56 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

(ம-23)

## கால்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

பிரதேச மட்ட கால்பந்தாட்டத்தை மேம்படுத்தும் வகையில் கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் கால்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

கால்பந்தாட்ட பயிற்றுனர்களுக்காக இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பங்குபற்ற விரும்புவோர் அதற்கான விண்ணப்படிவங்களை தங்கள் பிரிவு கிராம அலுவலர்களிடம் இருந்து பெற்று எதிர்வரும் 28 திகதிக்கு முன்னர் பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

(ம-108)



தேசிய மட்ட குத்துச் சண்டைப்போட்டியில் வித்தியானந்தாக் கல்லூரியை பிரதிநிதித்துவம்செய்து வெற்றி பெற்ற மாணவர்கள், மற்றும் தேசியமட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய, தகுதிபெற்ற மாணவர்கள் கல்லூரிச் சமூகத்தால் அண்மையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். கல்லூரியின் தலைமை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பயிற்சி ஆசிரியர், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(ம-7)

## இளைஞர் கழகங்களின் இறுதிநாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 29 ஆவது மாவட்ட விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை காலை முதல் தடகளத் தொடர் நடைபெறவுள்ளது. மாலை நடைபெறும் கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண பிரதேசஇளைஞர் கழக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச இளைஞர் கழக அணி மோதவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவர் எஸ்.காமராஜ் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிறுவர் விவகார மகளிர் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் மற்றும் கிருபா சாரதிப் பயிற்சியக இயக்குனர் த. கிருபாகரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம-108)

## பற்றிக்ஸை வென்றது இந்து.

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந் தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 42:14 என்று ஆதிக்கம் செலுத்தியது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி. அந்த அணி தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி முடிவில் 70:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(ம-23)



## உடுப்பிட்டி மகளிர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வட்மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கத் தொடரில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இரண்டாம் இடத்தையும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மூன்றாம் இடத்தையும் கைப்பற்றின.

(ம-422)



# தமிழ் வீராங்கனை பாணு திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டாரா?

யாழ்ப்பாணம், ஜூன் 23

18 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணித்தெரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வீராங்கனை பாபு பாணு திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டாரா என்பது தொடர்பில் வடக்குப் பகுதியில் உள்ள விளையாட்டு ஆர்வலர்கள் பலரும் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் கடந்த காலங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரி வீராங்கனை பாபு பாணு சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்தார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற அணிக்கு மூன்று வீராங்கனைகள் பங்குபற்றும் தேசியமட்டத் தொடரிலும் பாணுவின் ஆட்டம் மிகச் சிறப்பாக அமைந்தது. கொக்குவில் இந்துக் கல்லூரி அணி நான்காம் இடத்தைப் பிடித்தது. பாணுவின் துடிப்பான செயற்பாடு தேசிய அணியின் தேர்வாளர்களைக் கவர்ந்தது.

சீனாவில் நடைபெற்று முடிந்துள்ள 18 வயதுக்கு உட்பட்ட அணிக்கு மூன்று வீராங்கனைகள் பங்குபற்றும் தொடரில் இலங்கைத் தேசிய அணியில் பாணுவுக்கு இடம் கொடுக்கப்படும் என்று தெரிவுக்குழு வாய்மொழிமூல வாக்குறுதி அளித்தது என்று கொக்குவில் இந்துக் கல்லூரியின் தரப்பில் சொல்லப்படுகிறது. எனினும் பின்னர் பாணுவுக்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. தாம், கொக்குவில் இந்துக் கல்லூரியின் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ள பலமுறை முயற்சி மேற்கொண்டோம். தமது அரைபேசிக்கு பதிலளிக்காததை அடுத்து மாற்று வீராங்கனையை வைத்து அணி சீனா சென்று வந்துள்ளது என்று தற்போது பதில் வழங்கப்பட்டுள்ளது என்றவாறாக அறிய முடிகிறது.

இது தொடர்பில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டப் பயிற்சியாளருடனும், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளருடனும் தொடர்புகொண்டு கேட்ட போது, "பாணுவுக்கு இடம்கொடுக்கப்படும் என்று எமக்கு ஆரம்பத்தில் வாய்மொழி வாக்குறுதி வழங்கினர். இது தொடர்பில் பின்னர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தனர். எனினும் எவ்வித அறிவிப்பும் வழங்கப்படவில்லை. பாணு தெரிவாகவேண்டிய அணி சீனாவுக்கு சென்றுவந்த பின்னரேயே பாணு புறக்கணிக்கப்பட்டமை தெரியவந்தது. நாம் சம்மந்தப்பட்டவர்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி வினவியபோது, எமது கல்லூரி நிர்வாகத்துக்கு பலதுறை அழைப்பு மேற்கொள்ளப்பட்டது என்றும் அதற்கு நாம் பதில் வழங்காததால் இவ்வாறு ஓர் முடிவு மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது." எனத் தெரிவித்தனர்.

இந்த விவகாரம் வடக்கு மாகாண விளையாட்டு ஆர்வலர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஓர் வீராங்கனையின் தேசியக் கனவு ஓர் அலைபேசி அழைப்பிலா நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறான உத்தியோகபூர்வ முடிவுகள் தபால் மூலம் அனுகப்பட வேண்டியவை. எனில் சம்மந்தப்பட்டவர்கள் ஏன் இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இதுவே ஓர் பெரும்பான்மை இன வீராங்கனையாக இருந்திருந்தால் இவ்வாறு நடைபெற்றுருக்குமா. இதனால் பாணுவின் புறக்கணிப்பு திட்டமிட்ட மேற்கொள்ளப்பட்டதா என்றும் எண்ணத்தோன்றுகிறது என்று அவர்கள் தமது கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர். (ம)

# விடைபெற்றார் ரோஞ்சி



நியூசிலாந்து அணியின் இலக்குக் காப்பாளர் ரோஞ்சி பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெறும் முடிவை அறிவித்தார்.

36 வயதாகும் ரோஞ்கி முதலில் ஆஸ்திரேலியாவுக்காகவே பங்குபற்றினார். பின்னர் 2013ஆம் ஆண்டு தனது சொந்த நாடான நியூசிலாந்துக்குத் திரும்பினார். நியூசிலாந்துக்காக 4 டெஸ்ட் ஆட்டங்கள், 85 ஒருநாள் ஆட்டங்கள் 32 ரி-20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டம்வரை நியூசிலாந்து அணி முன்னேறியது. இந்தத் தொடரில் ரோஞ்சி முக்கிய பங்காற்றினார். இந்த நிலையில் தனது ஓய்வு முடிவை நேற்று அவர் அறிவித்தார். (ம)

# இந்தியா - மே.தீவுகள் தொடர் இன்று ஆரம்பம்

மேற்கிந்தியத் தீவுகள் - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இங்கிலாந்தில் நடைபெற்ற மினி உலகக்கிண்ணத் தொடரை அடுத்து இந்திய அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையே ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர், ஓர் ரி-20 ஆட்டம் என்பன நடைபெறவுள்ளன. ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் குயின்ஸ் பார்க் மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது. இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகும்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி விவரம் - கோல்டர் (தலைவர்), பிஸ்கூ, கார்ட்டர், சேஸ், கம்மின்ஸ், கோப், அல்சாரி ஜோசப், லூயிஸ், ஜேசன் மொகமட், நர்ஸ், பவல், ரோவ்மன் பொவேல், வில்லியம்ஸ்.

இந்திய அணி விவரம் - விராட் கோக்லி (தலைவர்), தவான், பண்ட், ரகானே, டோனி, யுவராஜ் சிங், கேதர் யாதவ், பாண்டியா, அஸ்வின், ஜடேஜா, சமி, உமேஸ் யாதவ், புவனேஸ்வர் குமார், குல்தீப் யாதவ், டினேஸ் கார்த்திக். (ம)



# தெ.ஆபிரிக்க அணியை வென்றது இங்கிலாந்து

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில் மிகமிக இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது இங்கிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் பந்துப்பரிமாற்றத்தை வீசினார் வில்லி. முதல் பந்திலேயே போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார் ஸ்மிட்ஸ். ஹென்றிக்ஸை பவிலியனுக்கு அனுப்பினார் வூட். மில்லரால் முடிந்தது வெறும் 9 ஓட்டங்கள். வில்லியர்ஸ் மற்றும் பெக்கார்டின் இணைந்து சிறிது தாக்கத்தை ஏற்படுத்தினர். இலக்குச் சரிவைக் கருத்தில்கொண்டு ஆரம்பத்தில் அதிகம் நிதானித்தனர். 15 பந்துப்பரிமாற்றங்களைத் தாண்டிய பின்னரும் இவர்களின் ஆட்டத்தில் மாற்றம் ஏற்படவில்லை. நிதானம் தொடர்ந்தது. இருவரும் அரைச்தம் கடந்தனர். 58 பந்துகளில் 65 ஓட்டங்களை சேர்த்தார் வில்லியர்ஸ். 52 பந்துகளில் 64 ஓட்டங்களைச் சேர்த்தார் பெக்கார்டின். 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகள் இழப்புக்கு 142 ஓட்டங்களைக் குவித்தது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் வூட் 2 இலக்குகளையும், வில்லி ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்துக்கு அதன் ஆரம்ப வீரர்களே வெற்றிக்கு வித்திட்டனர். 4 பந்துப் பரிமாற்றங்களில் 40 ஓட்டங்களைத் தொட்டது இங்கிலாந்து. 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் றோய். கேல்ஸ், பரிஸ்ரொளவ் இணைந்து ஆட்டத்தை தமது கைகளுக்குள் எடுத்துக்கொண்டனர். சிறு வாய்ப்பேனும் தென்னாபிரிக்காவுக்கு வழங்கப்படவில்லை. 29 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் பரிஸ்ரௌளவ்.



33 பந்துகள் மீதமிருக்க ஓர் இலக்கை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது இங்கிலாந்து. பரிஸ்ரௌளவ் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

# இரண்டாவது ரி-20 இன்று

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. எனவே இன்றைய ஆட்டத்திலும் இங்கிலாந்து வெற்றிபெற்றால் கிண்ணம் அந்த அணியிடம் செல்லும். இதனால் தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாய நிலை தென்னாபிரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

# கும்ளே தொடர்பான ருவிட்; நீக்கினார் விராட் கோக்லி

கும்ளே இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக தெரிவாகியபோது அவரை வாழ்த்தி வரவேற்று தான் பதிவுசெய்த கீச்சகப்பதிவை, தற்போது நீக்கியுள்ளார் இந்திய அணித்தலைவர் கோக்லி.

கோக்லியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை அடுத்து தனது பதவியில் இருந்து விலகியுள்ளார் கும்ளே. இதனால் அடுத்த தலைமைப் பயிற்சியாளரை தேடிவருகிறது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. இந்த நிலையில் கோக்லி தனது கீச்சகப்பதிவை நீக்கியமையானது கும்ளேயுடன் அவருக்கு கருத்து முரண்பாடு என்பதை விட கசப்புணர்வு உண்டு என்பதையே குறிக்கிறது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# புரோட் விளையாடுவது சந்தேகம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் புரோட் விளையாடுவது சந்தேகத்துக்கு உரிய ஒன்றாக மாறியுள்ளது.

இங்கிலாந்துக் கழகங்களுக்கு இடையில் தற்போது சில தொடர்கள் நடைபெற்று வருகின்றன. நாட்டிங்ஹாம்சைர் அணிக்காக புரோட் விளையாடி வருகிறார். நேற்றுமுன்தன ஆட்டமொன்றில் அவர் காயம் காரணமாக பாதியில் வெளியேறினார்.

தென்னாபிரிக்க அணி தற்போது இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. தற்போது நடைபெற்றுவரும் ரி-20 தொடரை அடுத்து ஜூலை 6ஆம் திகதி டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் புரோட் களமிறங்குவது சந்தேகத்துக்கு உரிய ஒன்றாக மாறியுள்ளது. சில வேளைகளில் அவர் ஒட்டுமொத்த ஆட்டங்களில் இருந்தும் விலகிவிட வாய்ப்புண்டு என்றும் கருதப்படுகிறது.

(ம)





பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் போர்த்துக்கல் அணியும், மெக்சிக்கோ அணியும் மோதின. வீரர்கள் அறிமுக நிகழ்வின் போது ஒவ்வொரு வீரர்களும் தம்முடன் ஓர் சிறுவனை அல்லது சிறுமியை அழைத்துவருவது வழக்கம். போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ அந்த வாய்ப்பை விசேட தேவையுடைய சிறுமி ஒருவருக்கு வழங்கியிருந்தார். இந்த ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் தற்போது மிகவும் வைரல். (ம)


## சாரதி தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு
இரவுநேரத்தில் பணிபுரியக்கூடிய சாரதி தேவை.
ஆர்வம் உள்ளவர்கள்
இன்று (23.06.2017) வெள்ளிக்கிழமை
நேரில் சமுகம் தரவும்.
நேரம் : மாலை 6.30 தொடக்கம் இரவு 08.00 மணி வரை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## உடனடி வேலை வாய்ப்பு

### கணக்கு பதிவாளர் தேவை

கணக்கியல் அறிவுள்ள (Book Keeping தெரிந்தவர்கள்)
பெண் பிள்ளைகள் மட்டும் உரிய ஆவணங்களுடன்
எதிர்வரும் 27.06.2017 செவ்வாய்க்கிழமைக்கு முன்னார்
வார நாள்களுகளில் நேரில் சமுகம் தரவும்.
டொபாஸ் மால் (பிரைவட்) லிமிட்டட்
# 195, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4743, 021 222 4933
topazagn@gmail.com


# குரங்கு, கிளி பிரச்சினையில் மலிங்க மீது விசாரணைகள்



விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவை குரங்கு என்று மறைமுகமாக வசைபாடியமையை அடுத்து மலிங்க மீது விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

மினி உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதிபெறாமல் போனதால் இலங்கை அணி வீரர்களின் உடல்தகுதியை விமர்சித்து, அவர்களின் கிரிக்கெட் ஆயுள் குறித்து கேள்வி எழுப்பினார் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர. அவர், "ஐ.பி.எல். தொடரில் 4 பந்துப் பரிமாற்றங்கள் வீசுவதற்கு தங்கள் உடல் தகுதியை உயர்த்திக்கொள்கின்றனர். இவர்களுக்கு நாட்டுக்காக விளையாடப் பிடிக்கவில்லை, பணத்திற்காக ஐ.பி.எல். கிரிக்கெட்தான் இவர்களுக்கு பிடித்துள்ளது" என்று தெரிவித்தார்.

ஜயசேகரவின் கருத்துக்கு தொலைக்காட்சி அலைவரிசைக்கு வழங்கிய செவ்வியில் மலிங்க மறைமுகமாக பதிலடி கொடுத்தார். "நாற்காலியை அலங் கரித்துக் கொண்டிருப்பவர்களின் விமர்சனங்கள் பற்றிக் கவலையில்லை. குரங்குக்கு கிளியின் கூடு பற்றி என்ன தெரியும்? கிளியின் கூட்டுக்குள் சென்ற குரங்கு அதைப் பற்றி பேசுவது போல் உள்ளது" என்று மலிங்க தெரிவித்தார். ஜெயசேகராவுக்கு கிரிக்கெட் பற்றி என்ன தெரியும் என்பதை இந்த உருவகம் மூலம் சாட சிக்கல் எழுந்தது. இதை யடுத்தே மலிங்க மீது விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

(ம)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
2018 ஜனவரி பரீட்சைக்கான
aat (Sri Lanka)
(AA1, AA2, AA3)
*Qualification -G.C.E. O/L 6 Passes*
Medium - Tamil & English
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149

School Addmission
வடமாகாணத்தில் உள்ள பாடசாலை Addmission லுக்கான விண்ணப்பங்கள் on line மூலம் செய்து கொடுக்கப்ப்டும்.
Sun Travels
கைலாச பிள்ளையார் கோயிலடி,
கோயில் வீதி, யாழ்ப்பாணம். 077 936 1427

கணித வகுப்புகள்
தரம் 6 11 வரையான மாணவர்களுக்கான கணிதபாடம் (தமிழ்மொழிமூலம் ஆங்கில மொழிமூலமாக) மிகவும்சிறந்த முறையில் (தனியாகவோ/குழுவாகவோ) வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு-077 983 8866


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.05.2017 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு

**திருமதி அனுராதா**
**சுரபாஸ்கரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.06.2017 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (24.06.2017) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**"துர்க்காபுரம்"**
**ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலயம்**
**படித்த மகளிர் திட்டம்,**
**மிருசுவில்.**

குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.